Registered as a News Paper
பக்கம் – 16

# ஈழநாதம்

விலை: 12.00

வெள்ளிநாதம் Weekly


நாதம்–14 வெள்ளி–05 28–03 ஏப்பிரல் 2003

## குடாரப்பில் 26.03.2000





## யாழ்ப்பாணம்:



## சிறிலங்காவை மீட்பது அல்லது...

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி 28.03.2003

# போர் மேகங்களிடையே சரணாலயம் தேடும் சமாதானப் புறாக்கள்...

**எதனை** சர்வதேச சமூகமும் ஐக்கியநாடுகள் மன்றமும் நடக்கக்கூடாது என ஆத்மார்க்கமாகவும் உணர்வு பூர்வமாகவும் நினைத்து அதற்கான முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டுக்கொண்டு இருந்ததோ அதுவே நடந்து கொண்டிருக்கின்றது. மேலாதிக்க மனோபாமும், ஆக்கிரமிப்பு வெறியும், மனிதநேயம் மற்றும் சர்வதேசத்தின் அபிலாசைகள், போன்றவற்றை நிராகரித்து பேரழிவுகளுக்கான வழிமுறைகளையே மேற்கொள்ள வைக்கும் என்ற கோட்பாடு மீண்டும் ஒரு முறை நிரூபிக்கப்பட்டுள்ளது.

போருக்கான காரணங்கள், போரை நியாயப்படுத்தும் நோக்குடன் எவ்வாறு ஆதாரபூர்வமாக கூறப்பட்டாலும் அது ஆக்கபூர்வமான ஒன்றாகக்கருதமுடியாது. போர் என்பது அனர்த்தங்களையும் அவலங்களையும் மட்டுமே மனித குலத்திற்கும், உலகின் இயற்கை வளத்திற்கும் வழங்கும் என்பதில் இருவேறு கருத்து இருக்கவே முடியாது.

"யார் மீது யார் போரை வலிந்து திணிக்க முயல்கிறானோ அவனை மனித குலத்தின் எதிரியாகவே கருதமுடியும்" கருதவேண்டும் என்கிறார் பிரஞ்சுக் கலைஞர் ஒருவர். புரிந்துணர்வும் மனித சமூகம் மீதான நம்பிக்கையும் சமாதானம்- அமைதி ஆகியவற்றின் மீதான பற்றார்வமும் தொலைநோக்குடன் மனித உரிமைகளை மதித்து அங்கீகரிக்கும் இயல்பும், பரஸ்பர விட்டுக்கொடுப்பும் எல்லாவற்றிலும் மேலாக ஆதிக்க வெறியற்ற தன்நம்பிகையின் ஆளுமையும் ஆட்சியில் இருப்ப வர்களிடம் (அவர்கள் எந்த நாட்டவர்களாக இருந்தாலும் சரி) இல்லாமல் இருக்குமாயின் அது அவர்களின் நாட்டுக்கு மட்டுமல்ல சர்வதேசத்திற்கும் நாசம் விளைவிக்கும் என்பதை உலக வரலாறு எத்தனையோ நபர்கள் மூலம், அனுபவரீதியில் உணரவைத்தேவந்துள்ளது.

ஆனால் மேலாதிக்க- வல்லாதிக்க சக்திகளாக தங்களை கற்பிதம் செய்துகொண்டு உலகமே தங்களின் இஸ்ரப்படி நடக்க வேண்டும் என நிர்ப்பந்தம் செய்கின்ற எவரையும் மனிதத்தை அவமதித்தவர்களாகவே வரலாறு அடையாளப்படுத்தி வந்துள்ளதை புரியாதவர்கள் இன்னமும் பலர் உலகத்தை நெறிப்படுத்துவோர்கள். தாங்கள் தான் என வல்லாண்மை பேசிவருவதுதான் உலகின் இன்றைய பெரும் ஆபத்தாகவும், மனிதகுலத்தின் அவமானமாகவும் உள்ளது. ஈராக்மீதான அமெரிக்காவினதும் அதனது தோழமை சக்திகளதும் யுத்த சன்னத்தை ஆரோக்கியமான உலக சமூகம் இப்படித்தான் பார்க்கிறது. இந்த யுத்தத்திற்கான காரணிகள் என அமெரிக்கா கூறும் அம்சங்களை நியாய நோக்குள்ள எவருமே நிராகரிக்கவே செய்வர்.

ஆபத்தை ஏற்படுத்தும் இரசாயன - உயிரியல் மற்றும் அணுஆயுதங்களை ஈராக் அழிக்க வேண்டும் என இத்தகைய தன்மை கொண்ட அழிவாயுதங்களை உற்பத்தி செய்யாத, உலகிற்குப் பரப்பாத, உலகில் பயன்படுத்தி பேரழிவுகளை ஏற்படுத்தியிருக்காத, இன்னமும் அவற்றை பேணிப்பாதுகாத்து வைக்காத ஆதிக்க-மற்றும் ஆக்கிரமிப்பு உணர்வற்ற ஒரு நாடு சொல்லியிருந்தால் அதில் நியாயம் இருக்கும். அதற்கு கட்டுப்பட வேண்டிய எண்ணமும் மற்றவர்களுக்கும் இருக்கும். ஆனால் அமெரிக்கா இதனை சொல்லுவதுதான் அடாவடித்தன மானதாகும்.

சிலங்காவின் ஆக்கிரமிப்பு சக்திகள் விடுதலைப் புலிகளின் ஆயுதங்களைக் கைவிடவேண்டும் அல்லது அவற்றை களைய வேண்டும் என நிர்ப்பந்திப்பது போன்றதே இதுவும்.

இலங்கின் வல்லாதிக்கச் சக்திகள் என்ற பிரச்சினைக்குரிய அயல் நாடுகள் மீதும், வலுவற்ற நாடுகள் மீதும், இராணுவ, பொருளாதார மற்றும் ஏனைய அறிவியல் வளங்களைப் பயன்படுத்தி மிக நுட்பமாகவும், இராஜதந்திர மூலோபாயத் துடனும் ஆதிக்கம் செலுத்த முற்படுவதென்பது பெரும் நாடுகளின் இயல்பாகவே உள்ளது.

இதற்கு அவர்கள் அமைதி நடவடிகை என்றும் சமாதான செயற்பாடென்றும் உலகத்தை அழிவில் இருந்து காப்பாற்றுவதற்கான யுத்தமென்றும் (சந்திரிகாவின் சமாதானத்திற்கான யுத்த கோட்பாட்டை இங்கு நினைவிற் கொள்ளவேண்டும்..) நியாயப் பிரகடனம் செய்வதுதான் உலக சமூகத்திற்கு 'காதிலைபூச்சுற்றும்' வேலையாகும்.

இன்றைய ஈராக்மீதான தாக்குதலும் அமெரிக்காவும் அதன் தோழமைச் சக்திகளும் கூறும் காரணங்களும் இத் தகையதே.

இப்படிக் கூறும் போது ஈராக் எந்தத் தவறுமே செய்யாத முழுமையான யோக்கியமான நிர்வாகத்தைக் கொண்டுள்ளது என நாம் நியாயப்படுத்துகிறோம் என எவரும் அர்த்தம் கொள்ளக்கூடாது.

அந்த நாடும் சில வரலாற்றுத் தவறுகளைச் செய்தேயுள்ளது. அது பற்றி அலச வேண்டிய தருனம் இதுவல்ல.

ஆபத்துமிக்க ஆயுதங்களை ஈராக்கிடமிருந்து களையவோ, அழிக்கவோ அமெரிக்காவிடம் பொறுப்பை உலக சமூகம் ஒப்படைக்கவில்லை. அப்படி அவற்றை அழிக்க வேண்டும் என்றாலும் அதனை எப்படி யார் மூலம் அணுகி செயற்படுத்துவது என ஆலோசிப்பதற்கும், நடை முறைப்படுத்துவதற்கும் இராஜதந்திர வழிமுறைகளை வகுக்க ஐக்கிய நாடுகள் சபை ஒன்றும் இருகவே செய்கிறது.

ஆனால் சர்வதேச பொலிஸ்காரனாக தன்னைத் தானே நினைத்துக்கொண்டிருக்கும் அமெரிக்காவுக்கு அதற்கான பொறுமைஇல்லை. ஐ.நா. சபையை தன் சொல்லுக்கும் சுட்டு விரல் அசைவிற்கும் ஏற்ப இயங்கும் ஒன்றாகவே அமெரிக்கா இதுவரை எண்ணி வந்துள்ளது என்பதை ஈராக் பிரச்சினையில்




ஐ.நா.வின் சம்மதத்தைத் பெறாது, அதன் பொறுப்பை உதாசீனம் செய்ததன் மூலம் உலகம் உணர்ந்து கொண்டுள்ளது.

அமெரிக்காவை கட்டுப்படுத்தும் வலிமையற்ற ஐ.நா.வின் பலவீனம் வெளிப்படையாகத் தெரிந்துவிட்ட நிலையில் அதன் எதிர்காலச் செயற்பாடுகள்-மற்றும் நம்பகத்தன்மை கேள்விக்குறியாகியுள்ளது.

இந்த அர்த்தமற்ற, அடாவடித்தனமான பேரழிவை உண்டு பண்ணும் மனிதகுலத்தை அவமதித்து, நிராகரிக்கும் யுத்தத்தை நிறுத்த ஐ.நா.வால் முடியவில்லை.... ஐ.நாவின் கோட்பாடுகளை, விதிமுறைகளை புறந்தள்ளி, உலக சமூகத்தின் போருக்கெதிரான குரலை தூசாகக் கருதி, தன்னிச்சையாகச் செயற்படும் அமெரிக்காவுக்கும் அதன் தோழமை நாடுகளுக்கும் எதிராக உடனடிநடவடிக்கைகளை எடுக்க அந்த நாடுகளை ஐ.நா.சபையில் இருந்து தற்காலிகமாகவேனும் புறந்தள்ளி வைக்க அதற்கும் அதில் உள்ள ஏனைய அங்கத்துவ நாடுகளுக்கும் இயலவில்லை என்றால் அந்த 'சபை' ஏன் என்ற கேள்வியும் எழவேசெய்கிறது.

இப்படி ஒரு பெரும் அமைப்பை தனது சுய ஆதிக்கப் போக்கிற்கு ப.:.ியாக்க துணிந்ததன் மூலம் உலக மன்றத்தையும், அதன் சமாதான-அமைதி நோக்குடன் கூடிய உறுப்பு நாடுகளையும் அமெரிக்கா அவமதித்துள்ளதாகவே உலகின் குரல்கள் ஒலிக்கத் தொடங்கியுள்ளது.

'ஈராக்பிரச்சினைக்கு இராஜதந்திர ரீதியில் தீர்வு காண்பதை அமெரிக்கா குழப்பியுள்ளது. இப்பிரச்சினைக்கு சமாதான தீர்வு காண்பதற்கான சர்வதேச சட்டத்திற்கமைவான இணக்கப்பாடுகளை உருவாக்குவதற்கான பாதை குழப்பப் பட்டுள்ளது' -என்று வத்திக்கானில் இருந்து வெளியான பாப்பரசரின் செய்தி தெரிவிக்கிறது.

அமெரிக்கா, பிரிட்டன் உட்பட உலகின் சகல நாடுகளிலும் அமெரிக்காவின் போர் நடவடிக்கைகளுக்கு கண்டனமும், எதிர்ப்பும் கடுமையாகத் தெரிவிக்கப்பட்டுவருகிறது.

இந்தியாவில் பல இடங்களிலும் நகரங்களிலும் அமெரிக்க நடவடிக்கைகளுக்கு கடுமையான விமர்சனங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

சீனா, ரஷ்சியா, பிரான்ஸ், ஜேர்மனி போன்ற நாடுகள் இப்பிரச்சினை குறித்து அமெரிக்காவுக்கு எதிரான நிலைப்பாட்டை தீவிரமாகவே எடுத்துள்ளன.

கொழும்பில் அமெரிக்க தூதரகத்தின் முன்னால் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றுள்ளது.

ஐ.நா. செயலர் கோபி அனான் அமெரிக்காவின் இந்த அபத்த நடவடிக்கையால் அதிர்ந்து போயுள்ளார்.

'ஈராக்'கில் 'சதாம்' என்ற தனிநபரை ஆட்சியில் இருந்து அகற்ற அல்லது அழிக்க, அந்த நாட்டையே தனது பேரழிவை ஏற்படுத்தும் நவீன ஆயுதபலத்தையும், இராணுவவளத்தையும் பயன்படுத்தி அமெரிக்கா துவம்சம் செய்யத்தொடங்கியுள்ளது.

அங்குள்ள மக்களின் இயல்பு வாழ்க்கை அழிந்து போய்க்கொண்டிருக்கிறது. அப்பாவி மக்கள் பெருமளவில் கொல்லப்படுகிறார்கள். பாக்தாத் நகர் எரிகிறது. அந்த வளம் மிக்க தேசத்தை நிர்மூலமாக்க பேரழிவினை ஏற்படுத்தும் தனது ஆயுத வளத்தை பயன்படுத்தும், அமெரிக்கா ஈராக்கின் பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களை அழிக்கத்தான் இந்த யுத்தத்தை நடத்துவதாக கூறுவதை உலகம் ஏற்றுக்கொள்ளவேண்டும் என நிர்ப்பந்திக்கிறது.

ஈராக்கின் கட்டடங்கள் எரியும் புகை மண்டலத்தின் ஊடாக, அமெரிக்கா இரட்டை மாடிக்கட்டடம் எரியும் காட்சி தெரியவே செய்கிறது.

பிரிட்டிஷ், மற்றும் உலகப் பத்திரிகைகளில் அமெரிக்கா அதிபர் ஜோர்ச் புஷ்சின் படங்களில்அவரை 'ஹிட்லர்' மீசையுடன், தோற்றம் காட்ட வைத்துள்ளதன் மூலம் உலக சமூகத்திற்கு எதனையோ உண்ணிப்பாக சுட்டிக்காட்ட முயன்றுள்ளார்கள்.

நாளையோ அல்லது மறுநாளோ 'புஷ்'ஷின் உருவத்தை பின்லேடனின் சாயலில் ஒரு கேலிச்சித்திரம் ஓவியர் வரைந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏனென்றால் உலகம் அதிகம் புஷ்ஷின் செயற்பாடுகளை அப்படித்தான் பார்க்கத் தக்கதாக புஷ்ஷே செயற்பட்டுவருகிறார்.

சதாம் என்ற தனி மனிதனை, அவரின் ஆட்சியை மாற்றுவதற்கும், அழிப்பதற்கும் ஒரு நாட்டையே போர்க்களமாக்கி அழிப்பதென்பது எந்த வகையில் நியமென்பதுதான் புரியாத புதிராக உள்ளது.

எல்லாவற்றையும் ஈராக்கின் அழிவுகளை மறைத்து அமெரிக்க படைகள் மனி நேயத்துடன் செயற்படுவதாகவும் ஈராக்படையினர் பெரும் தொகையில் சரணடைவதாகவும் அவர்களை மனிதாபிமான ரீதியில் நடத்துவதாகவும் அமெரிக்காவும்அதன் தோழமை நாடுகளும் பிரச்சார ரீதியிலான உளவியல் யுத்தமொன்றையும் அச்சு- மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் மூலம் செய்து வருவதன் மூலம் ஆப்கானில் மேற்கொண்டது போன்று உண்மைகளை மூடிமறைக்க பிரயத்தனம் செய்வதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தப் போருக்கான அமெரிக்காவின் மூலோபாய நோக்கிலான காரணங்களை-வெளியே அது சொல்லிவரும் காரணங்களையும் உலகம் மிக நன்றாகவே அறியும். ஆகவே வரட்டுத்தனமான பிரசாரங்களோ, பிரகடணங்களோ நியாயப் படுத்தல்களோ, உலக சமூகத்தின் முன் எடுபடும் என எவரும் நினைத்தால் அது அவர்களின் அறியாமையே ஆகும்.

எதுவானாலும் இந்த போர் உலகினை பேராபத்திற்கு இட்டுச் செல்லும் போர் என்பதில் ஐயம் இல்லை. நாடுகளுக்கும் இனங்களுக்கும் இடையிலான அரசியல் மற்றும் ராஜீகரீதிலான பிரச்சினைகளுக்கு 'தீர்வு' காண போர் மட்டும்தான் ஒரே மார்க்கம் என எவரும் கருதினால் அவருக்கு இராஜதந்திர மூலோபாய அறிவில்லை என்பதே அர்த்தமாகிவிடும். அதேவேளை வலிந்து திணிக்கப்படும் போருக்கு, அடக்குமுறைக்கு முகம் கொடுக்கத் தவறுபவனும் கோழையாகிவிடும் பாவத்தை புரிந்தவனாகி விடுவான். அநியாயத்திற்கு அடங்கி வாழ்வதிலும், எதிர்கொண்டு அழிவது கௌரவமானது.

சதாம்ஹூசைன் பக்கமுள்ள தவறுகள் எதுவானாலும் அவர் அமெரிக்காவின் அணுகுமுறைக்கு எதிராக இரண்டாவது நிலைப்பாட்டைத்தான் எடுத்துள்ளார் என்றே கூறவேண்டும்.

வேறுவழிகளில் தேர்வு செய்யக்கூடிய நிலையில் இருந்தும் போரை புஷ் தேர்வு செய்தமையானது ஒரு வலாற்றுத் தவறாகவே கருதப் படுகிறது. இதனையே உலகம் இப்போது எதிரொலிக்கத் தொடங்கியுள்ளது.

மூன்று நாட்களில் சதாமைஅழிக்க- ஈராக்கை கைப்பற்ற அமெரிக்கா திட்டமிட்டு அதற்கான சூளுரைப்பையும் செய்திருந்தது. ஒரு வாரம் கடந்து போகும் நிலையில்.... போர் முடிய காலதாமதம் ஆகும் என அறிவிப்பு வெளியாகியுள்ளது- இது மனித அவலம் தொடரப்போகிறது என்பதற்கான எச்சரிக்கையாகும்.

'பின்லேடனை' யும் அவரது 'அல்கெய்தா' அமைப்பையும் அழிக்க ஆப்கானில் போரைத் தொடங்கி அதனை அழிவுறச் செய்து ஆக்கிரமித்து, ஒரு பொம்மை யாட்சியை ஏற்படுத்தும் தனது இலக்கை மட்டுமே அமெரிக்கா எட்டியது....

இதே போலத்தான் ஈராக்கின் நிலையும் மாறுமா?

கடவுளின் கட்டளையை பின்லேடன் நிறைவேற்றுவதாகக் கூறியதும்....

கடவுளின் ஆசியுடன் யுத்ததை எதிர் கொள்ளப் போவதாக சதாம் கூறுவதும்...

கடவுளின் ஆணையை நிறவேற்றுவதாகக் கூறும் இவர்களை அழிப்பதன் மூலம் சர்வதேச பயங்கரவாதத்திற்கெதிரான நடவடிக்கை ஒன்றை மேற்கொள்வதாக புஷ் கூறுவதும்....

மனிதநேயத்திற்கும் மனோதர்மத்திற்கும் எதிரான சுயநலம், பலிவாங்கும் தன்மையும் கொண்ட சர்வதேச மேலாதிக்க சக்திகளாகவே இவர்களை இனம் காட்டும்.

பாத்தாத் எரிந்து புகைகிறது.

உலகம் அச்சத்தில் நடுங்குகிறது...

சமாதான சக்திகள் ஏங்கிப்போய்நிற்கின்றன...ஐக்கிய நாடுகள் சபை செயலற்று கூனிப்போயுள்ளது.

போரில் சிக்குண்ட அப்பாவி மக்களின் அவல ஒலியும், மரண ஓலமும் எரியும் தேசத்தின் புகைமண்டலங்களுள் சங்கமமாகின்றது...

மனிதநேயமும், மானுட கலாசாரமும் அவமானத்தால் தலைகவிழ்ந்து நிற்கின்றது...

ஏவுகணைகளுக்கும், பீரங்கித் தாக்குதலுக்கும் தப்பி-எஞ்சிய சமாதானப் புறாக்கள் அழியும் மானுடத்திற்கான தமது அஞ்சலியை செலுத்தியபடி சரணாலயம் தேடிப்பறக்கின்றன.

துன்பத்தின் சாரம், அனுபவம். - ஸர்ஆர்த்தர்ஸிட்னி

# சிறிலங்காவை மீட்பது அல்லது தொலைப்பது



## நிலாந்தன்

**ஆறாவது** கட்டப்பேச்சுக்கள் முடிந்து விட்டன. உறங்கும் எரிமலை மீது கட்டப்பட்ட ஒரு நகரத்தில் எதிர்பார்ப்புக்களுக்கு மாறாக அதிகம் திருப்பங்களின்றி அவை முடிந்திருக்கின்றன.

சர்வதேசக் கடலில் புலிகளின் கப்பலை மூழ்கடித்தவர்களின் முகத்திலடித் தாற் போல புலிகள் ஜப்பானுக்குப் போயினர் என்ற ஒரு முக்கியத்துவத்தைத் தவிர மற்றெல்லா விதங்களிலும் வளைகுடா யுத்தத்தின் பின்னணியில் பேச்சுக்கள் பொலிவிழந்து போயின என்பதே யதார்த்தம்.

இனியும் சமாதான முயற்சிகளின் மீதான உலகின் கவனம் ஒப்பீட்டளவில் குறைந்து கொண்டு போவதற்கான வாய்ப்புக்களே அதிகம் காணப்படுகின்றன.

அப்படிப் பார்த்தால் சமாதானத்தின் எதிரிகள் இனி அதிகம் உசாராகவும் சுறுசுறுப்பாகவும் நிலைமைகளைக் கையாளக்கூடியதாயிருக்கும்.

அதாவது சமாதானம் செய்பவர்களுக்கு ஒப்பீட்டளவில் பொறுப்புக்கள் அதிகரிக்கப்போகின்றன. வளைகுடா யுத்தம் முடியும் வரையிலும் சமாதானத்தைப் பாதுகாப்பது சிரமசாத்தியமாகவே இருக்கப்போகிறது.

ஆறாவது கட்டப்பேச்சுக்களின் போது சமாதானத்துக்கான நிதி விவகாரங்களைப் பொறுத்தவரை சில திட்டவட்டமான முடிவுகள் எடுக்கப்படலாம் என்றொரு எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால் சமாதானத்துக்கான நிதி புரளும் வாய்ப்புக்கள் உடனடியாக இல்லைப் போலத் தெரிகிறது.

அதற்காக இன்னும் சில மாதங்களுக்காயினும் காத்திருக்க வேண்டும்.

வரும் யூன் மாதம் ஜப்பானில் நடக்கவிருக்கும் உதவி வழங்கும் நாடுகளின் மகாநாடே இதைத் தீர்மானிக்கப்போகிறது.

அதுவும் வளைகுடா யுத்தத்தின் போக்கில் தான் தங்கியிருக்கிறது.

அதுவரையிலும் சம்பந்தப்பட்ட தரப்பினரைத் தாக்காட்டும் முயற்சிகளே அதிகம் இடம்பெறக்கூடும்.



ஏற்கனவே ஓராண்டு தாக்காட்டியாயிற்று. இனியும் சில நிச்சயமற்ற மாதங்களுக்கு தாக்காட்டப் போகிறார்கள்.

இதில் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது- ஆறாங்கட்டப் பேச்சுக்களின் முடிவில், ஜப்பானின் சிறப்புத்தூதுவர் அகாஷி கூறியவை.

“ நத்தார்தாத்தா வானிலிருந்து இறங்கி வந்து பரிசு மழைகளை அன்பளிப்புக்களை வெறுமனே அள்ளித்தருவது போன்ற விடயமல்ல நன்கொடை வழங்கும் நாடுகளின் கூட்டமும் வழங்கப்படும் நன்கொடையும்.” என்று அகஷி கூறியுள்ளார்.

இது சமாதானத்தின் கனிகளைக் காட்டாமல் நன்கொடை கிடைக்காது என்ற அர்த்தத்திலாய் இருக்கலாம்.

ஆனால் இங்கு வெளியில் சொல்லப் படாத கொடுமையான யதார்த்தம் ஒன்று உண்டு.

உதவி வழங்கும் எந்தவொரு நாடும் இரக்கத்தின் பேரில் உதவிகளைத்தருவதில்லை. உதவி தருவதன் மூலமே அவை வறிய நாடுகளை தம்மில் தங்கியிருக்கச் செய்து விடுகின்றன. இதன் மூலம் வறியநாடுகளின் போட்டிமிகக் குறைந்த சந்தைகளும் ஏனைய வளங்களும் அவர்களுக்கு வரையறையின்றித் திறந்துவிடப்படுகின்றன.

இப்படிப்பார்த்தால் நன்கொடை எனப் படுவது பிரதிபலன் எதிர்பாராத வெறும் தானம் அல்ல. அது அதன் சரியான அர்த்தத்தில் ஒருவகை முதலீடே. அல்லது நிதிப்பொறி, அல்லது கடன்பொறி என்று கூடச் சொல்லலாம். அகாஷி இதை ஏன் நத்தார்தாத்தாவுடன் ஒப்பிட்டாரோ தெரியவில்லை. ஆனால் “சமாதான முன்நகர்வும் சர்வதேச சமூகத்தின் உதவியும ஒன்றில் ஒன்று நேரடியாகத் தங்கியுள்ளன” என்று அவர் கூறியதற்கு அழுத்தம் கொடுக்க, மேற்படி உதாரணத்தை பயன்படுத்தியிருக்கலாம்.

கொழும்புக்கு உதவி வழங்கும் போதெல்லாம் சமாதானத்தை ஒரு முன்நிபந்தனையாகவைப்பது என்பது கடந்த சில தசாப்தங்களாக ஒரு சடங்கு போலாகிவிட்டது.

ஆனால் இம்முறை சர்வதேச சமூகம் புலிகளுக்கும் பதில் கூறவேண்டிய ஒரு நிலைமை ஒப்பீட்டளவில் வளர்ந்துவரும் ஒரு பின்னணியில் இப்படி நிதியுதவிகளை சமாதானத்துடன் இணைப்பது என்பது அதிகபட்சம் நடைமுறைச்சாத்தியமான ஒன்றாகக் காணப்படுகிறது.

இதன்படி, யூனில் கிடைக்கபோகும் உதவிகளைப் பற்றி ஏற்கனவே ரணிலுக்கு சில வாக்குறுதிகள் தரப்பட்டிருப்பதாக கொழும்பில் பலமாக நம்பப்படுகிறது.

அதனால்தான் அவர் முன்புஅடிக்கடி கூறிவந்தார் இவ்வாண்டின் நடுப்பகுதியோடு சமாதானம் திரும்பிச்செல்லவியலாத ஒரு கட்டத்துக்குப் போய்விடும் என்று.

இதையொட்டி அவரிடம் அதாவது ரணில் - மொறகொட - பீரிஸ் அரசிடம் ஒரு பெரிய சித்திரமே இருப்பது போலத் தெரிகிறது.

இதற்கு அவர்கள் சூட்டியிருக்கும் பெயர் Regaining Srilanka - சிறிலங்காவை மீளப் பெறுதல்.

இதை அதன் நேரடி மொழிபெயர்ப்புக் கூடாகப்பார்க்காமல் அதன் நடைமுறை அர்த்தத்தில் பார்த்தோமாயிருந்தால் சிறிலங்காவை மீள உருவாக்குதல்- அதாவது சிறிலங்காவை மீள இணைத்து ஒரு தேசமாக உருவாக்குதல் என்று வரும்.

அப்படியென்றால் என்ன?

இப்பொழுது சிறிலங்கா நடைமுறையில் இரண்டு தேசங்களாகப் பிரிந்து கிடக்கிறது.

அரசின் நிர்வாகம், புலிகளின் நிர்வாகம் என்று இரண்டு தலைநகரங்கள் உண்டு. அதாவது இலங்கைத் தீவு யதார்த்தத்தில் இரண்டு அரசுகளையுடைய ஒரு தீவு.

இந்த இரண்டு அரசுகளையும் ஒன்றாக்க வேண்டும். பிரிந்து நிற்கும் தமிழர்களை சிறிலங்கர்கள் ஆக்க வேண்டும். இதுதான் சிறிலங்காவை மீளப்பெறுதல் என்பது.

இதை அவர்கள் அரசியல்-பொருளாதார தளங்களில், பிராந்திய மற்றும் சர்வதேச சக்திகளை சமயோசிதமாகக் கையாள்வதன் மூலம் சாதிக்கலாம் என்று நம்புகிறார்கள்.

அரசியல் தளத்தில் - தமிழர்கள் ஒப்புக்கொள்ளக் கூடிய ஒரு அதிகாரப் பகிர்வு அலகை உருவாக்குவது. இதில் உருவாக்கப் படும் அலகை தமிழர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்தால் சமாதானத்தின் பாதுகாவலராய் இருக்கும் மேற்கு நாடுகளுக்கூடாக அவர்களின் மீது அழுத்தத்தைப் பிரயோகிப்பது.


இத்தகைய அர்த்தத்திலேயே ரணில் சமாதானத்தைப் பற்றிக் கதைக்கும் போதெல்லாம் அதற்குள்ள “சர்வதேச பாதுகாப்பு வலைப்பின்னல்” ஒன்றைப் பற்றி அழுத்திக் கூறி வருகிறார்.

மற்றது- பொருளாதாரத் தளத்தில் முழு இலங்கைத் தீவையும் ஒரே பொருளாதார அலகாக்கி விடுவது. அதை ஆகக்கூடிய பட்சம் இலத்திரன் மயப்படுத்தி அந்த “எலக்ரோனிக் லங்காவை” பூகோள வர்த்தகத்தில் ஒரு பிரிக்கப்படவியலாத அலகாக்கி விடுவது.

இப்படி லங்காவை இலத்திரன் மயப் படுத்துவதில் இந்தியாவையும் சம்பந்தப்படுத்தி இந்தியாவின் ஆந்திர மாநிலத்தின் ஹைதராபாத் முன்னுதாரணத்தைப்பின்பற்றுவது.

இதன் மூலம் முழு இலங் கைத்தீவையும் தென்னிந்தியச் சந்தைக்குத் திறந்து விடுவது. இதில் உத்தேச சேது பாலத்திட்டமும் அடங்கும்.

இந்தப் பொருளாதார வியூகத்தில் பிரிவினையின் கருக்கள் படிப்படியாகக் கரைந்து போய்விடும் என்று அவர்கள் நம்புகிறார்கள்.



வரும் யூனில் ஜப்பானில் கிடைக்கவிருக்கும் நிதியுதவிகள் இந்த வியூகத்தின் ஒரு பகுதியே.

முழு அளவிலான நீண்ட கால நோக்கிலான இந்தச் சித்திரம் தான் ரணிலின் சமாதானத்துக்கான வரைபடமும்.

சமாதானத்தை அடித்தளமாக்கி அதன் மீது சிறிலங்காவை மீளப்பெறுவது.

இதில் தமிழர்களைப் பொறுத்தவரை முதலில் இடறலாய் இருப்பது சிங்களத் தலைவர்கள். இப்பொழுதும் சிறிலங்கா என்ற தலைப்பின் கீழேயே சிந்திக்கிறார்கள் என்பது.

அதிகாரப்பகிர்வு என்று சிங்கள உயர் குழாம் கருதுவது அதன் இறுதிநிலையில் பிளவுபடாத ஒரு முழுச்சிறிலங்காவை உருவாக்குவது பற்றியே.

அவ்வாறாயின் இச்சிறிய அழகிய தீவை அவர்கள் தமிழர்களோடு சேர்ந்து பங்கிடத் தயாரில்லையா?

இதுவரையிலும் அப்படிப் பங்கிடத் தயாராயில்லாத சிங்கள உயர் குழாமே இன்று சிறிலங்கா இப்படி மீட்க்கப்பட வேண்டிய ஒரு நிலைக்கு வீழ்ச்சியுறக் காரணம்.

ரணில் அந்த உயர் குழாத்திலிருந்து வந்தவர்.

அவரது அரசியலும் அந்த உயர் குழாத்தின் அதே சூதான அரசியலின் தொடர்ச்சியாக அமைந்து விடுமா?

அதோடு, சமாதானத்தை அவர் சமாதானம் அல்லாத நோக்கங்களுக்காகவும் பயன்படுத்தமாட்டார் என்பதற்கு உத்தரவாதங்கள் குறைவு என்று சில படித்த தமிழர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். எவ்வாறெனில் - சிறிலங்காவை மீளப்பெறும் இத்திட்டத்தின் பிரகாரம் மேற்குநாடுகளையும். இந்தியாவையும் வசப்படுத்தும் விதத்தில் அவர் இலங்கைத்தீவை நிபந்தனைகள் எதுவும் இன்றித் திறந்துவிட்டுள்ளார். அதேசமயம் புலிகளுடனும் குறிப்பிடத்தக்க அளவுக்கு இணங்கி வருபவர் போலக்காணப்படுகின்றார்.

ஆனால் ஒரு முக்கிய முனையில் மட்டும் அவர் இணக்கத்துக்கு வரத்தயாரில்லை போலக் காணப்படுகின்றார்.

அதுதான் சந்திரிகாவுடனான பகை முனை. கடந்த ஓராண்டு காலமாக சமாதானத்துக்கு வந்த அனேகமான எல்லாச் சோதனைகளுமே இந்த முனையிலிருந்துதான் வந்தன.

சந்திரிகாவுக்கும் தனக்கும் இடையிலுள்ள பகையைக் காரணம் காட்டியே ரணில் பல தடவைகள் தனது பொறுப்பைத் தட்டிக் கழித்து விட்டதாக படித்த தமிழர்களில் ஒரு பகுதியினர் நம்புகிறார்கள்.

இப்பொழுதுள்ள கேள்வி- ரணில் மெய்யாகவே சந்திரிகாவுடனான பகை முனையை மூடவியலாமல் இருக்கிறாரா? அல்லது அவர் அதை மூடவிரும்பவில்லையா என்பதே. அது ஒரு இயலாமையா அல்லது தந்திரமா என்பதே.

தான் செய்யமுடியாதவற்றுக்கெல்லாம் அதாவது சிங்களத்தீவிரவாதிகளுக்கு பதில் சொல்லப்படவேண்டிய இடங்களிலெல்லாம் சந்திரிகாவைச் சாட்டுவது அவருக்கு மிகவும் வசதியானது என்பதால் அவர் சந்திரிகாவுடனான பகைமுனையை வேண்டுமென்றே மூடாமல் வைத்திருப்பதாக தமிழர்கள் பரவலாகச் சந்தேகிக்கத் தொடங்கிவிட்டார்கள்.

கடந்த ஓராண்டு கால யுத்தநிறுத்த அனுபவங்களைக் கூட்டிக்கழித்துப் பார்த்தால் அப்படித்தான் சந்தேகிக்க வேண்டியுள்ளது.

கடந்த ஓராண்டு கால யுத்தநிறுத்த மீறல்கள் மற்றும் அவற்றின் பின்னால் இருக்கும் சக்திகள் போன்றவற்றின் அடிப்படையில் கூறின் - சமாதானம் செய்வது என்பதை சந்திரிகாவுடனான பகைமுனையை மூடுவதிலிருந்தே தொடங்கவேண்டியுள்ளது.

மிகவும் சரியான வார்த்தைகளில் கூறினால் சமாதானம் செய்வது என்பது இப்பொழுது சந்திரிகாவை வெற்றிகரமாக கையாள்வதுதான். என்ற ஒரு நிலைக்கு வந்துவிட்டது.

இதன்படி சிறிலங்காவை மீளப் பெறுவது என்பதும் அதன் பிரயோக அர்த்தத்தில் சந்திரிகாவை வெற்றிகரமாக கையாள்வதில்த் தான் தங்கியிருக்கிறது.

மாறாக, ரணில் சந்திரிகாவை சமாதானத்தின் பேரால் தோற்கடித்துவிடவே முயல்வது போலத் தோன்றுகிறது. இதற்குப் புலிகளையும், மேற்கு நாடுகளையும் அவர் தனக்கு அரணாகப் பாவிக்கிறாரோ என்று சந்தேகிக்க வேண்டியுள்ளது.

அதாவது - அவர் சமாதானத்தில் விசுவாசமாக இல்லை. பதிலாக தனது கட்சி அரசியல் ஆதாயங்களுக்காக சமாதானத்தை ஒரு தந்திரோபாயமாக பாவிக்கிறாரா என்று சந்தேகிக்க வேண்டியுள்ளது.

சிங்கள உயர் குழாத்துக்கிடையிலான வழமையான அதிகாரப் போட்டியில் முன்பு யுத்தம் எப்படி ஒரு தந்திரோபாயமாக, திசைதிருப்பும் மார்க்கமாகக் காணப்பட்டதோ அவ்வாறே இப்பொழுது சமாதானமும்.

முன்பு கட்சி அரசியலுக்காக யுத்தம் செய்தவர்கள் இப்பொழுது கட்சி அரசியலுக்காக சமாதானம் செய்கிறார்களா?

ஆயின் கட்சி அரசியலுக்காக சமாதானத்தைப் பாவிக்கும் ஒரு தலைவர், அதே கட்சி அரசியலுக்காக சமாதானத்தைப் பலியிடமாட்டார் என்பதற்கு சிங்கள உயர் குழாத்து அரசியலில் எதுவித உத்தரவாதமும் கிடையாது.

இது எங்கே கொண்டுபோய் விடும்?

நிச்சயமாக சிறிலங்காவை மீளப் பெறுவதில் அல்ல. மாறாக அதை மீட்கப்படவியலாதபடி விற்பதில் அல்லது அடகுவைப்பதில்தான் கொண்டுபோய்விடும்.

அதாவது பேரரசுகளிடமும் பிராந்திய அரசுகளிடமும் சிறிலங்காவை நிரந்தரமாகத் தொலைப்பதிலேயே போய்முடியும்.

☞ உனக்கு சிறந்த அறிவுரை கூறக்கூடியவர், உன்னைத் தவிர யாரும் இல்லை. - ஸிஸரோ



# குடாரப்பு மூன்று ஆண்டுகளின் பின்னான நினைவு

**சிறி.இந்திரகுமார்**

தமிழர்களின் ஆன்மா மீது கால்பரத்தி இளைப்பாறிய சிங்களத்தின் முதுகில் தமிழர் சேனை கூடாரமடித்த நாள்தான் 26.03.2000.


அன்று ஆற்பரித்து தன் கைகளை அகல வீசிய கடலின் மடியில் தமிழர்சேனையின் கடற்புலிகள் கலங்கள் அலை களை கிழித்தபடி தாக்குதல் வீரர்களை தன் வயிற்றுள் சுமந்து விரைந்தன குடாரப்பின் கடற்கரையை நோக்கி அன்று.

தமிழர் தேசத்தின் தொண்டையில் சிக்கிய முள்ளாகவிருந்த ஆனையிறவு பெருந்தளத்தினை வெற்றி கொள்ளவென தமிழர் சேனையின் தலைவன் வகுத்த போர் உபாயத்தின் ஒரு கட்டத்தின் நகர்வாக அது இருந்தது.

புலிகளின் தளபதி கேணல் பால்ராஜின் தலைமையில் அணிவகுத்து விரைந்த புலிகள் இத்தாவில் பிரதான வீதியில் தங்கள் உயிர்களால் அமைத்த சண்டை வரம்பினை மீறி முன்னேற முடியாமல் சிங்கள தேசத்தின் புதல்வர்கள் கலங்கி நின்று தவித்த சமர்க்களம் ஒன்று வரலாற்றில் அன்று பதிவாகியது.

ஓயாத அலைகள் மூன்று இராணுவ நடவடிக்கையின் போது தமிழர்கள் வாழும் தேசமெல்லாம் மகிழ்ந்து பூரித்து குதுகலிக்க காரணமாகவிருந்த ஆனையிறவு படைத்தளத்தினை கைப்பற்று வதற்கு என தமிழர் தலைமை வகுத்த இந்த மதிநுட்ப தாக்குதலின் வெற்றியின் அறுவடையை தமிழர்கள் இன்றும் அனுபவித்த வித்தபடியேதான் உள்ளனர்.

இன்று இடிந்து சின்னா பின்னமாகி போர்க்களத்தின் எச்சங்களைக் கூட இழந்து வருகின்ற ஆனையிறவினைப் பார்த்து வியக்கின்றவர்கள் குடாரப்பு தரையிறக்கத்தினை நினைக்காமல் இருக்கமுடியாது.



ஏ-9 வீதியால் தமது புதல்வர்களை பார்ப்பதற்கு யாழ்ப்பாணம் விரைகின்ற படையினரின் பெற்றோர்களிற்கும் காணாமல் போனோர் பட்டியலுடன் அங்கலாய்க்கும் படை வீரர்களின் பெற்றோரிற்கும் இங்கே தான் பல செய்திகள் புதைந்து இருக்கின்றன.

மலரும் சமாதானத்தின் வண்ண கனவுகளுக்குள் புதைந்து போயிருக்கும் படைவீரர்களின் பெற்றோர்களிற்கும் தமிழரின் இலட்சியத்திற்கான வீரத்தின் வீச்சை வீசிக்கொண்டிருக்கின்றது.

மூன்று ஆண்டிற்கு முன்னர், பல ஆண்டுகளிற்கு முன்னர் உலகின் வரலாற்றில் ஒரு பாடமாகிப்போன நோர் மண்டி தரையிறக்கத்தினை மீளவும் மீளவும் உச்சரிக்கும் படியாக இன்னுமொரு நோர் மண்டியெனவர்ணிக்கும்படி, குடாரப்பு தரையிறக்கமும் தாக்குதலும் அமைந்திருந்தது.

எந்த கடற் தரையிறக்கம் ஒன்றினால் 1991ஆம் ஆண்டு ஆனையிறவு படைத்தளத்தினை கைப்பற்றும் நடவடிக்கையில் புலிகள் பின்ன டைவை கண்டார்களோ அதே போன்றதொரு கடற்தரையிறக்கம் ஒன்றின் மூலம் வெற்றி கொண்டு தமிழர்சேனை தன் கணக்கைத்தீர்த்தது.

குடாரப்பு தரையிறக்கம் தன் மூன்றாண்டு வயதை கடந்து போகின்ற இன்றைய நாளில் அதன் தாற்பரியமும் அதன் தாக்கமும் சிங்களத்தின் தலைமைகளின் வாய்களே இன்று தென்னிலங்கையில் பிரஸ்தாபிக்கின்றன.

குடாரப்பு தரையிறக்கத்தினை மீளவும் மனங்களில் நினைக்கின்ற நாம் சிங்களம் எப்படி அதனை நினைக்கின்றது என்பதையும் நாமும் ஒரு முறை மீள் வாசிப்பிற்கு கொண்டு வருவது பொருத்தமாக இருக்கும் ஏனெனில் அதன் மூலம் அதன் தாற்பரியத்தினை நாம் புரிந்து கொள்ளலாம்.

சிறிலங்காவின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் தொலைக்காட்சி ஒன்றிற்கு அளித்த பேட்டியில் "2001 இல் தனிநாடு ஒன்று உருவாகும் நிலைமை ஏற்பட்டது."

"இராணுவம் ஆனையிறவை இழந்து யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறும் நிலை ஏற்பட்ட சூழ்நிலையிலே பேச்சு வார்த்தைக்கு சென்றோம்" எனத் தெரிவித்திருந்தார்.

ஆனையிறவு பெருந்தளத்தினை கைப்பற்றும் தாக்குதலின் மைய நகர்வாக குடாரப்பு தரையிறகக்கம் இருந்தது. ஆனையிறவு கைப்பற்றப்பட்டதன் மூலம் பிரதமரே ஒப்புவிக்கும் படியான இராணுவம் யாழ்ப்பாணத்தை விட்டே வெளியேறும் நிலை ஏற்பட்டது என்பது உண்மை.

இப்போது நாம் குடாரப்பு தரையிறக்கத்தின் இன்றைய செல்வாக்கைப் புரிந்து கொள்ளலாம்.

இக் குடாரப்பு தரையிறக்கத்தின் இராணுவ முக்கியத்துவமானது தனித்து இராணுவ பரிமாணங்களுக்குள் மட்டும் அடங்கிப்போகாது இன்றைய அரசியல் நகர்விலும் தாக்கம் செலுத்தும் அளவிற்கு அதன் முக்கித்துவம் கவனத்தை ஈர்க்கின்றது.

ஒரு சமரின் நேரடி வெற்றியினை உடனடியாகப் பெற்றுக்கொள்வதும் உண்டு. சில சமர்களின் வெற்றியினை காலம் கடந்தும் பெறுவது உண்டு. ஆனால் குடாரப்பு தரையிறக்கமானது நேரடி பல அனுகூலங்களையும் காலம் கடந்தும் பல அனுகூலங்களை தந்தபடி வரலாற்றின் பதிவினை பெற்றுள்ளது என்பதை எவரும் மறுக்க முடியாது.

தமிழர் சேனையின் வரலாற்றில் முக்கியபங்கு வகித்த இத்தாக்குதல் பல வீர அர்ப்பணிப்புகளையும் பதிவாக்கியுள்ளமை குறிப்பிடத் தக்கது.

இந்நிலையில் இக் குடாரப்புத் தரையிறக்கத்தின் மூன்றாண்டுகளின் பின்னான நினைவுகளில் அது காலத்தை வென்றபடி உள்ளது.

---

# இவர்களையும் பற்றி...

உலகின இயங்கு சக்திகளை எல்லாம் அன்னையாக உருவகித்து பேசுபவர்கள் நாம்.

அன்னைபூமி என்போம் எம்மண்ணை. கடலன்னை என விழிப்போம் எங்கள் கடலை இவ்வாறான விழிப்பு ஏன் வந்தது எனில் எல்லாவற்றையும் வாழவைக்கும், தாங்கி நிற்கும் இயல்பை அவை கொண்டதனாலேயே. எங்கள் வாழ்கையிலும் எங்கள் பிறப்புக்கு காரணமானவளை எங்களை தாங்கி வளர்த்தவளை. பூமியில் நிறுத்தி இன்னும் வளர்ப்பவளை அன்னையாய் மதிக்கிறோம்.

ஒரு உயிரின் தோற்றத்திலிருந்து அதற்கு தாயின் பங்காற்றுகை என்பது தியாகத்தின் அடியொற்றியதே எல்லா உயிர்களுக்கும் பொதுவான இவ்வியல்பை போற்றக்கூடிய வல்லமைபடைத்த நாம் போற்றியேதீர வேண்டும் அன்னையின் வயிற்றில் கருக்கொண்ட நாள் முதல் நாம் அன்னையிடம் கடன்படத் தொடங்குகிறோம். தன் உதிரத்தாலும் உள்ளத்தாலும் கொடுக்கும் இக்கடனை இனி ஒரு முறையேனும் திருப்பிக் கொடுத்து விடமுடியாது எம்மால் நாம் இப்பூமியுடன் தொடர்பு கொள்ளும் முதல உயிரும் அன்னையேதான். முதல் முதலில் ஒரு குழந்தையின் வாயிலிருந்து வருவது "அம்மா" என்னும் வார்த்தைதான். அன்றிலிருந்து ஒரு அவலம் எமைச்சேரும் போதெல்லாம் முதல் துணைக்கழைப்பதுவும் "அம்மா"வையே. ஒரு அன்னையின் அன்பு எப்படிப்பட்டது என்பதற்கு கேட்டறிந்த கதையொன்றை உங்களுடன் பகிரலாம்.

ஒரு காதல் ஜோடி. காதலிக்கு காதலில் ஒரே ஒரு தயக்கம் தனக்கு வரப்போகும் மாமி பற்றியது. காதல் முற்றிய ஒரு கட்டத்தில் காதலி மறுக்க, அவன் தன்னை மறந்து நீ என்ன கேட்கிறாயோ அதையெல்லாமே தந்து விடுவேன். என்உயிர் வேண்டுமென்றாலும் சரி என்பதாக அப்பொழுது அந்த காதலி கேட்கிறாள் 'உன் அம்மாவின் இதயம் வேண்டும்' அதுவும் இன்னும் 5 நிமிடங்களிலேயே என்கையில் இருக்கவேண்டும் இதயம் என்றாள்.

காதலில் கண்ணிழந்து போன காதலன் வீடு நோக்கி ஓடுகிறான். தாயிடம் கெஞ்சுகிறான். தாய்க்கு நிலமை புரிகிறது. தன் மகன் மனத்திருப்திக்கு தன் இதயம் ஒன்றே தான் மருந்தாகும் என்பதை புரிந்து 'தன் இதயத்தை மார்பைப் பிழந்து எடுத்துச் செல்' என்கிறாள். விரைவிலேயே அதை முடித்த காதலன் கையில் இதயத்துடன் காதலியை காண ஓடுகின்றான் காதலி கொடுத்த காலக்கெடு நெருங்குகிறது. ஓடிக்கொண்டிருந்த காதலனுக்கு தடுமாற்றம் எழத்தொடங்கியது.

செய்தது தவறா சரியா என ஓட்டத்தில் தளர்வு ஏற்பட வீதியின் குறுக்கிலிருந்த கல்லொன்றில் தடுக்கி விழுகிறான் காதலன் அவன் கையிலிருந்த இரத்தம் சொட்டும் தாயின் இதயம் தவறி அவனருகேயே விழுந்து கிடந்தது. அப்பொழுது அந்தத்தாயின் இதயம் சொல்கிறது 'மகனே உன் காதலி கொடுத்த நேரம் முடியப் போகிறது. விரைவாக எழுந்து ஓடு' என்று.




இக்கதை உணர்த்தும் தாயின் 'அன்பு' என்பதை இன்றைய இளைய தலைமுறைகள் புரிய மறுக்கின்றன. தாம் ஆளாகி வரும் வரை அரும்பாடு பட்டு வளர்த்த தாய் வளர்த்த பின்பு தமக்கு இடைஞ்சலாவாளோ என அஞ்சுவார்கள் தமக்காகவே தன் வாழ்நாள் முழுவதையுமே அர்ப்பணித்த அந்த உள்ளத்திற்கு ஏன் நாம் எமது வாழ்நாளில் பாதியை அர்ப்பணிக்கக்கூடாது. அர்ப்பணித்தால்தான் நாமும் தாயாகி வயதாகும் போது எம் பிள்ளைகளிடமும் அதை எதிர்பார்க்கலாம். இன்றைய சூழல் களாலும் புலம்பெயர்வுகளாலும் பிள்ளைகளின் அரவணைப்பற்று ஏங்கும் அன்னையர்கள் ஏராளம் அவர்கள் கையில் தாராளமான பணமிருப்பினும் ஒரு நல்ல சூழல் அவர்களுக்கு கிடைக்க வழியிருக்காது. அப்படி கிடைக்கும் பணத்திற்காக அத்தாயை பராமரிப்பவர்களிடம் அந்த தாய்க்குக் கிடைக்கும் அன்பு என்பது பணத்தை போலவே வரும், போகும் நிலையில்லா தாய் இருக்கும்.

எல்லோர் பற்றியும் விவாதிக்கும் ஆராயும் முடிவுகள் எழுதுவோர் அன்னையர்கள் பற்றியும் ஆராய அவதானிக்க அவர்கள் நலன்கள் பற்றி அறிய தூண்டுவதற்கு ஒரு சந்தர்ப்பம் தேவையானது.

**விழி**

# நறுக்கென...

## அமைச்சர் மொறகொடவின் இராணுவ அணுகுமுறை



இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வு கிட்டும் வரைக்கும் யாழ் குடா நாட்டில் நிலை கொண்டுள்ள படையினருள் ஒருவரைத் தானும் குறைப்பதோ, அல்லது ஒரு முகாமைத்தானும் அகற்றுவதோ சாத்தியமற்ற விடயம் என்றும் அவ்வாறான காரியங்கள் எதனையும் தாம் செய்யப்பபோவதில்லையென்றும், ஜப்பானில் வைத்து, அதுவும் அங்கு நடைபெற்ற இரண்டாம் நாள் பேச்சுவார்த்தையின் போது அரசின் முக்கிய சமாதானப் பேச்சுவார்த்தையாளர்களுள் ஒருவரான மிலிந்த மொறகொட கூறியுள்ளார்.

அமைச்சர் மிலிந்த மொறகொட ஒரு கருத்தை முன்வைக்கிறார் என்றால் அது பிரதமர் ரணில் முன்வைத்ததற்குச் சமன். இது இன்றைய சிறிலங்கா அரசியலின் யதார்த்த நிலையாகும். அந்த அளவுக்கு அவர் ஒரு செல்வாக்குள்ள அமைச்சராக உருப்பெற்றுள்ளார்.

அதற்கு அவரிற்கான பக்கபலமும், பின்பலமும் வலுவானதாக இருப்பதே காரணமாகும்.அரசியல் அறிந்தவர்கள் இதனை நன்கு அறிவர்.

உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான, அப்பகுதிகளில் இடம் பெயர்ந்த மக்களின் மீள் குடியேற்றம் தொடர்பான அரசின் நிலைப்பாடு அமைச்சரின் இந்தக் கருத்தின் மூலம் மிகத் தெளிவாகவே தெரிகிறது. முகாம்களை, இராணுவத்தினரை அகற்றாமல் மீள்குடியேற்றமோ, இயல்பு வாழ்க்கையோ மக்களுக்கு சாத்தியமில்லை என்பதும் தெளிவு.

உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக, இந்திய முன்னாள் இராணுவ அதிகாரி சதீஷ் நம்பியாரின் அறிக்கையைப் பார்த்த பின்னரே முடிவெடுக்கப்படும் என்று மொறகொட கூறினாலும், அவரது கருத்தில் உயர் பாதுகாப்பு வலயம் நீக்கப்படாது என்ற கருத்தே தொனிக்கிறது.

சரி, இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வு பற்றிக் கூறும் மொறகொட, அந்தத் தீர்வு குறித்த உறுதியான அரசின் நிலைப்பாடு எதனையும் இதுவரை கோடிட்டுக் காட்டியதுமில்லை.

சமாதானம் என்பது வெறுமனே காலம் கடத்தும் நடவடிக்கையல்ல...


மக்களின் இயல்பு வாழ்வுக்கான உரிமைக்கே நம்பியாரையும் வேறு யார் யாரோவையும் எதிர்பார்த்துக் காத்திருப்பவர்கள் எமது மக்களின் வாழ்வியல் உரிமைகளையே அந்நியர்களின் ஆலோசனையின் படி தீர்மானிக்க முயல்பவர்கள். அரசியல் உரிமை தொடர்பாக இன்னும் யார்யாரின் கருத்துக்களின்படியெல்லாம் காலத்தை இழுத்தடிக்கப்போகிறார்களோ...

இராணுவ ஆக்கிரமிப்பு-பாதுகாப்பு இருக்கும் மக்கள் மீதான கெடுபிடிகள், என்ற அச்சம் தரும் நம்பிக்கையற்ற மக்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதமற்ற சூழலில், படை முகாம்களுக்கு மத்தியில் 'சமாதானம்' தொடர்வதாகக்கூறுவது அபத்தமான ஒன்றாகும்.

மொறகொட இதைப்புரிந்து கொள்ளவேண்டும். ஏனென்றால் அவர் ஒரு சரத் பொன்சேகா போன்றும் நம்பியார் போன்றும், இராணுவத்தனமான, கருத்துக்களை வலியுறுத்துவது மக்களின் சமாதானம் மீதான நம்பிக்கையைச் சிதறடித்து விடும் என்பதாலேயாகும்.

அரசியல் சமநிலை பற்றி இராணுவச் சமநிலையில் இறுக்கத்தை அதிகரித்துக்கொண்டு பேச முடியுமா அமைச்சர் அவர்களே....

## 'புஷ்'ஷுக்கு ஆலோசனை கூற சந்திரிகா... 'விமல் வீரவன்ச' வின் அபிப்பிராயம்



"நோர்வே நாட்டில் இடம் பெறும் மாநாடுகளில் சிறப்புரை யாற்றுவதற்கு சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்காவுக்கு அழைப்புகள் விடுக்கப்படுகின்றன... போகிற போக்கில் அமெரிக்க சனாதிபதி ஜோர்ச் புஷ்ஷுக்கு ஆலோ சனைகளை வழங்கவும் எமது சனாதிபதிக்கு அழைப்புகள் கிடைத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை..."

இவ்வாறு தனது 'அற்புத'மான அரசியல் கருத்தை அவிழ்த்து விட்டு மக்களை, அதாவது தென்பகுதி சிங்கள மக்களை அசரவைத்திருப்பவர் வேறுயாருமல்ல, கொஞ்சம் கொஞ்சமாக 'நீளம்பார்த்துக்கொண்டுவருபவரான சிவப்புச் சட்டைஜே.வி.பி.காரரான விமல்வீரவன்சவே ஆவார்.

'சொல்லுவார் சொன்னால் கேட்பாருக்கு மதியென்ன' என்று கூறுவார்கள். இதனையெல்லாம் கேட்கக் கொடுத்துவைத்திருக்கு சிங்கள மக்களை நினைத்தால் தான் பாவமாக இருக்கிறது. ஆனாலும் விமல் வீரவன்ச சதாரணமான ஆளா? நல்லா யோசிச்சுத்தான் பேசியிருக்கிறார்.

புஷ் அவர்களுக்கு ஆலோசனை சொல்லக் கூடிய தகமைகளும் தகுதியும் சந்திரிக்காவுக்கு இருக்கென்பதை அவர் சரியாகத்தான் கணித்துள்ளார்.

'புஷ்'ஸின் ஈராக் மீதான போர் வெறிக்கு, ஈராக் மக்களுக்கெதிரான அவரது இராணுவ நடவடிக்கைகளுக்கு, பயங்கரவாத்திற்கு எதிரான அதிபயங்கரமான யுத்தம் என்ற அவரின் உலகை மயக்கும் கோஷத்திற்கு ஆலோசனை வழங்க சந்திரிகா தகுதியான ஆள்தான் என்பது வீரவன்சவின் முடிவுபோலும்.

தமிழ்மக்களுக்கு எதிரான போர் வெறியுடன் யுத்தம் நடத்திய பேரனுபவம் சந்திரி காவுக்கு நிறை யவே உண்டு, அதனை சமாதானத்திற்கான யுத்தம் என்று கோஷமிட்டு உலகை ஏமாற்றிய அனுபவமும் அவருக்கு மிக அதிகமுண்டு, தான் செய்த கொடுமைகள், அழிப்பு நடவடிக்கைகள் அனைத்தையும் செய்தித்தணிக்கை மூலம் மூடி மறைத்து உலகின் பார்வைக்கு எட்டாது செய்த ஆற்றல் மிகமிக அதிகமுண்டு. எல்லாவற்றையும் விட அதிகார பலத்தை வைத்து எல்லோரையும் அச்சுறுத்தி ஆட்டிப்படைக்கும்'சர்வாதிகார' ஆதிக்க வெறியும் சந்திரிகாவுக்கு மிக மிக அதிகமுண்டு... இன்னும் கூறுவதானால் சிறிலங்காவின் அற்புதமான சிந்தனையளர்களான(?!) அநுராபண்டார நாயக்கா, லக்ஷ்மன் கதிர்காமர் போன்றோரின் அருமையான(?!) ஆலோசனைகளால் மெருகேறிய(?!) அறிவும் உண்டு...

இதனையெல்லாம் வீரவன்ச உணர்ந்து கொண்டுதான் 'புஷ்'ஸுக்கு ஆலோசனை கூற சந்திரிகா தகுதியானவர் என நினைத்து அவரை இந்த ஈராக் மீதான யுத்த நேரத்தில் புஷ் நிர்வாகத்திற்கு ஆலோசனை வழங்க அமெரிக்கா அழைக்கக்கூடும் என சிந்தித்து இப்படிப் பேசியுள்ளார் போலும்.

வீரவன்சவுக்கு ஒரு யோசனை-

அமெரிக்க இராணுவத்திற்கு ஆலோசனை கூற அநுருத்தரத்வத்தையையும் சந்திரிகாவுடன் கூட்டிச் செல்லுமாறு (அமெரிக்கா அழைத்தால்) உங்களின் புதியதோழரும் எதிர்கால சனாதிபதிக் கனவில் இருப்பவருமான அநுரா மூலம் ஆலோசனை கூற வைக்கலாமே...

'அமெரிக்கா' மீதான- 'புஷ்' மீதான 'வீரவன்ச'வின் அக்கறையும் ஆர்வமும் நாமறியாததா? நாடறியாததா?

'புஷ்'ஸுக்கு மேலாக சந்திரிகாவை ஒப்பிட்டு இருவரையுமே கிண்டல் செய்திருக்கும் 'வீரவன்ச' நகைச்சுவையுணர்வுக்கு பாராட்டுகள்.

சேங்குட்டுவன்

## மூத்த இடதுசாரிகளுக்கு அநுராவின் கௌரவம்



கோமாளி என்றால் 'அநுரா'தான். அநுரா என்றால் கோமாளியே தான் சிறிலங்காவின் சமகால அரசியலில் தற்போது கலகலப்பை உண்டு பண்ணுவதில் தென்னிந்திய கோமாளி நடிகர் செந்திலையே ஒரே மூச்சில் முழுங்கிவிடுவார் போலிருகிறது. (தோற்றமும் முழுங்கக் கூடிய தோற்றம்தான்!)

அண்மையில் அவர் சொல்லியுள்ள... இல்லையில்லை பேசியுள்ள இருவசனங்கள் நகைச்சுவையின் உச்சம் என்று கூறலாம்

ஒன்று, 'யார் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் நாட்டிலுள்ள ஒரே இடது சாரிக்கட்சி ஜே.வி.பி. மட்டுமே இதை எவராலுமே மறுக்க முடியாதது'-என்பது.

மற்றது 'தேசப்பற்றுள்ள ஜே.வி.பி யுடன் இணைந்து விரைவில் அரசாங்கம் அமைப்பது உறுதி... அது 12 வருடங்களுக்கு யாராலும் அசைக்க முடியாத உறுதியான அரசாங்கமாக இருக்கும் என்பதாகும்.

இந்த இரண்டு வசனங்களின் மூலமும் அநுரா சிறிலங் காவின் மூத்த இடதுசாரிகள் என்று தம்மைக் கூறிக் கொள்வோருக்கும் பெரும்பான்மை சமூகத்தவருக்கும் தலையைக் கிறுகிறுக்க வைத் துள்ளார்.

அநுராவின் அப்பா-அம்மா காலம் முதல் (திரு-திருமதி பண்டா காலம்) அக்கா சந்திரிகா காலம் வரைக்கும் பதவிக் கதிரையில் பல்லாண்டு காலம் அமர பக்கத்துணையாக இருந்த இடதுசாரிக் கட்சியினரான லங்கா சமசமாசக் கட்சி, இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி, ஒரு காலத்தைய பிலிப்குணவர்த்தனா தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி போன்ற கட்சிகளைச் சேர்ந்தவர்கள் தாங்கள் செய்த வரலாற்று ரீதியிலான தேசிய, அரசியல் தவறுகளுக்கு, அதுவும் தெரிந்தே செய்த தவறுகளுக்கு உரிய கௌரவத்தை அநுரா தனது முதலாவது கருத்தின் மூலம் வழங்கியுள்ளார் என்றே கூறவேண்டும்.

வரண்ட, தீவிர, வகுப்பு வாத, இனவாதக் கட்சியான சிறிலங்கா சுதந்திரக்கட்சியை, வெறும் பதவிச் சுகங்களுக்காக தமது சமதர்மக் கோட்பாடுகளைப் புறந்தள்ளிவிட்டு, ஆதரித்து பதவியில் அமரவழிவகுத்ததன் மூலம் அந்தக் கட்சிக்கு ஒரு 'சோஷலிஸ' அடையாளத்தை ஏற்படுத்திக் கொடுத்தவர்களான இடதுசாரிக் கட்சிகள் செய்த கொள்கைக் குத்துக்கரணங்கள் அவர்களை பெருமளவிற்கு அரசியல் சுயத்துவம் இழந்த அரசியல் அனாதைகளாக்கி விட்டுள்ளநிலையில் இன்னமும் கூட பொ.ஐ. முன்னணியுடன் ஒட்டி கொண்டு தொங்கும் அவர்களை, அநுராபண்டாரநாயக்கா, இடதுசாரிகளேயல்ல என்று நிராகரித்து விட்டு ஜே.வி.பி மட்டும் தான் ஒரேயொரு இடதுசாரிக்கட்சியென மகுடம் சூட்டியிருப்பதை எப்படிப் பொறுத்துக்கொள்ளப்போகிறார்கள்?

சூடு, சுரணை, கொள்கைப்பிடிப்பு இருந்தால் இவர்கள் எப்போதோ பொ.ஐ முன்னணியை விட்டு விலகி சுயமாகச் செயற்பட்டிருப்பர் அத்தகைய உணர்வுள்ளவர்களாகத் தெரியவில்லை. சந்திரிகாவின் சமாதானத்திற்கான யுத்தத்திற்கு பிற்பாட்டுப்பாடிக் கொண்டிருந்த இனவெறி இடது சாரிகளலல்லவா இவர்கள்...

இவர்களின் தவறுகளுக்கு அநுராவின் மூலம் சரியான வசை கிடைத்துள்ளது.

ஜே.வி.பியின் தலைமையை ஏற்று அவர்களுக்கு பிற்பாட்டு பாடவேண்டிய அவமானத் தையும் பெறமுன்னர் ஏதாவது செய்வார்களா...?

## மதுவடி மயிலர்



**செய்தி- பேச்சில் காணப்படும் முன்னேற்றமே வெளிநாட்டு உதவிகளைத் தீர்மானிக்கும் என்கிறார் ஜப்பானிய விசேட தூதுவர்..**

மயிலர்:- பணம் பத்தும் செய்யும் எண்டு நல்லாத்தெரிஞ்ச சீமான்.... இலங்கையின்ரை வங்குரோத்து நிலையையும் நல்லாத்தான் தெரிஞ்சு கொண்டு வித்தை காட்டுறார்... தமிழருக்கு நீதி கிடைக்குதோ இல்லையோ, இந்த பேச்சுவார்த்தையாலை அரசுக்கு நிதி கிடைக்கும் எண்டது நிச்சயம் பாருங்கோ...

**செய்தி- யாழ்ப்பாணத்தில் வீடுகளில் இருந்து படையினர் வெளியேற புதிய தளங்கள் அமைக்கப்பட வேண்டும் என்கிறார் இராணுவத் தளபதி பலகல்லே...**

மயிலர்:- வீட்டை விடு என்றால் ஊரைத்தா எண்டு கேட்ட கதையாக் கிடக்குப் பாருங்கோ... உயர்பாதுகாப்பு வலயத்தை விட்டு ஓடுங்கள் என்றால், இன்னும் அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் அமைப்போம் எண்டல்வா அடாத்து பண்ணுகினம்... கெஞ்சக் கெஞ்ச மிஞ்சுகினம்... எல்லாம் கொஞ்சக் காலத்துக்குத்தான்... அடி உதவு மாப் போல் அண்ணன் தம்பி உவா யினம் பாருங்கோ...

**செய்தி- இறுதித் தீர்வு கிட்டும் வரை யாழ்குடாநாட்டில் படையி னரையோ படை முகாம்களையோ குறைக்கப்போவதில்லை என்கிறார் மிலிந்தமொறகொட....**

மயிலர்:- மொறகொட கொஞ்சம் மொற மொறப்பாகத்தான் பேசுறார் பாருங்கோ.... தானும் 'ஜோர்புஷ்' என்ற நினைப்பு.... அமெரிக்க தொடர்பு நெருக்கமானதல்லே... அப்பிடித்தான் பேசுவார்... அது சரி இறுதித் தீர்வை அரசுதானே சொல்ல வேண்டும்.... அதனைச் சொல்ல இழுத்தடிப்பான் ஏன்... அரசுக்கே இறுதித்தீர்வை சனாதிபதிதான் தீர்மானிக்க வேண்டிய நிலையில்.... தமிழ் மக்களுக்கு இயல்பு வாழ்க்கை இப்போதைக்கு இல்லை என்று உறுதியாச் சொல்லுகிறார். அமைச்சர் அப்படித்தானே... இதுவும் பலகல்லே கேஸ்தான் பாருங்கோ....

செய்தி:- உயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்து வெளியேறும் படையினருக்கு இடங்களை ஒதுக்கிக் கொடுக்க அரசிடம் நிதி இல்லை என அரச தரப்பு பிரதிநிதிகள் தெரிவிப்பு...

மயிலர்:- வித்தையடி மாமி கொத்துதடி கோழி எண்டாளாம் ஒருத்தி அந்தமாதிரியல்லே இருக்கு இவையின்ர கதை... படைக்கு புதிதாக ஆட்களைச் சேர்க்க போதிய நிதி இருக்கு... ஆயுதங்களையும் இராணுவத் தளபாடங்களையும், விமானங் களையும் போர் கப்பல்களையும் வாங்கிக் குவிக்க போதுமான நிதி இருக்கு.... ஆனால் அவர்களை இடம் மாற்ற மட்டும் நிதி இல்லை... ஆருக்கு காது குத்துகினம்.... எல்லாத்துக்கும் எல்லா நாடும் நிதி தாறன் என்று சொல்லேக்க இதுக்கும் நிதி கேட்கிற ஐடியா போலிருக்குஅது தான் இதைப்போய் பேச்சு வார்த்தை மேசையிலை சொல்லி அழுதிருக்கினம்....

அறிவையும், மரத்தையும் அவை நன்கு பதமாவதற்கு முன்பு, அதிகம் பயன்படுத்தக் கூடாது. - அலிவர் வெண்டெல் ஹோல்ம்ஸ்

# யாழ்ப்பாணம்: இருப்பதை பறிக்கும் சிறிலங்காப் படைகள்

**வடக்கு- கிழக்கு** முழுவதிலும் இராணுவம் கட்டியெழுப்பியுள்ள உயர் பாது காப்பு வலயங்களால் 63 சதவீதமான மக்கள் சமாதானத்தின் மீதான நம்பிக்கையில் தளர்ந்துவிட்டனர். இழந்து போயிருக்கின்றனர் என கருத்துக் கணிப்பொன்று கூறுகின்றது. குறிப்பாக யாழ்ப்பாணம் இந்த நம்பிக்கையில் அதிகம் பாதிப்பை ஏற்படுத்துகின்றது எனலாம்.

அகதிகளாக அலையும் மக்களில் அதிகமானோர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களாய் இருப்பது அதற்குக்காரணம். ஆறாவது சுற்றுச் சமாதானப்பேச்சுக்களிலும் அவர்களை மீளக் குடியமர்த்துவது பற்றி பேசியிருக்கிறார்கள். ஆனாலும் அரசதரப்பு அதனைத் திட்ட வட்டமாக நிராகரித்திருக்கிறது.

வடக்கு - கிழக்கில் அதியுயர் பாதுகாப்பு வலய பகுதிகளில் இருந்து படையினரை விலக்க மறுத்துள்ள அரசு, தேவையானால் அம்மக்களை மீளக் குடியமர்த்த அரச காணிகளை வழங்க முடியும் என கூறியிருக்கிறது. அரச தரப்பின் இந்த நிலைப்பாடு பிள்ளையைக் கொன்று விட்டு பதிலாகத் தத்தெடுத்து குழந்தையைக் கையளிப்பதற்கு ஒப்பானது என்றே மக்கள் கருதுகின்றனர்.

அத்துடன் இறுதியான அரசியல் தீர்வு காணப்படும்வரை குடாநாட்டில் உள்ள இராணுவ முகாம்களின் எண்ணிக்கை, நிலைகொண்டுள்ள படையினரின் எண்ணிக்கை என்பனவற்றை குறைக்கமுடியாது என அமைச்சர் மிலிந்த மொறகொட கூறியிருப்பது எந்த நம்பிக்கையையும் இனிமேல் கொள்ள முடியாத நிலையை ஏற்படுத்தியிருக்கிறது.

எனினும், இந்தியாவின் முன்னாள் ஜெனரல் சதீஸ் நம்பியாரின் ஆலோசனை கிடைத்ததும் உயர் பாதுகாப்பு வலயம் குறித்து தீர்மானம் எடுக்கலாம் என அரசதரப்பு தளர்ந்து வரும் நம்பிக்கைக்கு பலமூட்ட முயல்கின்றது. ஆனால், இதுவரை அரசுக்கு வழங்கப்படாத அந்த ஆலோசனை அறிக்கை, பெரும்பாலும் தமிழ் மக்களுக்குப் பாதகமாகவே இருக்கப்போகிறது என்பது பல வழிகளிலும் தெளிவாகிவிட்டது.

ஆயினும், ஏதோ ஒரு முடிவுக்காக அதனை எதிர்பார்த்துக்கொண்டிருக்கையில், கடந்த வாரம் அமெரிக்காவின் இலங்கைக்கான தூதுவர் மக்களுக்குப் பொறுமையைப்போதித்துள்ளார். ஆஸ்லி வில்ஸ் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டு கருத்து வெளியிட்டபோது, நாட்டின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டு சமாதான முயற்சிகள் மேலும் முன்னேற்றமடையும் போதே உயர்பாதுகாப்பு வலயங்களை அகற்றி அப்பகுதியில் இருந்து வெளியேறியவர்களை மீளக்குடியமர்த்த முடியும் என்று கூறி யுள்ளார் அதுவரை தமிழ் மக்கள் மிகவும் பொறுமையுடன் இருக்க வேண்டும் என்றுள்ளார்.

பத்தாண்டுகளுக்கு மேலாக இடம் பெயர்ந்து அவலவாழ்வு வாழ்பவர்களிடம் இன்னும் பொறுமையையே போதிப்பது அவர்களை இரண்டாம்தர நிலைக்குள் வைத்திருப்பதையே குறிக்கும். சரி இதனை ஒப்புக்கு ஏற்றுக்கொண்டாலும் உயர் பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியேயான மீள்குடியமர்வு கூட சரியான முறையில் அனுமதிக்கப்பட்டதாய் இல்லை.

யாழ்ப்பாணத்தில் உயர்பாதுகாப்பு வலயத்துக்கு வெளியே 992 பொதுமக்களின் வீடுகளில் படையி னர் நிலைகொண்டுள்ளனர். அதை விட பொதுக்கட்டடங்கள் பல இன்னும் அவர்களது ஆக்கிரமிப்பில்தான் உள்ளன. ஏறத்தாழ ஐம்பது இராணுவ முகாம்கள் வடக்கு- கிழக்கு முழுவதும் பொதுக்கட்டடங்களில் கட்டப்பட்டுள்ளன. ஒப்பந்தப்படி அவை அகற்றப்படவேண்டியுள்ளன.

இது தொடர்பாக யப்பானில் நடைபெற்ற ஆறாம் சுற்றுப் பேச்சுக்களின் போது ஆராயப் பட்டுள்ளது. உயர் பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியே உள்ள வீடுகளை விட்டு வெளியேற இராணுவத்திடம் நிதிவசதி இல்லை எனக் கூறப்பட்டதாகத் தெரிகின்றது. சிறிலங்கா இராணுவத்தரப்பின் இந்தக்கூற்று கடந்த வாரச் செய்திகளை அறிந்த எவருக்கும் விசனமூட்டவே செய்யும்.

சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு 15 கோடி அமெரிக்க டொலரிற்கு ஹெலி இறங்கு தளத்தோடு கூடிய கடற்கண்காணிப்பு கலத்தை கொள்வனவு செய்யத் தயாராகிவிட்டது. இது படைப்பலத்தை பெருக்க நிதியைச் செலவிடும் இராணுவம், மக்களின் இயல்பு வாழ்வுக்காகச் செலவிடத் தயாராயில்லை எனக் காட்டும் மிகப்பிந்திய செய்தி உதாரணம் ஆகும்.

யப்பானியப் பேச்சில் இன்னோர் விடயமும் இதுபற்றி அரச தரப்பால் குறிப்பிடப்பட்டது. படையினர் தம்மிடம் உள்ள 750 மக்களின் வீடுகளை கையளிப்பதானால், அருகே உள்ள பொதுமக்களின் வெற்றுக் காணிகளிலேயே முகாம் அமைக்க வேண்டும் அதற்குப் புலிகள் இணங்குவார்களா? என இராணுவத்தளபதி லயனல் பலேகல்ல கேட்டிருக்கிறார்.

உண்மையில் உயர்பாதுகாப்பு வலயத்துக்கு வெளியே 992 வீடுகள் படையினரின் ஆக்கிரமிப்பில் உள்ளன. அவற்றில் 750 வீடுகளை மட்டும் விட்டு வெளியேறுவது பற்றித்தான் ஜெனரல் லயனல் பலேகல்ல அறிக்கைமூலம் பிரஸ்தாபித்திருக்கிறார். மீதமுள்ள 242 வீடுகளை இப்போதைக்கு விடுவிப்பது பற்றிப் பேச முடியாது என்பது தான் படையினரது நிலைப்பாடு எனத் தெரிகின்றது. ஆயினும் வீடுகளை விட்டு வெளியேறி பொதுமக்களின் வெற்றுக் காணிகளில் முகாம் அமைப்பது என்ற பேச்சையே புலிகள் நிராகரித்து விட்டார்கள். மெய்யாகவே தமது பாரம்பரியமான முழு நிலமும் தமது பயன்பாட்டுக்கு வேண்டும் என்பதே மக்களின் நிலைப்பாடாகும். கடந்த பத்தாண்டுக்கு மேற்பட்ட காலத்தே இழந்து போன சொத்துக்களை, பொருளாதார வளங்களை ஈடுசெய்ய நிலமே

**இப்போது எல்லாவற்றுக்கும் கொடு முடியாக யாழ் கோட்டை பகுதியில் பலம்வாய்ந்த இராணுவத்தளத்தை அமைப்பதற்கான முயற்சி மேற் கொள்ளப்படுகின்றது.**



அடிப்படையானது. அதனையே புலிகள் யப்பானில் மேற்படி பேச்சுக்களில் பிரதிபலித்திருக்கிறார்கள்.

மொத்தத்தில் படையினர் உயர்பாதுகாப்பு வலயத்துக்கு வெளியே உள்ள வீடுகளை விட்டு வெளியேறுவதும் இப்போதைக்கு நடைபெறப்போவதில்லை என்பதே முடிவாக உள்ளது இது ஒருபுறம் இருக்க படையினர் இல்லாத வீடுகளில் சென்று குடியமரவும் வெளியே உள்ள கிராமங்களுக்குச் செல்லவும் கூட அனுமதிக்கத் தயாராய் இராணுவம் இல்லை என்பதை கடந்த வாரநிகழ்வுகள் காட்டுகின்றன.

வசாவிளானை அண்டிய பன்னாலைப் பகுதியில் மீளக்குடியமர்பவர்கள் புதிதாக வீடமைக்கவோ அன்றேல் சேதங்களைத் திருத்தவோ படையினர் விடாது விரட்டிக் கலைத்துவருகின்றனர். 1992களில் அப் பகுதிகளில் இருந்து வெளியேறிய மக்களில் ஒரு பகுதியினர் 1996க்கு பின் படிப்படியாக திரும்பத்தொடங்கியிருந்தனர்.

ஆனால், இப்போதோ வன்னியில் இருந்து தரை வழியால் மீளக் குடியேற வருவோர் படையினரால் அச்சுறுத்தப் படுகிறார்கள் வீடுகளைப் புதிதாகக் கட்டுவதிலும் திருத்துவதிலும் ஈடுபட்டிருந்த சொந்தக்காரர்களை படையினர் எச்சரித்து அவற்றைக்கைவிட்டுப் போகும்படி மிரட்டியுள்ளனர்.

இதேபோன்று யாழ்பாணம் முதலாம் குறுக்குத் தெருவில் மேற்கொள்ளப்பட்டு வந்த பனிக்கட்டி உற்பத்தி ஆலைக்கட்டடப் பணிகளையும் நிறுத்தியுள்ளனர். சிறிலங்கா இராணுவத்தின் 513வது பிரிகேட் வடமாகாண கடற்றொழிலாளர் சமாசத்துக்கு எழுதிய ஒரு கடிதம் மூலம் அதனை முடக்கியுள்ளது.

யுத்தத்தால் முழுமையாகப் பாதிக்கப்பட்டிருந்த ஆலையின் புனரமைப்பை, 513வது பிரிகேட்டின் அனுமதியுடனேயே சமாசம் தொடங்கியிருந்தது. சுமார் பத்து நாள்களாக நடைபெற்ற வந்த அதன் புனரமைப்பு பணியை, தமது பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிக்கும் ஒன்றெனக் கூறியே இராணுவம் தடுத்திருக்கின்றது. பெற்றவற்றை மீளவும் படையினரிடம் இழக்கும் துயரம் இந்த இரண்டும் மட்டுமல்ல வடமராட்சியிலும் தென்மராட்சியிலும் இப்படி பல நிகழ்வுகள் நடக்கின்றன.

இன்னும் தமது வீடுகளைப் பெற்றுத் தருமாறும் வீடுகளுக்குப் போகும் வழிகளை திறந்து விடுமாறும் மக்களின் கோரிக்கைகள் நாளாந்தம் எழுகின்றன.

இடம் பெயர்ந்து வெளி மாவட்டங்களிலும் தமிழகத்திலும் தங்கியுள்ள யாழ்ப்பாண மக்கள் இரு தலைக் கொள்ளி எறும்பு நிலையில் உள்ளனர். வவுனியாவில் உள்ள நலன் புரி நிலை யங்களில் தங்கியிருந்த 170க்கும் அதிக குடும்பங்கள் யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ளன. ஆனால், அவற்றில் பல குடும்பங்கள் தமது சொந்த வீடுகளுக்குச் செல்ல முடியாது குடாநாட்டுக்குள் அகதிகளாக தங்கியுள்ளன. இதே வேளை வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங் களைச் சேர்ந்த 226 வரையான குடும் பங்கள் எந்த நெருக்குவாரமும் இன்றி தமது இடங்களில் வாழத்தொடங்கிவிட்டன.

இந்த நிலையில் வவுனியா நலன்புரி நிலையங்களில் உள்ள ஏனைய யாழ்ப்பாணக் குடும்பங்கள் அங்கேயும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கின்றன. இயல்பு நிலை தோன்றி விட்டதாகக் கூறி அவர்களுக்கு நான்கு மாதங்களாக உலர் உணவு நிவாரணம் நிறுத்தப்பட்டுள்ளது. வவுனியா மின்சாரசபை அந்நிலையங்களுக்கு வழங்கி வந்த மின்சாரத்தையும் இதே காரணத்தைக் காட்டி துண்டித்து விட அவை இருளில் முழ்கியுள்ளன.

சமச்சீரற்றதான இந்த நடவடிக்கைகள் அவர்களுக்கு எந்தவிதத்தில் சமாதானம் பற்றிய நம்பிக்கையை ஊட்டப் போகின்றன என்பது தெரியவில்லை. சமகாலத்தில் தமிழகத்தில் உள்ள அகதி முகாம்களில் 65,000 வரையான ஈழத்தமிழர்கள் தங்கியுள்ளனர். அவர்கள் இப்போதைய அமைதிக்காலத்தில் தாயகம் திரும்ப விரும்புகின்ற போதிலும் அனுமதிக்கப்பட வில்லை. அவர்களில் கணிசமானவர்கள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள்.

யாழ்ப்பாணத்தின் இப்போதைய நிலையில் அவர்கள் இங்கு வந்தால் என்ன நடக்கும்? இது சிறிலங்கா இராணுவத்திற்கும் அதன் கடும்போக்கு வாதத்தை ஆதரிக்கும் - விரும்பும் சக்திகளுக்கும் கசப்பான ஒரு விடயமாகவே இருக்கும் தமிழகத்தில் உள்ள யாழ்ப்பாண அகதிகள் திரும்பி வந்தால் உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக படைத் தரப்புக்கு நெருக்கடிகள் மக்கள் மத்தியில் இருந்து அதிகமாகவே எழுவதற்குச் சாத்தியங்கள் உள்ளன.

இதனைக் கருத்தில் கொண்டே அவர்களைத் திருப்பி அனுப்புவதில் இந்தியா அசமந்தப்போக்கை கடைப்பிடிப்பதாக சில தகவல்கள் தெரிவிக்கின்றன. இதுவே அங்கிருந்து ஈழத் தமிழ் அகதிகள் தப்பியோடி வரும் நிலையையும் உண்டு பண்ணுகிறது எனலாம்.

புரிந்துணர்வு உடன்பாட்டிற்கு அமைவாக அகற்றப்பட்ட முகாம்களுக்குப் பதிலாக வேறு முகாம்களை அமைத்தல் என்ற நியாயப்பாட்டோடு, சிறிலங்கா இராணுவம் மிக நன்றாகத் தன்னைப் பலப்படுத்துகின்றது. நெடுந்தீவில் இப்போது புதிதாக கடற்படைத் தளம் அமைக்கப்பட்டுவிட்டது.

தென்மராட்சி மீசாலை சந்தியை அண்மித்த பகுதியில் உள்ள படைமுகாம் முன்பாக முட்கம்பிகளால் பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்படுகின்றன. முன்பு இதற்கு எந்தப் பாதுகாப்பு வேலியும் இருக்கவில்லை. தென்மராட்சியில் மக்களினதும் பொது அமைப்புக்களினதும் கட்டடங்களில் இருந்து வெளியேறிய படையினர் அருகிலேயே முகாம்களை அமைத்துள்ளார்கள். அதற்கு மேலதிகமாகவே இப் பலப்படுத்தல் நடக்கின்றது.

இப்போது எல்லாவற்றுக்கும் கொடு முடியாக யாழ் கோட்டை பகுதியில் பலம்வாய்ந்த இராணுவத் தளத்தை அமைப்பதற்கான முயற்சி மேற்கொள்ளப் படுகின்றது. அதனை அண்டியுள்ள மாநகரசபையின் காணிகள் அனைத்தையும் உடனடியாக படைப்பாவனைக்கு, ஒப்படைக்குமாறு வடகிழக்கு மாகாண ஆளுநர் உத்தரவிட்டுள்ளார். பாதுகாப்பு அமைச்சு பிறப்பித்த உத்தரவின் பிரகாரமும் அமைச்சரவைக் கூட்டத்தின் தீர்மானத்தின் பிரகாரமும் இக்கட்டளை வியாழனன்று பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இராணுவ மேலாதிக்கத்துள் குடாநாடு நசுங்கிக் கொண்டிருக்கும் நிலையில், வளைகுடாப் போர் தொடங்கியிருக்கிறது. உடனடியாகவே யாழ்ப்பாணம் அதன் பிரதிபலிப்பைக் காட்டுகின்றது. எண்ணை வகை உட்பட பல பொருட்களுக்கும் செயற்கையான தட்டுப்பாடு ஏற்படுத்தப்பட்டு விட்டது. எரிபொருள் நிரப்பு நிலையங்கள் பெற்றோல் விநியோகத்தை நிறுத்தியுள்ளன. சில மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வாகனங்களுக்கு வழங்குவதால் வீதியோரங்களில் நீண்ட வரிசைகளில் வாகனங்கள் நிற்கின்றன.

எந்தக் காரணமும் அற்று அன்றாட உணவுப் பொருட்களும் விலை உயர்வதற்கான அபாயம் தென்படுகின்றது. ஒரு வழியால் மெல்ல மூச்சு விடத்தொடங்க இன்னோர் வழியால் நெஞ்சை மிதிக்கும் நிலையாகிவிட்டது.

ஞாபகன்

## 'பிளானறி ஓ கொணரின்'

### இரண்டு


# இடம் பெயர்ந்தவன்

தமிழில்
சு.மகேந்திரன்

இவ்வகையான நிகழ்வுகள் தினமும் ஐரோப்பாவில் நடக்கின்றன. அவர்கள் அமெரிக்க நாட்டினர் போல் முன்னேற்றம் அடையவில்லை எல்லாவற்றையும் பார்க்கக் கூடிய இடத்தில் நின்றிருந்த திருமதி. சோட்லிக்கு சடுதியாக உள்ளுணர்வு ஒன்று உருவாகியது அதில் கொபுள்கூக்கள் நெருப்புக் காய்ச்சலை உண்டாக்கும் கிருமிகளைப் பரப்பும் எலிகள் போல், கொலைகார உனர்வுகளால்ப் பாதிப்புற்று கடல்வழியாக இங்கு வந்துள்ளார்கள் போலத் தென்பட்டது. இவர்கள் இவ்வகையான கொலைகார உணர்வுகளால் பாதிப்புற்று இங்கு வந்துள்ளவர்கள் ஆகையால் அவர்கள் இங்கே மற்றவர்களுக்கு இதைச் செய்ய மாட்டார்கள் என எப்படிச் சொல்ல முடியும்? இந்தக் கேள்வியிலிருந்த முக்கியத்துவம், அவளைக் கலக்கியதால் அவளது வயிறு அக்குன்றின் நடுப் பகுதியில் ஏதோ ஒரு சிறிய பூகம்பம் ஏற்பட்டது போல் குலுங்கியது. அவர்கள் எந்த அளவுக்குக் காரியங்களை நகர்த்தும் வல்லமை உடையவர்கள் என்பதை அறிய வேண்டும் என்ற நோக்கத்தில், தன்னை அவர்களுக்கு அறிமுகம் செய்து கொள்வதற்காக அந்த ஏற்றத்திலிருந்து திருமதி. சோட்லி கீழே இறங்கி வந்தாள்.

திருமதி. சோட்லி வயிற்றை முன்னேயும் தலையைப் பின்னேயும் வைத்துக் கொண்டு கைகளைக் கட்டியபடி அக்கூட்டத்தை அணமித்தாள். அவளது பெரிய பாதங்களில் இருந்த சப்பாத்துக்கள் புடைத்துக் காணப்பட்டன..

அவளுக்கு அச்சத்தைக் கொடுத்த அந்தக் கூட்டத்திலிருந்து 15 அடி தூரத்தில் நின்று கொண்டு தனது வருகை யை உணர்த்தும் வகையில் திருமதி. மக்கன்ரயரின் கழுத்தின் பக்கமாக தனது பார்வையை ஓட விட்டாள் திருமதி. மக்கன்ரயர் 60 வயது நிரம்பிய சிறிய உடலமைப்பைக் கொண்ட பெண் சுருங்கிய வட்டமான முகத்தில் ஒரேஞ் வண்ண பென்சிலால் கோடிட்டது போன்ற கண்புருவத்தின் அருகே, அவளது சிவந்த தலைமயிர் பட்டுக் கொண்டிருந்தது. அவளது வாய் ஒரு பொம்மையுடையது போன்றது. கண்கள் முழுமையாகத் திறந்திருக்கும் போது மெல்லிய நீலநிறமாகவும் பால்பாத்திரங்களை பரிசீலிக்கும் போது குறுகி உருக்கோ அல்லது கருங்கல்லின் நிறத்திலோ திகளும் ஒரு கணவரை ஏற்கனவே புதைத்து விட்டு மற்ற இருவரையும் விவாகரத்து செய்திருந்த திருமதி. மக்கன்ரயருக்கு உரிய மரியாதையை எப்போதும் திருமதி. சோட்லி கொடுத்து வந்தவள் எவரது சொல்லும் அதை மாற்றியதில்லை ஆயினும் திருமதி மக்கன்ரயர் சில வேளைகளில் 'கா கா சோட்லி குடும்பத்தவர்களா' என்ற தொனியில் ஏதாவது கூறும் போது மட்டும் அம்மரியாதையில் சிறிது விரிசல் ஏற்படுவதுண்டு. திருமதி. மக்கன்ரயர் அந்தப் பையனுக்கு திருமதி. சோட்லியைச் சுட்டிக் காட்டி 'இதுதான் திருமதி சோட்லி, திரு. சோட்லி எனது மாடுகளை பராமரிப்பவர்' எங்கே திரு. சோட்லி? என திருமதி. சோட்லியைக் கேட்டாள். திருமதி. சோட்லி கைகளைக் கட்டியபடி இன்னும் சிறிது முன்னே வர முற்பட்ட போது 'திரு. சோட்லி கௌசாக்(Guizac) குடும்பத்தவர்களை காணவேண்டும் என விரும்புகிறேன்' என்றாள். இப்போது அவர்கள் கௌசாக்குகள் ஆகிவிட்டார்கள் அவர்களது முகத்துக்கு நேரே கொபுள் கூக்கள் என அவள் அழைக்கவில்லை 'சான்சி (Chancey) தொழுவத்தில் இருக்கிறார். நீக்ரோக்களைப் போல் அந்தப் பறைக்குள் மறைந்திருக்க அவருக்கு நேரமும் கிடைப்பதில்லை என்றாள் திருமதி. சோட்லி.





> 'எவ்வளவு அழகான பறவை' எனப் பாதிரியார்முணுமுணுத்தார்.
> 'சாப்பாடு போட வேண்டிய இன்னுமொன்று' என்று வெறுப்பாக அந்த ஆண் மயிலின் பக்கமாகத் திரும்பியபடி திருமதி. மக்கன்ரயர் கூறினாள்.
> 'இது தனது பிரகாசமான தோகையை எப்போது விரிக்கும்' என்றார் பாதிரியார்.
> 'அதற்கு எப்போது தோன்று கின்றதோ அப்போது' என்றாள் திருமதி. மக்கன்ரயர்.

அவள் இடம் பெயர்ந்தவர்களின் தலைக்கு மேலாக பின் மெதுவாக கண்களை கீழே கொண்டு வந்தாள். பறவை இன்று ஆகாயத்திலிருந்து நழுவி பின் இடிபாடுகளுக்குள் வீழ்வது போல் அது இருந்தது. அந்த மனிதன் தனது கைகளை முத்தமிட்டு விடாதபடி அவள் தூரத்தே நின்று கொண்டாள். அவன் தனது பச்சை நிறக் கண்களால் அவளை நேராகப் பார்த்தான். ஒரு முழுமையான சிரிப்பை உதிர்த்த அவனது வாயில் ஒரு பக்கப்பற்கள் முழுமையாக இருக்கவில்லை. திருமதி. சோட்லி புன்னகை புரியாமல் தோளை அங்கும் இங்கும் ஆட்டியபடி இருந்த அந்தச் சிறுமியைப் பார்த்தபடி இருந்தாள். அவளது நீண்ட மயிர் பின்னப்பட்டு, இரண்டு பன்றிவாள்கள் போல் மடித்துக் கட்டப்பட்டிருந்தது. அப்பெண்ணின் பெயர் பூச்சியின் ஆங்கிலப் பெயரான பக் போலிருந்தாலும் அழகானவளாகவே இருந்தாள். திருமதி. சோட்லியின் பெண்களான அனிமோடி (Anniemaude) சரல்மெக் (Saral mac)கையும் விட இவள் நல்ல தோற்றம் உடையவள் போல் தென்பட்டாள் 15 வயதாகும் அனிமோடி வயதுக்கேற்ற வளர்ச்சியைப் பெறவில்லை. சரல் மெக்கின் கண்கள் நிறபேதம் அடைந்திருத்தன. வெளிநாட்டுப் பையனுடன் ஒப்பிடும் போது எச்.சி. (H.C) எவ்வளவோ மேலானவனாகவே தெரிந்தது. 20 வயதாகின்ற அவன் திருமதி. சோட்லியைப் போலவே பெரிய தோற்றம் கொண்டவன் கண்ணாடி அணியும் அவன் இப்போது பைபிள் பாடசாலைக்குப் போகின்றான். அந்தப் பயிற்சியை முடித்து விட்டால் அவனுக்கென்று ஒரு தேவாலயம் அமைந்துவிடும். கம்பீரமும் இனிமையும் கலந்த குரலில் தோத்திரக் கீதங்களை பாடுவதற்கேற்ற குரல் அவனுக்கு வாய்த் திருந்தது அதை வைத்துக் கொண்டு அவனால் எதனையும் சாதித்து விட முடியும். திரும்பவும் பாதிரியாரை பார்த்த திருமதி. சோட்லி இவர்கள் ஒரு முன்னேற்றமான சமயத்தைக் கைக் கொள்பவர்கள் அல்ல என்று தனக்குள் நினைவுபடுத்திக் கொண்டாள். அவர்கள் எல்லோரும் நம்பிக் கொண்டிருப்பது பற்றி எந்தவித அபிப்பிராயங்களும் கூறப்படாததால் அவற்றிலிருக்கும் மடத்தனங்கள் எதுவுமே சீர்திருத்தப் படவில்லை. அவளுக்கு அறை முழுவதும் இறந்த உடல்களால் நிறைந்திருந்த காட்சி மீண்டும் நினைவுக்கு வந்தது.

அந்தப் பாதிரியார் அன்னியமான முறையில் ஆங்கிலம் பேசினார். அது வாய்க்குள் வைக்கோலை அடைத்துக் கொண்டு பேசுவது போல் இருந்தது. செவ்வகமான முகமும் பெரிய மூக்கையும் உடைய அவள், அவர் அவரை அவதானித்துக் கொண்டிருந்த போது தனது பெரிய வாயைத்திறந்து யுசச சசச.....! என்றபடி ஒரே பார்வையாகப் பார்த்தபடி அவளுக்குப் பின்புறமாக இருந்த எதையோ சுட்டிக்காட்டினார்.

திருமதி. சோட்லி சுற்று முற்றும் பார்த்தாள்அவளுக்குசில அடிகள் தள்ளி தலையைச் சிறிது உயர்த்தியபடி மயில் நின்றிருந்தது.

'எவ்வளவு அழகான பறவை' எனப் பாதிரியார் முணுமுணுத்தார்.

'சாப்பாடு போட வேண்டிய இன்னுமொன்று' என்று வெறுப்பாக அந்த ஆண் மயிலின் பக்கமாகத் திரும்பியபடி திருமதி. மக்கன்ரயர் கூறினாள்.

'இது தனது பிரகாசமான தோகையை எப்போது விரிக்கும்' என்றார் பாதிரியார்.

'அதற்கு எப்போது தோன்றுகின்றதோ அப்போது' என்றாள் திருமதி. மக்கன்ரயர். 'இவ்விடத்தில் இவற்றைப்போல் 20 அல்லது 30 பறவைகள் இருந்தன. நான் அவற்றை சாவதற்கென்றே விட்டுள்ளேன். நடுஇரவில் அவை கூச்சலிடுவதை நான் விரும்புவதில்லை'

'அவை மிகவும் அழகுடயவை' என்றார் குருவானவர். அவற்றின் வால்முழுவதும் பல சூரியன்கள் நிரம்பி வழிகின்றன' முன்னே வந்து நுனிக்காலில் நின்றபடி அதனது வாலில் எங்கே பிரகாசமான பொன்னிறமும் பச்சையும் ஆரம்பிக்கிறதோ அவ்விடத்தைப் பார்த்தபடி நின்றார். சூரியனுக்குச் சென்று அதில் மூழ்கி வந்திருக்கும் ஒருவர் தமக்கெல்லாம் காட்சிதருகிறார் என்பது போல் மயில்களும் ஆடாமல் அசையாமல் நின்றன. குடும்பப் பாங்கான அந்தக் குருவானவரின் முகம் சிவப்பாகி சந்தோசத்தால் பிரகாசித்தது.

திராவகத்தை உண்டது போல் வாயை ஒருபக்கம் இழுத்தாள் திருமதி. சோட்லி. 'இதுவேறொன்றுமில்லை ஒரு மயில்க் குஞ்சுதான்' என்றாள் திருமதி. மக்கன்ரயர்.

தனது ஒரேஞ்நிறக் கண்ணிமைகளை உயர்த்திய திருமதி. மக்கன்ரயர் திருமதி.சோட்லியுடன் பார்வையைக் கலந்தாள் "அதில் கிழவர் திரும்பவும் குழந்தைப் பருவத்தை எய்தியவர் போலிருக்கிறார்" என்ற செய்தி தெரிந்தது 'நல்லது நாங்கள் கௌசக்குகளுக்கு அவர்களது புதிய வீட்டைக் காட்ட வேண்டும்' என்று பொறுமையின்றிக் கூறினாள் அவர்களும் மந்தைக் கூட்டம் போல காரில் ஏறினர் மயில்கள் இரண்டும் நீக்ரோக்கள் ஒழிந்திருந்த மல்பரி மரங்களின் பக்கமாக நகர்ந்தன அவற்றின் அழகில் மூழ்கி இருந்த பாதிரியாரும் தனது முகத்தை அவற்றின் பக்கமாகத் திருப்பியபடியே காரில் ஏறினார். இடம் பெயர்ந்தவர்கள் வசிப்பதற்காக அவசரமாக அமைக்கப்பட்டிருந்த கொட்டில் வீட்டுக்கு அவர்களை அழைத்துச் செல்ல காரை ஓட்டினார்.

தொடரும்.....




## குழந்தைகளைத் தூக்கி எறிஞ்சு கொஞ்ச வேண்டாம்

நாம் ஒரு தரம் சுவாசிக்கும் போது 500ml வளி நுரையீரலுக்கு சென்று மீண்டும் வெளியேறுகிறது.

முழுமையாக சுவாசித்தால் இன்னும் மேலதிகமாக 300ml வளியை கூடுதலாக சுவாசிக் கலாம். அதேபோல் வெளிவிட்டாலும் கூடுதலான வளியை வெளிவிடலாம்.

இருப்பினும் நுரையீரலானது 1200ml வளியை எப்போதும் கொண்டிருக்கும். இவ்வளி நாம் வேகமாக ஓடினாலோ அல்லது மேலிருந்து குதித்தாலோ வெளியேறுகிறது. பின் மீண்டும் 1200ml வளி நுரையீரலைச்சென்று சேரும் வரை மூச்சு வாங்குகிறது. இதனால்தான் ஓட்டவீரர்கள் களைப்புடன் மூச்சு வாங்குகிறார்கள்.

சில வேளைகளில் குழந்தைகளை மேலே தூக்கி எறிந்து பிடித்துக்கொஞ்சும் போது மூச்சுத்திணறல் இதனால் தான் எற்படுகிறது. குழந்தைகள் இதனை சமாளிக்க சிரமப்படலாம். குழந்தைகளுக்கு மகிழ்ச்சியூட்டுவதாக எண்ணிச் செய்யும் இந்தக் காரியத்தை இனி கைவிட்டுவிடுங்கள்.

இதை நான் எனக்குத் தெரிந்த ஒருவருக்கு சொன்னேன். அவர் சொன்னார் "நீர் சொல்லுறது பொய், உந்த சினிமாவில கதாநாயகனும், நாயகியும் எவ்வளவு தூரம் ஓடுகினம்; குதிச்சு, தூக்கி எறிஞ்சு, பிடிச்சு... அவையளுக்கு ஏன் மூச்சு வாங்கேல்ல."

"இது எப்படியிருக்கு"


வீணன்



சிறுகதை

# உணர்வும் உறுத்தலும்

ச.முருகானந்தன்



அதிகாலைக் கனவில் வசந்தி வசந்தமாய் வந்து சிரித்தாள். அவன் கண்களால் அவளை அருகே அழைத்தான். அவள் பிகு பண்ணுவது போல தலையாட்டி விட்டு, பின் அவன் அருகில் வந்தாள். இதற்கிடையில் பெற்றோரின் உரையாடல் மோகனின் தூக்கத்தைக் கலைத்தது. விழித்தபோது கனவொன்று புரிந்தது. எழும்ப மனமின்றி அம்மாவும், அப்பாவும் உரையாடிக் கொண்டிருந்ததை கேட்டபடி படுத்திருந்தான்.

"மழை பெய்யுற சில மனைக்காணன். ஐப்பசியும் முடியப்போகுது, இனிவிதைச்சு எப்பிடிப் பயிராக்கப் போறம்... பட்டகாலில படும் எண்ட மாதிரி எல்லாப் பக்கத்தாலயும் கஸ்டமாயிருக்கு" அப்பா சலிப்போடு அம்மாவிடம் கூறினார்.

"விதைச்சுப் பயிராக்கினாப் போல என்ன பெரிசா வெட்டி எடுக்கப் போறியளே?..... உரமும் இல்லை..... விளையுற நெல்லுக்கு விலையுமில்லை..." இலட்சுமி பரிவோடு முருகேசரைப் பார்த்தாள். மிசின் உழவுக்கும் ஆன மிசினுமில்லை எண்ணை, டீசலும் இல்லை..." அம்மாவின் பதிலிலும் சலிப்பு.

"மாட்டை வித்தது தான் மோட்டுத்தனம்" முருகேசரின் காலம் கடந்த ஞானம்! விற்காமலும் சீவியப்பாட்டை ஓட்டியிருக்க முடியாது. பொருளாதாரத்தடை ஏற்பட்டபின் கடந்த சில வருடங்களாக வாழ்க்கைப் பாடே கஸ்ரமாகிப் போய்விட்டது. அவர்களுக்கு மட்டுமா?

ஊரோடு ஒத்தபடி....

பட்டினி போட்டு தமிழினத்தை பணியவைக்கப்பார்க்கினமோ?

"யசோ... அப்பாவுக்குத் தேத்தண்ணி கொண்டுவந்து கொடு..."

"நான் இங்க முத்தம் கூட்டுறன் அம்மா..."

" இவள் எப்பொழுதும் இப்படித்தான். இடக்கு மடக்காகப் பதில் சொல்லுவாள். பருவமடைந்த நாட்தொட்டே அம்மாவுடன் போட்டி"

"பின்னடிக்கு உதவுமெண்டு பிள்ளையளை வளர்த்தால், அதுகள் இப்பவே மல்லுக் கட்டிக் கொண்டு நிக்குதுகள்..."

பிள்ளையளை ஏன் திட்டுறாயப்பா.. அதுகளும் நடக்கிற யுத்தத்தால உள்ளம் பாதிச்சுப் போயிருக்குதுகள்... உவன் மோகன் எங்க... இன்னும் எழும்பேல்லையோ?

"சோதினையும் முடிஞ்சுது... வயல் வேலையும் இல்லை தானே! இழுத்துப் போர்த்திக் கொண்டுபடுத்திருக்கிறான்..."

"ம் போன முறையும் கம்பசுக்குப் போக காணாமல் போச்சு. இந்த முறை எண்டாலும் உச்சில் அம்பாள் அருள் கிடைக்குமோ?"

"சும்மா கடவுளைக் கூப்பிடாதையுங்கோ...உவன் என்ன படிக்கிறானே?.... சந்தியில நிண்டு பொடியளோட கும்மாளம்"... அம்மாவும், அப்பாவும் உரையாடுவதைக் கேட்டுக் கொண்டு படுத்திருந்தான் மோகன். இனியும் படுத்திருந்தால் வாங்கிக் கட்ட வேண்டும் என்பதை உணர்ந்து கொண்டு எழுந்தான். உள்ளமும், உடலும் சோர்வாக இருந்தது."

"ம்... கப்பஸ் என்ற பொற்றோருடைய ஆசை அவனுக்குச் சிரிப்பை வர வளைத்தது. ரியூசனுக்கே காசு தர முடியாதவை கம்பஸில விட்டுப் படிப்பிக்கப் போயினமாம்... அவர்களது ஆசை நியாயமானது. ஆனால் யதார்த்தமா? ஏதாவது வேலை செய்து குடும்பத்தை காப்பாற்ற வேண்டுமென்பது அவனது ஆசை. வீட்டுக் கஸ்டத்தைப் போக்கவேண்டுமானால் அதுதான் வழி. ஆனால் வேலை கிடைப்பது என்பது குதிரைக் கொம்பாக அல்லவா இருக்கிறது? லஞ்சம், அரசியல் செல்வாக்கு எதுவும் இல்லாமல். ம். அவனும் போடாத விண்ணப்பம் இல்லை. எனினும் நாட்டில் தலை விரித்தாடும் வேலையில்லாத் திண்டாட்டத்தின் முன்னே அவனது தராதரத்துக்கு வேலை கிடைப்பதாயில்லை.

காலைக்கடன்களை முடித்துக் கொண்டு வழக்கம் போல சந்திக்கு வந்தான். மோகன். எதிர்த்திசையில் ஒரு ட்ரக் வந்து கொண்டிருந்தது. அவனருகில் வந்து அது மெதுவாக நின்றதும் எறிட்டு நோக்கினான்.

அது போராளிகளின் வாகனம். அதிலிருந்து குதித்து அவனை நோக்கி வந்தான் ஒருவன். "ஓ...சீலன்" சீருடையில் மட்டுக்கட்டுவது கொஞ்சம் கஸ்டமாக இருந்தது.

சீலன் இவனுடைய நண்பன். பாலர் வகுப்பிலிருந்து ஒன்றாகப் படித்தவன். ஓ.எல். படிக்கும் போது இயக்கத்தில் சேர்ந்தவன். போன பின்னர் இரண்டு மூன்று தடவைகள் அவனைச் சந்தித்திருக்கின்றான்.

மோட்டார் சைக்கிளில், ட்ரக்கில், எல்பில் இப்படி ஒவ்வொரு முறையும் காணும் போது மோகனின் மனதிலும் ஒருவித எண்ணம் பிறக்கும். நானும் இயக்கத்துக்குப் போகவா? இவன் வளர்ந்த சூழ்நிலை, வீட்டு நிலை காரணமாக இவ்வெண்ணம் முளையிலேயே கிள்ளப்பட்டு விடும்.

"மோகன் அடிபாட்டுக்குப் போறன்.... திரும்பி வருவனோ எண்டது வந்த பிறகு தான் நிச்சயம்.. உன்னைக் கண்டது மகிழ்ச்சி... வீட்டில் சொல்லாத... பயப்படுங்கள். எப்படி இருக்கினம்?"

"சுகமாக இருக்கினம்"... என்ற மோகன் அவனைப் பெருமிதத்துடன் பார்த்தான். "உன்னைப் பார்க்கத்தான் ஆசைப்படுகினம்..." யூனிபோம் போட்டு மிசின் கண்ணும் கொண்டு சிமாட்டா நடந்து வந்த சீலனைப்பார்க்கப்பார்க்க இவனுக்கு ஆசையாக இருந்தது.

'தோற்றம் சின்னன் எண்டாலும் ஆளின்ற உசார் கண்ணில தெரியுற தீவிரம்.. இவர்கள் இந்த மண்ணின் மைந்தர்கள் என்று நினைத்துக் கொண்டான் மோகன். உலக இன்பத்தைத் துறந்து தமக்காக வாழாது பிறர் வாழ தம் வாழ்வைத் தியாகம் செய்து.. எங்க அடிபாடு... ஆனை யிறவே?"

"அது ரகசியம்... எப்ப அடிபாடு எண்டு தெரியாது... எந்தக் காம்பாகவும் இருக்கலாம்... எந்த நேரமும் நாங்கள் தயாராக இருக்கிறம்... இந்தக் கிழமைக்குள்ள மாவீரர் தினத்தோட நடக்கும்... கேள்விப்படுவாய் தானே... அவன் உற்சாகமாகச் சிரித்தான். "பயப்படாமல் சொல்லுறாய்...... ஒவ்வொரு சண்டையிலும் எத்தனை பேர் சாகினம்?"

"இது எங்கட தேசம் மச்சான்... எதிரி இதை ஆக்கிரமித்து அட்டூளியம் செய்கிறான்... இப்படியே விட்டுக்கொண்டே போனால் எங்கட இனமும் இருக்காது... மண்ணும் இருக்காது... நான் மட்டுமே...? என்னைப் போல எத்தனை ஆயிரம் பொடியள்.....! அவன் அவசர அவசரமாகச் சொல்லிவிட்டு "நான் போட்டு வாறன்..." என்றபடி ஓடிச் சென்று 'ரக்கில்' ஏறி கை காட்டினான்.

ஓடிச்சென்று தானும் ஏறலாம் போலிருந்தது மோகனுக்கு ஒரு கணம் தான் அப்புறம் எல்லாம் புஸ் வானமாய்.... "ம்..அம்மா அழுவா...அக்கா தாங்க மாட்டா...ம்....வசந்தியை விட்டிட்டு"...

சீலன் போய் இரண்டு மூன்று நாட்களில் ஆனையிறவு அடிபாடு தொடங்கியதாக செய்திகள் வந்தன.கனவில் கூட நினைத்துப் பார்க்க முடியாது வெற்றிகளைக் குவித்துக் கொண்டு போராளிகள் முன்னேறிப் பாய்ந்த செய்தி தமிழ் மக்களின் மனங் குளிர வைத்தது.

ஓயாத அலை ஓய்ந்த போது தாயகக் கழுத்தை நெரித்துக் கொண்டிருந்த கூலிப்படை பல தசாப்தங்களுக்குப் பின்னர் முற்று முழுதாக விரட்டப்பட்டிருந்தது.

சீலனுக்கு என்ன ஆனதோ என்று நினைத்தபடி, மோகன் பத்திரிகையில் மாவீரர்களின் பெயரைத் தேடியபோது சீலனின் பெயர் இருக்கவில்லை என்பது நிம்மதியளித்தது. எனினும் வாழவேண்டிய வயதில் வீர தியாகம் புரிந்த பல தன் வயதை ஒத்த போராளிகளுக்காக கண்ணீர் சிந்தினான்.

நாட்கள் நகர்ந்தன. அடுத்த முறை சீலனை சில மாதங்களுக்குப் பின்னர் சந்திக்க முடிந்தது. கெந்திக் கெந்தி நடந்து வந்து கொண்டிருந்தான். ஒரு கால் தொடைப் பகுதிக்குக் கீழ் வெட்டப்பட்ட நிலையில் அதே பழைய உற்சாகத்துடனும், உறுதியுடனும் நண்பனைப் பார்த்துச் சிரித்தான். சீலனின் செயற்கைக் கால் முட்டுக் கொடுத்துக் கொண்டிருந்தது.

மோகனுக்கு அழுகை வந்தது. கூடவே பெருமிதம்.

"இப்போது என்ன செய்கிறாய்?"

"கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருக்கிறன்" காலை யுத்தத்தில் இழந்து விட்டமையினால் அடிபாட்டுக் குறாப்பில் இருக்க முடியவில்லை...."

மோகன் மௌனமாக அவனை நோக்கினான்.

"எங்கட மண்ணில இலட்சக் கணக்கான நிலக் கண்ணிகளை எதிரி புதைச்சு வைச்சிருக்கிறான். இதை நாம் அகற்றாது விட்டால் எத்தனையோ அப்பாவி மக்களுடைய கால் பறிபோகும்.... உயிரிழப்புக்கள் ஏற்படும்... என்னால இயன்ற பணியை நான் செய்யிறன்...

காலை இழந்தபின்னரும் தன் மக்களுக்காக சேவை செய்யும் அவன் எங்கே? உலக இன்பங்களைத் தேடி ஓடும் நான் எங்கே? என்று நினைத்த மோகனுக்கு குற்ற உணர்வு மனதை உறுத்தியது.

"மச்சான்... எங்கட பூமி எங்கும் நெல்லு விதைச்ச மாதிரி நிலக்கண்ணி விதைக்கப்பட்டிருக்கு... இவற்றை எல்லாம் அகற்ற ஆளணி தேவை..."

நீயும் வருகிறாயா? என்று அவன் கேட்காமல் கேட்கிறானா? ஓ.. புனிதமான தொழில் இதனால எத்தனை உயிர்களைக் காக்கலாம்... அங்கவீனமாவதைத் தடுக்கலாம்... மோகன் பலவாறு யோசித்தான்."

"சம்பளம் கொடுக்கிறம்... தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின்ர கண்ணிவெடி அகற்றும் பிரிவுக்கு ஆளணி போதாது.." "சீலன் தொடர்ந்து சொல்லச் சொல்ல இவனது மனதில் ஒரு வித உத்வேகம் பிறந்தது. போராடத்தான் போகவில்லை. இதையாவது செய்யலாம்..?

"நானும் வாறன் மச்சான்.."

நண்பனைப் பெருமிதத்தோடு நோக்கிய சீலன், வீட்டில் சொல்லிப் போட்டு வாற முதலாம் திகதியிலிருந்து வாறன்...

சீலன் போய்விட்டான்.

மோகன் தான் செய்யப் போகும் வேலை விபரம் பற்றி வீட்டில் கூற விரும்பவில்லை. கண்ணிவெடி அகற்றுவது ஆபத்தான தொழில் என்று விடமாட்டார்கள். வீட்டுக்குச் சென்ற மோகன் அம்மாவிடம் தனக்கு வேலை கிடைத்து விட்டதாகக் கூறினான்.

முருகேசர், இலட்சுமி, தங்கை யசோ எல்லோரும் மகிழ்ந்தனர். இனி அடுப்புப் புகையுமல்லவா?

வேலையைப் பொறுப்பெடுத்த மோகனுக்குப் பெருமிதமாக இருந்தது. நவீன உபகரண வசதிகள் இன்றி தாமாகவே தயாரித்த உப கரணங்கள் மூலம் அங்கு நுணுக்கமாகவும், பொறுமையாகவும் செயற்பட்டு நிலக்கண்ணிகளை அகற்றிக் கொண்டிருந்த இளஞர்களை வியப்போடு பார்த்தான் மோகன்.

சீலன் அவனுக்கு கண்ணிவெடி அகற்றும் நுணுக்கங்களைச் சொல்லிக்கொடுத்தான். ஆபத்தான வேலையை தற்பாதுகாப்புடன், பாதிப்பு ஏற்படா வண்ணம் செய்யும் லாவகத்தை வெகுவிரைவிலேயே மோகனும் கற்றுக்கொண்டான்.

"வேலை கஸ்ரமா" என்று கேட்டான் சீலன்.

"இல்லை மச்சான்... கஸ்ரமோ, சுகமோ எங்கட மனதில தான் எல்லாம் தங்கியிருக்கு. மனிதனாகப்பிறந்து சொகுசா வாழ்கின்றதுதான் இன்பம் என்றில்லை. இந்தச் சமூகத்துக்கு சேவை செய்வதில் கிடைக்கும் இன்பம் பேரின்பம்".. மோகன் நிறைவோடு கூறினான.

# குறுங்கதைகள்



## தராசும், மனசும்

நிவாரண முத்திரைப் புள்ளிக்கு உணவுப் பொருட்கள் வழங்கும் முடிவுத் திகதிக்கு அடுத்தநாள்.

முத்திரைப் புள்ளிகளை ஒட்டி விநியோகம், மீதி இருப்பு, கணக்குகள் எல்லாம் சீர் செய்து தலைமைப் பணிமனையில் காசாளரிடம் ஒப்படைக்கவேணும்.

அதன்படி கிளை முகாமையாளர் எல்லாவற்றையும் கொண்டு போய் கொடுத்துவிட்டு வந்த சிறிது நேரத்தில் இரு அங்கத்தவர்கள் முத்திரை கொண்ட ஒருவர் தான் பொருட்களை எடுக்காமல் விட்டுவிட்டாத ஓடோடி வந்து தருமாறு கேட்டார்.

ப்சு நீங்கள் என்னையா? இவளா நாளும் எடுக்காமல் விட்டிருக்கிறியள். ம்.. இப்ப என்ன செய்யிறது. நான் கணக்கெல்லாம் முடிச்சிட்டன். ஏன் இவளவு நாளும் எடுக்கேலை?

நிவாரணம் கிடைக்காத கவலையில் வந்தவரின் முகம் இருளடைந்தது.

ஐயா, நீங்களொருக்கா கெற் ஒப்பீசுக்குப் போங்கோ அங்கை காசாளர் நிப்பார். இப்பிடிச் சொல்லுங்கோ. எனக்கு இன்ன கிளையிலதான் நிவாரணம். மனேச்சர் கணக்கு முடிச்சிட்டாராம். அது தான் உங்களிட்டை விட்டவர் நீங்கள் புள்ளியை வெட்டியெடுத்தால் தான் சாமான் தருவராம் எண்டு என்னைச் சொல்லிவிட்ட தெண்டு மினைக் கெடாமல் ஓடிப்போய் கேட்டுக் கொண்டு வாங்கோ. அவரும் கணக்கு முடிக்கக்கிடையில கெதியாப் போங்கோ.

அவருக்காக மிகவும் இரக்கப்பட்டு பரிந்து பேசினார் கிளைமுகாமையாளர்.

இவ்வார்த்தைகள் முழுவதையும் உள்வாங்கி ஏளனமாய் நகைத்துவிட்டு பிறகு.

"உண்மையில் மனேச்சர் கதைத்தது அந்தக் குடும்பத்தவன் மீது உண்மையான அக்கறை கொண்டல்ல. "பயிருக்கு இறைத்த நீர் புல்லுக்கும் பொசியுமல்லவா" என்ற எண்ணத்தினாலாகும். எனக்கெல்லோ தெரியும் இவையின்ர வெட்டு விளையாட்டு" என்று சொல்லிற்று தராசு.

## வீட்டிலிருந்தும்...

அந்த வீட்டின் ஒரு அறைக்குள் நான்கு கிடாரங்களும் வேறும் பல சமையல் பாத்திரங்களும் ஒட்டறை படிந்து மிகவும் அழுக்கேறிக் கிடந்தன கவனிப்பாரற்று.

அந்த அறைக்கதவு என்னேரமும் பூட்டப்பட்டேயிருக்கும். எப்பாலும் அரிதாகவே திறக்கப்படும்.

"இரு நன்மையும் ஒரு தீமையும் என நடந்தேறிவிட்டன இந்த வீட்டில். ஆனால் எம்மை ஒரு சபைக்குத்தானும் சமையலுக்குப் பயன்படுத்த வில்லையே என ஒரு கிடாரம் தன்னருகில் இருந்த சில்வரினாலான கறிச்சட்டியைச் தட்டிச் சொன்னது வியப்பாய்."

காரணம் புரியாமல் ஒன்றையொன்று பார்த்து விழித்தன பாத்திரங்கள்.

இதுகளின் குழப்பத்தை முகட்டு வளையில் இருந்தவாறே கண்ணுற்ற பல்லி சொல்லிற்று.

"மாபெரும் இடப்பெயர்வின் போது திக்கொன்றாய் ஓடிப்போய் சில மாதங்களின் பின் ஊர் திரும்புகையில், பிந்தி வந்த அயலவர்களின் உடமைகளை, முன்னதாக ஊர் திரும்பியவர்களில் சிலர் அபகரித்து வீட்டிற்குள் வைத்துவிட்டு இப்போது அதே அயலவர்களும் நிற்கின்ற சபை சந்திச் சமையலுக்கு எப்படி உங்களை வெளியே எடுக்கலாம்" என்று.



ஆவரங்கால் சுதன்

## அறிவின் ஆளுமையில்...

"சாளினி சாப்பிட வாவனம்மா" அம்மா அடுக்களையில் இருந்து கூப்பிட்டால். அவசரமாக எதையோ எழுதிக் கொண்டிருந்த சாளினி "பொறுங்கோ அம்மா, வாறன். வீட்டுப்பாடம் செய்து கொண்டிருக்கிறேன்." என்று சொல்லிக்கொண்டே எழுத்தில் கவனமாக இருந்தாள்.

"நாலாம் ஆண்டு படிக்கிற பிள்ளை இப்படிக் கஷ்டப் பட்டுப் படிக்குது. நாங்கள் அந்தக்காலத்திலை இப்படியே படிச்சனாங்கள்" அம்மா மனத்திற்குள் இரை மீட்டுப் பார்க்கிறாள்.

எங்கிருந்தோ ஓடி வந்த கண்ணன் அக்காவுக்கருகில் முழந்தாளிட்டு அமர்ந்து கொண்டான். என்ன எழுதுகிறான். குனிந்து பார்த்தான். "காகத் கரையும்" என்ற வரி அவன் கண்களில் பட்டது. "அம்மா! இஞ்சை பாருங்கோ இவள் என்ன எழுதி வைச்சிருக்கிறாளெண்டு"

"ஏனடா? என்னண்டு சொல்லன்" இது அம்மாவின் அவசரம்.

"காகத் கரையுமாம். உந்த மழையெல்லாம் நனையிற காகம் எப்பவேனும் கரைஞ்சதே?"



ஆண்டு இரண்டில் படிக்கும் இவனுக்கும் இந்த மாதிரி..... அம்மா ஆச்சரியத்தில் அமிழ்ந்து போனாள்.

மாவன்னா

## அவரவர் தகமை



காடு....

குயில் இனிமையாகப் பாடிக் கொண்டிருந்தது. இசையின் ரீங்காரம் வனத்தை ரம்மியமாக்கியது.

குயிலிருந்த மரத்தின் கீழ் நின்ற மயில் ஒன்று இருந்தாற் போல் பெருங்குரலில் அகவத் தொடங்க... வனம் அபஸ்வரத்தில் ஆழ்ந்தது பாடுவதை நிறுத்திய குயில்... மயிலை நோக்கி... 'ஏன் இப்படி அலறுகிறாய்' என்று கேட்டது. 'அலறுகிறேனா... பாடுகிறேன்... ஏதோ எனக்கு தெரிந்த குரலில் பாடுகிறேன்' என்றது மயில் ...

ஆனால் நான் ஏதோ எனக்குள்ள தோகையை விரித்து ஆடுவதில் லையே' என்றது குயில் அதன் பின்னர் மீண்டும் குயில் பாடத் தொடங்கியது.

துவாரகன்




குழம்பிய தலைகளில்
வியர்வை காய
இன்னமும் இருக்கிறது பொழுது.
போர் ஓய்ந்துவிட்டதாக
எல்லோரும் சொல்கிறார்கள்.
வெளிகளில் காற்றைமறித்து
துப்பாக்கிகளின் ஓசையை
இப்போது
காணவில்லைத்தான்[அரிதாக]
வனங்களின், அழியிலும்,
இழந்துபோன நகரங்களின்
அயலிலுள்ள
காவலரண்களிலும்
பதுங்கியிருக்கிற துப்பாக்கிகளுக்கு
ஓர்மம் இல்லையென்று
யார் சொன்னது[?]
பிசுபிசுத்த குருதிமழையில்-ஈக்கள்
மொய்க்கச் செய்த காலத்தை
யாரும் சபிக்கவில்லை.
எங்களைத் தவிர.
[நாங்கள் மறக்கவில்லை
மறக்கவும் முடியவில்லை]
மரங்களையும் முறித்து
பறவைகளையும் கலைத்தாயிற்று
பிரிந்து தொங்குகிற வாழ்வை
நகரங்கள் பெற்ற பொழுது
படையினர் துரத்த
மக்கள் போனார்கள்...
வனத்துக்கும் வானத்துக்கும்
யுத்தம் நிறுத்திய பொழுது


மீளவும் அவர்கள் வர
படையினர் அனுமதிக்கிறார்களில்லை.
சூரியன் இறங்கிய
ஆற்றுப் படுக்கைபோல -வாழ்வு
பிழந்து கிடக்கிறது.
கருகிய புற்களின் வயலில்
தண்ணீர் துளிர்ப்பதாய்
எந்தக் கானலைக்கொண்டு
நம்பவைப்பது[?]
வனங்களுக்கயலில்,
தெருவின் புழுதியை - மரங்களும்
கையேற்றதாயிற்று-இனி
புழுதிக்குப் பதிலாய் எதைப்போட-அல்லது
இன்னொரு புழுதியைப் போடலாம்.
மரங்கள் பாவம்
அவர்களின் கதியை
நினைப்பதை விடுவோம்-துரத்திய
கிராமங்களின் சிதையில்
வாழ்வு கிடந்ததை .....
எல்லோரும் அறிவோம்.
வனங்களைப் பிழந்து
படையினர் வைத்த
பொறிவெடிகளை -இன்னமும்
கால்கள் அறுவடைசெய்தபடிக்கு
இருப்பதையும் அறிவோம்.
மீளவும் நாங்கள்
கிராமங்களுக்குப் போகவும் முடியவில்லை.
[மிதிவெடிகள் கவனம்-UNHCR]
வாழ்வை எழுப்பி நிறுத்த
தடைகளின்றி வந்து குவிகிற-எந்த
இரும்புக்கம்பிகளாலும் முடியவில்லை
[சிமெந்தும் விடுகிறார்கள்]
அகலத்தெரிகிற வானத்தைப்போல
நாங்கள் நினைக்கிறோம்.
புன்னகைக்குப் பதிலாய்
இன்னுமொரு புன்னகையை
கைலாகுக்குப் பதிலாய்
கைலாகுகளையும்
முகங்களும், கைகளும் தந்தபோதும்
உண்மைகள் என்னவோ
இதயத்தில் முள்ளாய்
செருகிக்கிடக்கிறது-உண்மையில்
குழம்பிய தலைகளில்
வியர்வை காய
இன்னுமும் இருக்கிறது பொழுது.

முல்லைக்கமல்

# இளையநாதம்

## முல்லாவின் வீரம்

(நகைச்சுவைக்கதை)



யுத்த களத்திலிருந்து திரும்பி வந்திருந்த படைவீரன் ஒருவன் வீதியில் நின்று நண்பர்கள் பலருடன் பேசிக் கொண்டிருந்தான். போர் முனையில் நடந்த தன் வீரச் செயல்களைப் பற்றி நண்பர்களுக்கு கூறிக் கொண்டிருந்தான்.

"ஒரு முறை எதிரிகளிடம் தான் தனியாக மாட்டிக் கொண்டு விட்டேன். இனித் தப்பிக்க முடியாது எனத் தெரிந்தும் என் கடமையை நான் செய்ய வேண்டுமல்லவா? என்னை அன்னியச்சிப்பாய்கள் இருவர் குறிவைத்துப் பதுங்கிவந்து கொண்டிருந்தனர். நான் பதுங்கித் தப்பிக்க முயல்வது போலப் பாசாங்கு செய்து ஓரிடத்தில் ஒளிந்தேன். அதைக் கண்ட எதிரி என் மீது பாய்ந்தான் உடனே எனது வாளை எடுத்து ஒரே வெட்டில் அவன் தலையத் துண்டாக வெட்டினேன்'' என்றான் அந்தப்படை வீரன்.

அதைக் கேட்ட முல்லா ''நானும் போர் முனையில் இதை விடப் பல சாகசங்கள் செய்திருக்கிறேன் என்றார்.'' அப்படியானால் உங்கள் அனுபவத்தைக் கூற வேண்டும் என்றனர் கூட்டத்தினர்.

"ஒரு முறை போர் முனையில் அன்னியச் சிப்பாய் ஒருவன் என்னிடம் வசமாக மாட்டிக்கொண்டான். உடனே என்னுடையவாளை எடுத்து அவனுடைய இரண்டு கால்களையும் ஒரே வெட்டில் வெட்டிவிட்டேன் "என்றார் முல்லா.

"அப்படியா! நீங்கள் அந்தச் சிப்பாயின் தலையை வெட்டாமல் கால்களை மட்டும் வெட்ட காரணம் என்ன?'' என்றனர் அக்கூட்டத்தில் நின்ற ஒருவர்."அதுவா என்னால் வேறு என்ன செய்ய முடியும். எனக்கு முன்னால் எவனோ அவனுடைய தலையை வெட்டிவிட்டான். எனவேதான் நான் அவனுடைய கால்களை வெட்டினேன்'' என்று கூறி விட்டு வீட்டை நோக்கிச் சென்றார் முல்லா.

கௌரீசன்



## விடுகதைகளும் விடைகளும்

1) பெட்டியைத் திறந்தால் பூட்ட முடியாது.
2) போவான் வருவான் ஒற்றைக்காலில் நிற்பான்.
3) அசைவான் மடங்குவான் ஆனால் புடுங்கமுடியாது.
4) வட்ட வட்டத் தட்டுக்குள் விட்டதெல்லாம் பாம்புக் குட்டி.
5) கிணத்துக்குள் குதித்தவன் கும்மாளம் போடுகிறான்.
6) வெள்ளை மனிதனுக்கு கறுப்பு தொப்பி.
7) ஒற்றைக்கால் குள்ளன் அள்ளத்தான் பயன்படுவான்.

**விடைகள்**

*1) தேங்ககாய்.*
*2) கதவு.*
*3) விரல்.*
*4) இடியப்பம்..*
*5) பலகாரம்.*
*6) தீக்குச்சு.*
*7) அகப்பை.*

சந்திரன்,
திருகோணமலை.

## பொது அறிவு

01. முதன் முதலில் பொலிஸ் சேவை எங்கே ஆரம்பிக்கப்பட்டது?
பிரிட்டனில்.
02. சமாதானத்திற்காக நோபல் பரிசு பெற்ற அமெரிக்க போர்த்தலைவர் யார்?
மார்ட்டின்லூதர்கிங்
03. செஞ்சிலுவைச் சங்கம் எத்தனையாம் ஆண்டு நிறுவப்பட்டது?
1863ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.
04. பயங்கரவாதச் சட்டம் எத்தனையாம் ஆண்டு கொண்டு வரப்பட்டது?
1979ஆம் ஆண்டு.
05. ஐ.நா. சபையில் இசைக்கச்சேரி செய்த முதல் தமிழ் பெண் யார்?
M.s.சுப்புலட்சுமி.
06. அமெரிக்காவிற்கு சுதந்திரம் எத்தனையாம் ஆண்டு கிடைத்தது.
1776ஆம் ஆண்டு.

கோசலா. மகான்,
தரம் - 11A, கிளி/வட்டக்கச்சி.ம.வி.

## உலகின் முக்கியமான எரிமலைகளும் அமைந்துள்ள இடங்களும்

| | |
|---|---|
| 01) பரிக்குற்றின் எரிமலை | - மெக்சிக்கோ. |
| 02) சிலி எரிமலை | - சில்லி (தென்னமெரிக்கா) |
| 03) பீலி எரிமலை | - கியூபா. |
| 04) ஹக்லா எரிமலை | - ஐஸ்லாந் |
| 05) விசூவியஸ் எரிமலை | - இத்தாலி. |
| 06) எட்னா எரிமலை | - ஆபிரிக்கா (அட்லஸ் மலைப்பாங்கு) |
| 07) கறக்கற்று எரிமலை | - இந்து சமுத்திரப் பகுதி. |
| 08) பியூஜியாமா எரிமலை | - ஜப்பான். |

நிஷாந்தி கிருஷ்ணா . இ
தருமபுரம் ம.வி.

## பூர்வீக குடியிருப்புகளும் நாடுகளும் சில

மரவீடு ~ பிலிப்பைன்ஸ்
புல்வீடு ~ விறவாய்
பற்றைவீடு ~ அவுஸ்ரேலியா
மூங்கில்வீடு ~ கலிபோர்னியா
செங்கல்வீடு ~ கினா
காகிதாகிவீடு ~ யப்பான்
குகைவீடு ~ ஆபிரிக்கா
சுரங்கவீடு ~ சைபீரியா

ப.நிரோஜிதன்,
புன்னைநீராவி,
விசுவமடு.



## நகைச்சுவை

புஸ்பம்:- *வஸ் கொண்டைக்ரரை கலியாணம் செய்தது தப்பாய்ப் போச்சுதடி*

கமலம்:- *ஏனடி என்னாச்சு*

புஸ்பம் :- *பின்னை என்ன வீட்டு வாசற் படியில் கூட நிக்கவிடுறார் இல்லை. உள்ளுக்குப் போ என்று கத்திக் கொண்டு நிக்கிறார்.*

இராஜ்குமார்,
மு/புதுக்குடியிருப்பு. ம.வி.

## வாரம் ஒரு குறள்



நாம் எல்லோரும் சந்தோஷமாக வாழ்வதையே விரும்புகின்றோம். துன்பத்தைக் கண்டு அஞ்சுகின்றோம். இப்படி இருக்கும் போது அடுத்தவர்களுக்குத் துன்பம் விளைவிப்பது எந்த வகையில் நியாயமாகும். அவர்கள் துன்பமடைய நாம் சந்தோஷப்படலாமா? ஆகவே எமது சந்தோஷத்திற்காக அடுத்தவருக்குத் துன்பம் விளைவிப்பது கொடுமையிலும் கொடுமையாகும். இதனையே வள்ளுவர் கூறிக்கொண்ட குறளில் இருந்து தெரிந்து கொள்ளலாம்.

"தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது
இன்னுயிர் நீக்கும் வினை"


எம்முயிர் போவதாயிருந்தாலும் இன்னொரு உயிரைக் கொல்லுதல் கூடாது என்பதே அவரின் கருத்தாகும்.

## தமிழீழத்தில் உள்ள கனிய வளங்கள்.

| | |
|---|---|
| யாழ்ப்பாணம்:- | முருகைக்கல்,சுண்ணக்கல், சிலிக்கன் |
| கிளிநொச்சி:- | உப்பு |
| முல்லைத்தீவு:- | ஓட்டுக்களிமண், இல்மனைற், உப்பு |
| வவுனியா:- | காரீயம் |
| மன்னார்:- | சீமேந்துக்களிமண், முத்து,உப்பு |
| திருகோணமலை:- | இரும்பு, இல்மனைற், உப்பு, முருகைக்கல் |
| மட்டக்களப்பு:- | இல்மனைற், முருகைக்கல். |
| அம்பாறை:- | ஓட்டுக்களி |

கு.தமிழ்ப்பிரியா,
கிளி/இராமநாதபுரம்.ம.வி.

## குறுக்கெழுத்துப் போட்டி 13




**இடமிருந்து வலம்**

01. கடலும் கடல் சார்ந்த இடமும்.
10. ஓர் மிருகம்.
13. கணவன் மனைவி குழம்பியுள்ளது.
22. ஐந்தொழில்களில் ஒன்று இறுதி எழுத்தை இழந்து குழம்பியுள்ளது.
31. அரவம் இறுதி எழுத்தை இழந்துள்ள்து.

**மேலிருந்து கீழ்**

01. மீன் இனங்களில் ஒன்று.
03. குளம் குழம்பி உள்ளது.
06. எட்டில் ஒரு பங்கு.
08. புதுமை.
10. பங்கிடுதல் குழம்பி உள்ளது.
23. பூமி.

### குறுக்கெழுத்துப்போட்டி இல.11 இன் விடைகள்

**இடமிருந்து வலம்**

01. காமதேனு.
08. துறவரம்.
13. இரத்தல்.
15. திரிபிடகம்.
27. அபயம்.
32. பூ

**மேலிருந்து கீழ்**

01. கார்த்திகை.
02. மதுரம்.
06. பாசம்.
17. இடபம்.
22. தம்பி.
24. கயல்.

குறுக்கெழுத்துப்போட்டி இல.11 இன் பரிசுக்குரியவர் ☞ மா. பிரதீஸ்,
புன்னைநீராவி,
விசுவமடு,

இளையவர்களே! ☞ மேலுள்ள கட்டத்தை வெட்டி சரியான சொற்களை இட்டு நிரப்பி அனுப்புங்கள்.

குறுக்கெழுத்துப்போட்டி இல.13
வெள்ளிநாதம்
ஈழநாதம்.
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.

☞ ஒரு முட்டாளைப் பாராட்ட, அதி முட்டாள் ஒருவன் எப்போதும் கிடைப்பான். - நிக்கோலா புவாலோ.

# பானைபிடித்தவள் பாக்கியசாலி

'பொறுமை என்னும் நகை அணிந்து பெருமை கொள்ள வேண்டும் பெண்கள் பொறுமை என்னும் நகையணிந்து....' இது கே.பி. சுந்தராம்பாள் காலத்தில் அவரே பாடிய பாட்டு. இதுக்கு முதலே அவ்வையார், வள்ளுவர், பட்டினத்தார் அவையிவையெண்டு நிறைய பொம்பிளையளுக்கே பொம்பிளையரைக்கொண்டு பெரிய மனசுபண்ணிக் கொஞ்சம் அறிவுப்பாட்டுகளை தந்திருக்கினம். இதிலையும் பாருங்கோ வள்ளுவர் தன்ரமனிசி செத்த நேரம்

**"அடிசிற்கினியாளே அன்புடைய மாதே**
**பதிசொற்தவறாங்த பாவாய்- அடிவருடி**
**பின் தூங்கி முன் எழும்பேதையே-**
**போதியோ என்தூங்கும் என்கண்இரா."**

அட அட அட என்ன வாழ்க்கை அடிசிலுக்கு (உணர்வுக்கு) இனியவள், அன்புடையவள், பதி (கணவன்) சொற்தவறாத பாவை - அடிவருடிச்சொச்சோ சொச்சோ. கால்களை வருடிவிட்டு அவர் உறங்கின பிறகு தூங்கி அவரெழும்ப முதல் எழும்பி பேதையாய் இருந்தவளே-போதியே...

இப்படி ஒரு பெண் இல்லாம அவர் துயரப்படயிருக்க.... என்ன துயரமாம்... ராவைக்கு நித்திரை வராதாம்...!

அவ்வையாரும் தனக்குத்தான் கலியாணம் வேண்டாம் எண்டவர். மற்றப் பெண்களுக்கு எப்பிடி வாழுற தெண்டு சொல்லித்தான் இருக்கிறா.

சரி இதெல்லாம் அந்தக்காலத்துப் பெண்டுகளை அடக்க ஒடுக்கமா வச்சிருக்க தேவைப்பட்டதுதான். இப்பிடி சங்ககாலம் முடிய பண்டிதர் பட்டம் பெறாமலே சில சித்தர் பாடல் பாடினவை. இதில வாணாள் முழுக்க பெண்டுகளோட காலந்தள்ளின பட்டணத்தார் பொம்பிளையளெல்லாம் பிசாசுக் கூட்டமெண்டுபோட்டு தன்ர தாய் மட்டுந்தான் திறமானவள் எண்டு முன்னுக்குப்பின் முரணாயெல்லோ பாடி வைச்சிட்டார்.

சரி பொம்பிளையளை ஒரு கருத்தியல் மரபுக்க அழுத்தி வைச்சிருக்கிறதில இவையளுக்குப்பிறகு சினிமா முக்கியமான இடத்துக்க வந்திட்டுது. 'கணவனே கண்கண்ட தெய்வம்' படம் வரவுக்கு முதல், 'சதி அனுசூயா' 'நளாயினி' 'சாவித்திரி,' 'சந்திரமதி,' எண்டு கற்புக்கரசியளின்ர கதையளப்படமாக்கி இப்பிடி இப்பிடி ஒரு பொம்பிளை இருந்தா கடவுளே இறங்கி வழிபடுவார் எண்டு அந்த நாளயில அறியாத பெண்டுகளப்பத்தினியாக்கி விட்டினம்.

இப்படி இல்லாத ஒரு படம் 'மந்திரிகுமாரி' இதில கொடுமையள் செய்யிற கணவனை மனைவி கொலை செய்யிறமாதிரி ஒரு காட்சி. தப்பி விழுந்து வெளியால அனுப்புப்பட்டிட்டுது.

**புருசன் வீட்டில வாழப் போகும் பெண்ணே**
**தங்கச்சி கண்ணே- சில**
**புத்திமதிகள் சொல்லுறன் கேளு முன்னே-**
**மாமானாரை மாமியாரை மதிக்கணும்-**
**உன்னை மாலையிட்ட கணவனையே துதிக்கணும்.**


எட பரவாயில்லை. காலம் போகப்போக 'குணசுந்தரி' எண்டொரு படம் தேப்பன்ராசா தன்ர நாலு இளவரசியளக் கூப்பிட்டு ஒரு கேள்வி கேட்கிறார். என்னண்டா... நீங்கள் நாலுபேரும் எண்டைக்கும் எனக்கு கட்டுப்பட்டு நடப்பியள்தானே? எண்டு எல்லாரும் ஓமெண்ண கடைசி குணசுந்தரி மாட்டனெண்டு போட்டாள். 'கலியாணம் செய்யுமட்டும் உனக்கு கலியாணம் செய்தபிறகு கணவனுக்கு கட்டுப்பட்டவள் நான்' எண்டிட்டாள். ராசாவுக்கு கோவம் வந்து அவளுக்கு ஒரு அநாதைக் கிழவனைக் கட்டிவைக்க அவ தன்ர பதிபக்தியால எல்லாரையும் பணிய வைக்கிறாளனக்கு இப்பவும் நினைவிருக்கு.... என்ர பூட்டியாச்சி இவளெல்லோ பொம்பிளை எண்டு வாயூறிச் சொல்லுவா.

அங்கால கணவனே கண்கண்டதெய்வம், மணாளனே மங்கையின் பாக்கியம், கற்புக்கரசி எண்டு கடவுள்களையும் சனத்தையும் சேர்த்து அதுதான் இந்த பெண்டுகளின்ர கற்பின் மகிமையை?! பேசும் படங்களாவந்து அதிலயே எங்கடபெண்டுகள் அமுங்கிப் போச்சினம். ஆச்சா

புராணப் படங்களின்ர காலம் முடிய சமூகக் கதையள் வரத்துவங்கிச்சு. நான் நினைக்கிறன் தேவதாஸ் தான் தமிழ்ழ முதல் சமூகப்படம். இஞ்ச ஒரு பெண் எப்படி பெரியவர்களை மேவி நடக்க வேணும் எண்டதையும் அதால வந்த துயரங்களையும் வச்சு பின்னின கதை. அப்பிடியே 'வாழ்க்கை' 'மூன்று பிள்ளைகள்' 'சம்சாரம்' எண்டு படங்கள் வந்து சக்கைப்போடு போட்டாலும் பொம்பிளை இப்படித்தான் இருக்கலாம் எண்டத்தை மட்டும் இறுக்கமா வைச்சிருந்ததைக் காணலாம்.

கணவன் வேறசின்ன வீடு வைச்சிருந்தாலும் அவர் திரும்பி வரயுக்க கால்லவிழுந்து "என்னங்க... என்னை மன்னிச்சு ஏத்துக்கிடுங்க...'

எண்டு கெஞ்சுறதையும், தாலி பெண்ணுக்கு வேலி எண்டு பாடுறதையும் மட்டும் விடயில்லை. இந்த வரிசையில எங்கட எம்.ஜி. ஆர். தானே கதைவசனம் தயாரிப்பு எல்லாஞ் செய்து எடுத்த படம் 'கணவன்' இதில அவர் பொம்பிளையளுக்கெண்டு தனித்தனிப் பொன் மொழிகளை உதிர்த்தார். தன்னம்பிக்கையோட வாழவெளிக்கிட்ட பெண்ணை "பெட்டைக்கோழி கூவி விடியிறதில்லை" என்று அடக்குகிறார். சேவல்க் கோழிகூவியும் விடியிறதில்லை எண்டு அவருக்குத் தெரியாதே. பொம்பளை எண்டா அடக்க ஒடுக்கமா சேலைகட்டி தலையத்தலையப் பின்னிவிட்டு பூவைச்சு அப்பிடி அப்பிடி நடந்து வந்தா... எண்டது அவற்ற எதிர்பார்ப்பு.



அதுக்குப்பிறகு பெண்களை கொஞ்சம் மாத்தி தாலிய கழற்றிப்போடச்சொன்னது 'பாரதிராஜா'வின்ர 'புதிய வார்ப்புகள்' எட இந்தப்படம் பொம்பிளையளையே கொஞ்சம் ஆட்டங்காணவைக்க பாக்கியராஜா 'அந்த ஏழுநாட்களில்' அதை நிரவிப்போட்டார். படம் பாக்காதவைக்கு சோட்டா சொல்லுறன். ஒருதன்ர காதலிய இன்னொருவன் கலியாணம் செய்யிறான். தாய்சாகக் கிடக்கிறா. அவவின்ர ஆசைய நிறைவேத்தத்தான் கலியாணம் நடந்தது. முதலிரவில அவள்தான் வேறையாளை விரும்புறத சொல்லிப்போட்டாள். அப்ப கட்டினவன் 'அம்மா இன்னும் ஏழுநாள் தான் உயிரோட இருப்பா அவவுக்காக நீ என்ர மனைவியா இரு (நடி) பிறகு உன்ர காதலனட்ட உன்னைச் சேர்க்கிறன். எண்டுறான். சொன்னமாதிரி காதலனையும் சந்திச்சிட்டான். தாய் ஏழாவதுநாள் சாகிறா. அதுக்குப் பிறகு மனைவிய காதலனட்ட குடுக்கிறான். சந்தோஷமாத்தான் அவளும் போறாள். அப்பதான் பாருங்கோ 'க்ளைமாக்ஸ்' காதலன் சொல்லுறான் நீவா... ஆனா கழுத்தில கிடக்கிற தாலி என்ரயில்லை.. அதைக் குடுத்திட்டு வா எண்டு. 'டங்' இப்ப படத்தின்ர இசை மாறுது. உயர உயர நெஞ்சிடிக்கிற மாதிரிப் போகுது. கமரா படக்குப் படக்கெண்டு துடிக்குது. ஏன் ரசிகர்களை அந்தச் சூழலுக்க தள்ளுகினமாம். பிறகு பார்த்தா கதாநாயகி ஓவெண்டு கத்திக் கொண்டு முடியாது... முடியாது தாலிக்கழட்ட மாட்டேனெண்டு கதாநாயகன்ர கால்ல... மார்பில சரண்டர்!

இப்படித்தான் தாலியத் தூக்கி இது முடிய 'சிறை' எண்டாருபடம் விட்டானோ பிடி எண்டு வந்துது. குறைசொல்ல முடியாத தயாரிப்புத்தான். கடைசியில தாலியக் கழட்டிக் கடாசிவிட்டிட்டாள்.

தன்னைவிரும்பாத ஒருபெண்ணை திரத்திக்கொண்டு போய் அல்லது செல்வாக்க வைச்சு கலியாணம் செய்துபோட்டு நல்லவனா மாறுற கதாநாயகன் மாறப்பிறகு பெண்டுகள் மன்னிப்புக்கேட்டு சேருறது ஒரு ரகம். ஊர்வழியே சொல்லுவினமே கட்டுறவன் எப்பிடிப்பட்டவனோ அவனுக்கேத்தமாரி மாற வேண்டியது பொம்பளைக்கு நல்லது. அதுதான் பெருமை இந்தப் பெருமையில இருவர் உள்ளம் தொடங்கி சவாலே சமாளி ஊடாக ஏராளமான படங்களிலை சிவாஜிகணேசன் வெளுத்து வாங்கினார்.

பெண்களை முதன்மைப்படுத்தி 'ஆரவல்லி' வந்தது. இது புராணக்கதை பிறகு வனராணி எண்டொண்டு இதில வேட்டைக் காரியா அதாவது பெண் 'டார்சானா' வந்து அசத்தினது யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தவமணி. அவ காட்டுப் போட குதிரையில யெல்லாம் வர தன்ரமானம் போகுதெண்டு தமையன்காரன் திரைக்குத்துவக்கால சுட்டவனாம்.

அதுக்கும் பிறகு பெண்ணை முதன்மைப்படுத்தி வந்த படங்கள்ள கேயார் விசயா நடிச்ச 'வாயாடி திருடி சபதம்' போன்ற படங்கள்ள ஜெய்சங்கர் சோடியா நடிக்க அவருக்கு சரியான எதிர்ப்பாம். நல்ல படங்களா யிருந்து அதுகள் ஒவ்வொரு தியேட்டரா வேகமா ஓடிக்கடந்திட்டுது. சிலுக்குச் சுமிதா ஒரு நல்ல நடிகை. அடிக்க வராதையுங்கோ மெய்தான் அவவும் நினைத்ததை முடிப்பவள்.சிஐடி எண்டு ரெண்டு மூன்று படங்கள் பெண்ணை முதன்மைப்படுத்தி செய்தவா. ஆனா பெயில் இதெல்லாத்துக்கும் முதல் 'கண்ணாடி மாளிகை' ஜோதிராணி செய்தது பெயில்.

மல்லிகை என்மன்னன் மயங்கும் பொன்னான மலரல்லவோ-எண்ட பாட்டுக்காகப்படமோடினது. அந்தக் காலத்து தூக்குத் தூக்கியில ஒரு பாட்டு 'பெண்களை நம்பாதே கண்களே பெண்களை நம்பாதே.' எண்டொரு பாட்டு இதில ஒரு வாசகம்

**கண்டவரோடு கண்ணால பேசி காமுறும் மாது இந்த பூமியின் மீது கொண்ட கணவன் தன்னை கழுத்தறுப்பாள்**
**காரிகைரூபத்தில் காணும் பிசாசு-(பெண்களை)**

இது பழங்காலம் இதை தன்னையும் ஒரு பெண் எண்டு கருதாம மருமகள்மாருக்கு அடைமொழியாச்சொன்ன மாமியார் அப்ப இருந்தவை. இந்த இருவத்தோரம் நூற்றாண்டிலும் இந்த ஆணாதிக்க மனோபாவம் போகேல்ல எண்டதுக்கு ஒரு பாட்டு.

'பொம்பளங்க காதலத் தான் நம்பி விடாதே..... நம்பிவிடாதே'

எவராலும் இலகுவில் கிரகிச்சுபோடுறமாதிரி அதுக்கு ஒரு மெட்டும் எல்லே போட்டிருக்கு. இந்தப்பாட்டில பொம்பிளயளுக்கு கண்ணத்துடைச்சு விடுறமாதிரி கடைசி நாலடி இருக்கு. ஆனா அந்த நாலடியையும் தந்திரமா வெட்டிப் போட்டுத்தான் எங்கட அய்சுப்பழகாரர் கொண்டுதிரியினம்.

காத்தவராயன் கூத்து எண்டு ஒண்டிருக்கு. இனி வெள்ளாமை வெட்டு முடிய ஊருக்கு ஊர் சந்து பொந்தெல்லாம் அரங்கேறும். இதில வந்து பாருங்கோ காத்தவராயன் செய்யிற வீரதீர சாகசங்கள் சொல்லி வேலையில்லை. தாழ்ந்த குலத்தில பிறந்தவன் ஆரியப் பெண்ணை விரும்பலாமோ. அதுதான் அடி அப்பிடியெண்டா கழுவிலதான் ஏறவேணும். அம்மா கூப்பிட்டு மகனுக்கு நிபந்தனையள் போடுறா. என்ன புலிப் பல்லுக்கொண்டா, ஆனைகட்டிக் கொண்டா, கோட்டையப்பிடி எண்டோ. ச்சா அதெல்லாம் உயர்சாதித் தெய்வங்களுக்கெல்லோ... இது அப்பிடியே.

'சாராயப்பூதி-வண்ணார நெல்லி, சம்பங்கித்தேவடியாள்' என்ன ஏன் உஸ்ஸெண்ணுறியள் இவையளக் கெடுத்துப் போட்டு அவய ளட்ட உள்ளத எடுத்துக் கொண்டு வாறதுதான் நிபந்தனை. எந்தத் தவறும் இழைக்காத இந்தப் பெண்களை காத்தவராயன் கெடுக்கிறது வீரதீர சாகசம் எண்டு வீடு வீடா கருத்தக் குடுத்திட்டு- பாலியல் வல்லுறவு தவறெண்டு சட்டமேன் போடுறம் எண்டதுதான் விளங்கேல்ல. வெறுமனே இதுக்குள்ள சாதியம் பேசுப்படவில்லை. வக்கிரமாப் பேசுப்படுது. இதுக்கெதிரா ஏன் இன்னும் பெண்கள் அமைப்புகள் 'கெம்' பேல்ல.

நான் ஒண் டொண்டாச் சொல்லவோ ஒருமிக்கச் சொல்லவோ எண்டு கிடக்கு. கிட்டடியில ஒரு நாடகம், கணவன் கண்டமாரி குடிச்சுட்டு பிழையா நடக்க அவனைப் பிரிஞ்சு வாழுறாள் ஒருத்தி. அவ விட சிநேகிதி வீட்ட போறா.அவ இவவுக்குப் பார்ட்டி வைக்கக் கூப்பிட்டவா. என்னண்டா அங்கபோக அவவின்ர புருசன் அவவப்பற்றி பல ஆம்பிளயளோட சம்பந்தப்படுத்தி கதைக்கிறான். போனவவட்டயே கேக்கிறான் 'ஓங்கட ஒவீசில இவயரோடையும் பழகுறாளோ எண்டு. இவவுக்கு சரியான கோவம். சிநேகிதிய கேக்கிறா 'என்னண்டடி இவனோட சீவிக்கிறாய்' எண்டு அப்ப அவயட கண்தெரியாத பொம்பிளப்பிள்ளை வருது. இவசொல்லுறா 'அவர் அப்பிடித்தான். இந்தப்பிள்ளை கண் தெரியாம இருக்கிறதே என்னாலதான் எண்டுறார். ஏனெண்டா கலியாணத்துக்கு முன்னால நான் அதிகமான கர்ப்பத்தடை மாத்திரையளப் பாவிச்சிருப்பனாம் எண்டு சொல்லுறார்.' வந்தவளுக்கு வெறுத்துப் போச்சு. ச்சை நீ தேவையானளவு உழைக்கிறாய் தானே இவனை விட்டிருந்தா என்ன எண்டு கேட்டாள். இப்ப.... இப்பதான்,

**மாயா**

அந்தப் பொன்மொழிவருது.

"என்னதான் பேசினாலும் இவர் ஓராள்தானே சந்தேகப் படுறார் எண்டு சகிச்சுக் கொண்டு வாழத்தான் வேணும். இவரை விட்டா, எத்தினயோ ஆம்பிளைங்க நம்மை சந்தேகப்படுவாங்க, பின்னால வருவாங்க, கேலி செய்வாங்க, வரட்டாம் பாங்க. அதையெல்லாம் தவிர்த்துக் கொள்ளுனும்னா சகிச்சுக் கொண்டு தாம் போகணும்.."

எப்பிடிக் கதை இதெல்லாம் இப்பிடி இருந்து ஒருபக்கம் ரெண்டு பக்கமா கதைச்சு முடியப்போகுதே. முடியாது வரியாவரியம் மார்ச்செட்டோட இதுகும் போயிருக்கும். பிறகென்ன. பானை பிடித்தவள் பாக்கியசாலி. பேனை பிடிச்சவள்.....?

☞ ஆரோக்கியர் விளையாட்டுக்குப் பயன்படும் கருவிகள், முட்டாள்கள். - ஜான்கே.

# கவிஞர்கள் கவலை கொள்வார்களா?

**ஜெயகாந்தன்**

**புதுமைப்பித்தன் விட்ட இடத்திலிருந்து சிறுகதை இலக்கியத்தை முன்னெடுத்துச் சென்று பரந்துபட்ட படிப்பாளிகளை ஆகர்ஷித்தவர் எழுத்தாளர் ஜெயகாந்தன். "கவிதைக்கு இனி எதிர்காலம் இல்லை" என்று முன்னர் ஒரு பத்திரிகையில் கூறியிருந்தார். அவரின் அக்கருத்துப் பற்றிய அவரது விளக்கங்களே கீழே தரப்பட்டுள்ளன.**

"காவியகாலம" என்ற புத்தகத்தை வையாபுரிப்பிள்ளை எழுதியுள்ளார். அதில் தமிழ் இலக்கியத்தில் காவியக்காலம் முடிந்து விட்டது. கம்பன் காலம் போல் காவியம் எழுத எதிர்காலத்தில் முடியாது என்று கூறியிருக்கிறார். இப்ப யாராவது எழுதலாம். ஆனால் காவியம் எழுதுவதற்கு உள்ள பாத்திரம் முடிந்து போய்விட்டது. இது விஞ்ஞான பூர்வமாக அவர்சொன்ன முடிவு. அதுபோல இன்று கவிதையின் காலமும் முடிந்து விட்டதோ என்ற கவலை எனக்கு வந்திருக்குன்னு சொன்னேன். 'முடிந்துவிட்டது' என்று ஜோசியம் சொல்லுறதுக்கு சாபம் கொடுப்பதற்கு நான் யார்? இலக்கியத்தில் கவிதையின் இடத்தை இன்று உரை நடைபிடித்திருக்கும். உரைநடை என்பது புதுசு, தமிழ் இலக்கியத்தில் உரைநடைக்கு நூறு வருஷம் என்பது ஒன்றும் ரொம்ப நாள் இல்லை. கவித்துவம் இருக்கிற உரைநடை அதைத்தான் நீங்கள் புதுக்கவிதை எனச்சொல்ல முயல்கிறீர்கள். அது கடைசியில் கவிதையும் இல்லாமல் உரைநடையுமில்லாமல் கவித்துவம் கெட்டதாய்ப் போச்சு.அது அதுக்கு வந்திருக்கிற நோயிலிருந்து மீளனும். அது அழகினை இழந்து நிற்கிறது. ஏதோ கருத்துக்களினால் மட்டும் கவிதை வந்துரும் எனச் சிலர் நினைக்கிறார்கள். நல்ல கருத்துக்களைத் தரும் கவிதையைப் பார்க்கிறேன். அது கோஷம் போடுவதற்கும் எழுதுவதற்கும் உதவும். கவிதை என்று ஒன்று உள்ளதே. அதனுடைய தேவையை அது பூர்த்திசெய்யுமா என்பதுதான் கவிதையைப் பற்றித் தெரிந்தவர்களுக்கு உள்ள கவலை. அதைத்தான் அந்தப் பேட்டியில் சொன்னேனே தவிர, கவிதைக்கு எதிர்காலம் இல்லைன்னு தம்பட்டம் அடிக்கவில்லை.

பாரதி என்ற ஒரு தனிமனிதன் அன்று எழுதிய கவிதையின் வீச்சும், வேகமும் இன்றைக்கு இவ்வளவு பேர் எழுதியும் வர முடியவில்லையே. அளவில் வளர்ந்த மட்டும் வளர்ச்சி என்று சொல்ல முடியாது. அளவிலே நான் வளரக்கூடாதுன்னு சொல்ல வில்லை அதன் மத்தியிலிருந்து வரவேண்டியது வர வில்லை. என்பதுதான் கவலையை அளிக்கிறது.

இப்பொழுதெல்லாம் நான் கவிதைகளைப் படிக்கணும் என்று நினைத்தால் பழைய கவிதைகளைத்தான் படிப்பேன். கவிதை அனுபவத்திற்கும் கவிதை ரசனைக்கும் புதுக்கவிஞர்களிடம் போவதற்கு என மனசு தூண்டுவதேயில்லை. இது என் தப்பா? இதுதான் இன்றைய வாசகர்களின் நிலை. கவிதைப் புத்தகம் போட்டால் கூட விற்பனை ஆகாமல் இருக்கிறது. பேப்பரிலே ஏதோ இடம் நிரப்பும்



விசயமாகத்தான் கவிதை வருகிறது.

இலக்கியம் என்பது காலம் காலமாய் ஒரு குறிப்பிட்டவர்கள் மட்டுமே பார்த்துப்புரிந்து கொள்ளும் ஒரு வட்டத்திற்குள்ளேயே இருந்து வந்தது என்பது உண்மையல்ல. நாடோடிக்கதைகள், நந்தனார் சரித்திரம், குற்றாலங்குறவஞ்சி இதெல்லாம் சாதாரண மக்கள் கூட அவ்வளவு தமிழறிவு உடையவர்களாய் இருந்தார்கள் என்பதற்கான அடையாளங்கள் தானே. ஆனால் இப்பொழுது படித்தவர்கள் கூட அவ்வளவு தமிழறிவு உடையர்வகளாய் இல்லை. கவிதை எழுதுபவர்கள் தனக்கு முன்னாள் உள்ள கவிதைகளையெல்லாம் படித்திருக்க வேண்டும். அவர்கள் புதுசு பண்ணட்டும், வேண்டாம் என்று சொல்லவில்லை. மலையாளத்தில் ஒரு சாதாரண வாசகனுக்கு "குமரன் ஆசான்" முதல் நவீன எழுத்தாளர்கள் வரையில் உள்ள இலக்கிய வரலாறு தெரியும். நாமோ நமக்கு முந்நாள் எழுதியவர்கள் யாரையும் படிப்பதே இல்லை.

ஏதோ மார்க்வாவ்கிற விசயம் அல்ல மொழியறிவு என்பது அதனை முழுமையாக துய்த்துயர்பவன்தான் கவிஞன் ஆகிறான். கருத்தில் உள்ள ஈடுபாடுதான் கவிஞனை உருவாக்கிறது. ஒவ்வொரு காலத்திலும் முற்போக்கு கருத்துகளையே சொன்னதால் கவிஞர்கள் எல்லாம் சோசலிஸ் டுகளாகவே இருந்தார்கள். நல்ல கவிஞனால் சோசலிஸ விரோத கவிதைகளை எழுத முடியாது. அவன் முடியாட்சியில் இருந்தாலும் வறுமையின்மையில்லை. ஒரு வன்மையினால் என்றுதான் சொல்ல வேண்டி உள்ளது. 'நாம் படைக்க வேண்டிய உலகம் கவிஞர்களால் கனவு காணப்பட்டதே' மார்க்சும், லெனினும் படைக்க விரும்பிய உலகத்தை அறிமுகம் செய்து வைத்தது யார் என்று சொன்னால் கவிஞர்கள் தான்.

நம்முடைய இலக்கியம் எந்தத் திசையிலும் இருந்தாலும் அது இந்தியப்பண்பாட்டை உருவாக்க வேண்டும். அதிலிருந்து வழுவிப்போனால் அது இலக்கியமாகாது. எல்லாக்கால இலக்கியமும் சமத்துவத்தை அல்லவா பேசிற்று! எந்த இலக்கியம் ஜாதி சரியென்று சொல்லிற்று? எந்த இலக்கியம் தீண்டாமை சரியென்று சொல்லிற்று? எந்த இலக்கியம் சுரண்டல் சரியென்று சொல்லிற்று? எந்த இலக்கியம் மானிடக் கொலை என்று சொல்லிற்று எல்லாக்கால இலக்கியமும் இந்தப் பொது இலட்சியங்களிலிருந்து மீற வில்லை.

'நம்மவனும் இல்லை நல்லவனும் இல்லை!' என்று சொல்வுகிற பழக்கம் எப்பொழுது வந்தது? ஒரு குறிப்பிட்ட பகுதி மக்களைப் பார்த்து இன்னொரு பகுதி மக்களை வெறி கொள்ளச் செய்வது எப்பொழுது வந்தது? வடவரைப்பகைமை எப்பொழுது வந்தது?, மொழிப்பகைமை எப்பொழுது வந்தது? பண்பாட்டு அநாகரீகத்தின் உச்சத்தில் தேசிய உணர்வுகளுக்கு எதிராக வந்தது, இந்திய ஒருமைப்பாடு ஏதோ அரசியல் சம்பந்தப்பட்டதல்ல. ஒவ்வொரு இந்தியனின் வாழ்க்கை சம்பந்தப்பட்டது.

எவனோ ஒருத்தன் தமிழ்மொழி செத்துப்போகும் எனச் சொன்னதற்கு 'என்றந்தப் பேதை உரைத்தான்' என்று கோபம் கொண்டு கொதித்தெழுந்தான் பாரதி.

ஆனால் இன்று நம் கண்முன்னால் ஒரு மொழியின் எழுத்துக்களை தார்பூசி அழிக்கும் பொழுது உணர்ச்சி இல்லாமல் இருப்பவர்களுக்கு எப்படி வரும் மொழிப்பற்று? எப்படிவரும் கவிதை? எனக்கு மொழி உணர்வு இருப்பதால்தான் இந்தி மீதான பகைமை வெறியை ஏற்கமுடிய வில்லை. மொழி உணர்வு வேணும். மொழி வெறியை எதிர்க்கிற மொழிப்பற்று வேண்டும். மனித மூளை தொடர்ந்து சிந்திக்கின்றது, மொழிச் சிந்தனை, அரசியற்சிந்தனை, கவிச்சிந்தனை என்று பல தளங்களில் விளைகிறது.

உலகத்தைத்தான் பிரித்து அறிகிறோமே யொழிய அது ஒன்றும் பிரிந்து கிடக்க வில்லை. சிந்திக்கிறவனுக்கு பிரபஞ்சம் சார்ந்த சகலமும் சம்பந்தம் உடையது, மனிதன் சம்பந்தப்பட்டதெல்லாம் கவிதைக்கு சம்பந்தப்பட்டதே.

கவிதைக்கு அழகியல் என்பதே முற்போக்கான விசயம் தான். அர்த்தமில்லாமல் அழகு இருக்கமுடியாது. கருத்துக்கள் அழகானவை. அதனால் தான் அவை படர்கின்றன. அடிப்படையான சில கருத்துக்களை மக்களிடம் உருவாக்குவதே இலக்கியம். மனிதனுடைய வளர்ச்சிக்கு எது வெல்லாம் தேவையோ அதுவெல்லாம் மனிதாபிமானம் சார்ந்ததுதான். முரண்பாடுகொண்டவர்களிடம் எப்படிப் பழகுவது, மொழிப்பற்று, தேசப்பற்று போன்ற அடிப்படை குணங்களை வளர்க்க வில்லையென்றால் கலாச்சார வீழ்ச்சி உண்டாகும். இன்றைக்கு மனிதனை அவமதிப்பதே கவலை என்று ஆகிவிட்டது,கதை, சினிமாவெல்லாம் பார்த்து ஐயோ மனிதன் இப்படியெல்லாம் இருக்கின்றானா? என்று எண்ணத் தோன்றுகிறது. அதனால் வாழ்க்கை அப்படியல்ல, தீய சிந்தனைகள் திட்டமிட்டே பரப்பப்படுகின்றன. ஜாதிவெறியும், மதவெறியும் தலைதூக்கி நிற்கிறது. மதத்தை ஒழித்தால் எனக்கு சந்தோஷம்.

ஆனால் அதை ஒழிக்கமுடியாது. ஆனால் மதங்களுக்கிடையில் இசைவு கொள்ளவேண்டும். வரலாறு பூர்வமாக இந்தியா என்பது என்ன? அதன் பெருமை என்பது என்ன? அதன் ஜீவன் என்பது என்ன? 'மதங்களுக்கிடையே இசைவுகொண்ட மனித நாகரீகம்' இதுதானே. இதைக்களங்கப் படுத்துகிறவன் இந்தியனா? உண்மையான இந்துவாக இருந்தால் அவன் போய் மசூதியைத் தொடமாட்டான். மதங்களுக்கிடையே இசைவு கொள்ளக்கூடாது என்று இந்தியாவுக்கு எதிராக உலகரீதியாக ஒரு சதி உருவாக்கப்பட்டிருக்கிறது. விரைவில் மதம் பற்றிக்கொள்ளும்.

ஏனெனில் ஆளப்பட்ட மதமும், ஆண்ட மதமும் இங்கே உள்ளன. இவர்களுக்குள்ளே ஒற்றுமையை ஏற்படுத்தியது மதநல்லிணக்க இலக்கியமே, துளசிதாசரும், கபீர்தாசரும் இதைத்தான் செய்தார்கள். இதற்காக அர்ப்பணிப்பதே கலை இலக்கியம். ■

---

# செங்கை ஆழியானின் ஈழத்துச் சிறுகதை வரலாறு

## நூல் பற்றிய சில குறிப்புகள்

**சுதந்திரதீபன்**

'மரணங்கள மலிந்த பூமி'-போன்ற தமது படைப்புக்களால் மிகவும் அறியப்பட்ட செங்கை ஆழியானின் புதியபடைப்பு 'ஈழத்துச் சிறுகதை வரலாறு' என்னும் நூல்.

'வடக்குக் கிழக்கு அபிவிருத்தி புனரமைப்பு, புனர்வாழ்வு மற்றும் வடக்கு கிழக்கின் தமிழ் விவகார அமைச்சு, யாழ். இலக்கிய வட்டத்துக்கு வழங்கிய நிதி உதவி கொண்டு , அவர்கள் இந்நூலின் சில பிரதிகளை கொள்முதல் செய்வதற்காகத் தந்துதவிய ரூபா முப்பதினாயிரம் இந்நூலை அச்சிடுவதற்கு முன்னுதவியாக அமைந்தது' என்னும் அறிவிப்புடன் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது.

'வரதர் வெளியீ'டாக வந்துள்ள இந்நூலானது, "ஈழத்தின் மூத்தஎழுத்தாளர் மூதறிஞர் தி.ச.வரதராசன்(வரதர்) அவர்களின் 75 ஆவது அகவை நிறைவு குறித்த பவழ விழாவின் நினைவுச் சான்றாக அவருக்குச் சமர்ப்பனம் செய்யப் பட்டுள்ளது.

(வரதர் அவர்களின் 70ஆவது பிறந்தநாள் விழாக்கூட, 96ஆம் ஆண்டில், அன்றிருந்த நிலைமைகளின். மத்தியிலும் கொழும்பில் கோலகலமாக கொண்டாடப்பட்டமையை இலக்கிய நெஞ்சங்கள் மறந்திருக்கமாட்ட; அப்பேற்பட்ட பெருமைக்குரிய அவர்)

வரதர் என்கிறபடைப்பாளி ஈழத்துச் தமிழ் சிறுகதைகள், சமுதாய சீர்திருத்தக்காலம், முற்போக்குக் காலம், புத்தெழுச்சிக் காலம், தமிழ் தேசிய உணர்வுக் காலம்- என்று தாம் வகுத்துக் கொண்ட ஆறு அத்தியாயங்களில் இந்நூலை ஆக்கியோன் அடக்கு கிறார்.

ஒரு ஆய்வு நூலாகத் தன்னை அடையாளம் காட்ட இந்நூல் முயல்கிறது. ஆனால், ஆய்வுமுறைகளை பாவனை பண்ணி அடிக்குறிப்புகளை இடுவதாலும், இன்னும் ஒருபடி மேலே சென்று பந்திகளுக்கும் பிரிவுகளுக்கும் இலக்கமிடுவதாலுமே ஒரு நூல் ஆய்வுநூலாக ஆகிவிடுதில்லை.அது மட்டுமன்றி, முன்னால் தனியாகத் துருத்திக்கொண்டு நிற்கும் முதலாம் அத்தியாயமே இது. ஆய்வுநூல் முறைமையில் அடங்காது என அறுதிபட கூறிவிடுகிறது.

'ஈழத்துச்சிறுகதைத் துறைக்குக் கிடைத்துள்ள ஒரு வரலாற்றுக் கருவூலம்' எனப் பின்னட்டையில் கூறப்படும் இந்நூல், அக்கூற்றுக்கு எவ்வளவு தகுதியானது என்றவினா நூலைப் படித்து முடித்ததும் இயல்பாகவே எழுகிறது. ஈழத்தின் வரலாற்றை 'சிருட்டித்த' சிங்கள வரலாற்றாசிரியர்களை அடியொற்றி, செங்கை ஆழியானும் 'ஈழத்துச் சிறுகதை வரலாறு' ஒன்றினைச் 'சிருட்டிக்க' முனைந்துள்ளாரோ என்று தோன்றுகிறது.

ஏனெனில், உண்மைகள் ஓரங்கட்டப்பட்டு, தமது விருப்பு-வெறுப்புகள், தேவைகள், முற்சாய்வுகள், என்பவற்றிக்கேற்ப, இருட்டடிப்புகளும் திரிபுபடுத்தல்களுமாக எழுதப்படுகிறது ஒன்று சரித்திரமாகிவிடமுடியாது அதுவரலாற்றை திருபுபடுத்தும் முயற்சியே ஆகும்.

ஆசிரியர் தாம் வகுத்துக் கொண்ட காலப் பிரிவுகளில் ஒன்றை 'தமிழ்த் தேசிய உணர்வுக் காலம்' என்று குறிப்பிடுகிறாரேயன்றி, தமிழ்த்தேசிய உணர்வுபற்றியோ, தமிழ்த்தேசிய இனப்பிரச்சினை பற்றியோ, அவற்றைச் செம்மையாகக் கையாண்ட படைப்புகள் பற்றியோ எதுவும் தெளிவாகக் கூறமுடியாதுள்ளவராயிருக்கிறார். 'பூதாகாரமாகக் கிளர்ந்து எழுந்து நிற்கும் தமிழீழப் போராட்டம்' பற்றியும், அது சமூகத்தில் ஏற்படுத்திய அநுகூலங்களையும் பிரதிகூலங்களையும் அவலங்களையும்', 'விரும்பியோ விரும்பாமலோ தேசியம் என்ற உணர்வு தேய்ந்து தமிழ்த் தேசியம் என்ற உணர்வு மேலோங்கிவிட்டது' பற்றியும் அத்தியாயம் ஆறின் ஆரம்பத்தில் அங்கலாய்க்கிறார்!

ஆறு அத்தியாயங்களைத் தொடர்ந்து இரண்டு பின்னிணைப்புகள் தரப்பட்டுள்ளன. பின்னிணைப்பு-1, ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைத் தொகுதிகள் பற்றிப் பட்டியல் தருகிறது. இதில் மிக முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டியதென்னவெனில், இளையவன் என்கிற பால.நடராஜனின் நூல் தவிர்ந்த ஏனைய 'தமிழ்த்தாய் பதிப்பக' வெளியீடு களோ, அல்லது 'வெளிச்சம்' வெளியீடுகளான 'வெளிச்சம் கதைகள், வாசல் ஒவ்வொன்றும்' போன்ற தொகுதிகளோ ஆழியான் கண்களில் கதைத் தொகுதிகளாகப் பட்டிரு க்காமை தான்! நிலைமை இப்படியிருக்க, இந்தவர லாற்றில் இடம் பெறாது போன ஏனைய பல தொகுதிகளைப் பற்றிப்பேசவே வேண்டியதில்லை! இந்த லட்சணத்தில் ஆசிரியர் தாம் ஏதோ அச்சொட் டாகக் கணக்கிட்டவர் போல, '2001 ஒக்டோபர் வரையிலான மொத்த சிறுகதைத் தொகுதிகள் ஸ்ரீ 274' என்று 'கணக்கு' வேறுகாட்டுகிறார்!

சிறுகதைகளைப் பிரசுரித்த சஞ்சிகைகள், பத்திரிகைகள் பற்றி அவ்வப்போது பட்டியலிடும் ஆசிரியரின் பார்வையில், 'ஈழமுரசு', 'ஈழநாதம்', 'வெளிச்சம்,' 'சுதந்திரப் பறவைகள்' போன்ற எவையும் தட்டுப்படாது போனமையுங்கூட எம்மால் புரிந்து கொள்ளக்கூடிய ஒன்றுதான்.

பின்னிணைப்பு-2, நூலில் இடம்பெறும் எழுத்தாளர்கள் பற்றிப் பட்டியல் தருகிறது. எல்லாக் காலகட்டங்களுக்குமுரியவர்களாகத்தன்னையும் தனக்கு வேண்டிய சிலரையுமே அடிக்கடி பட்டியலிடும் ஆழியான், உண்மையிலேயே தமிழ்த்தேசிய உணர்வுகளைப் பிரதிபலித்து, தமிழ்த் தேசியப் பிரச்சினையைத் தெளிவாக முன்வைத்த மிக முக்கியமான படைப்பாளிகள் பற்றிக்கூட மூச்சே விடவில்லை!

இத்தனைக்குப்பிறகும், இவற்றைத்தான் 'ஒரு வரலாற்றாசிரியன் எப்படி நடுநிலைமை வகித்து எழுத வேண்டுமென்பதை நன்குணர்ந்து எழுதுவதைக்காணக் கூடியதாயுள்ளது' என அ.சண்முகதாஸ் தமது அணிந்துரையில் அழகாகக் குறிப்படுகிறார்! அத்துடன், 'இந்நூலுக்கு இந்த அணிந்துரையை எழுதுவதிலே மகிழ்ச்சி' வேறு அடைவதாக அவர் தமது உரையின் முதலிலும் முடிவிலும் குறிப்பிட்டுக் கொள்வதானது இன்றைய ஈழத் தமிலிழக்கிய உலகிலே இட்டு நிரப்பவேண்டிய வெற்றிடங்கள் பல இருப்தைச் சுட்டிக்காட்டுவதாக உள்ளது.

நூலைப்படித்து முடித்து விட்டுப் பின்னட்டைக்குறிப்புகளை மீள நோக்கினால், அதில் ஒன்று இவ்வாறு கட்டியங்கூறுகிறது.


'செங்கை ஆழியானின் இந்த முயற்சி என்னைப் பிரமிக்க வைக்கிறது என்கிறார் ஒரு இலக்கிய இரசிகர். நூலில் நுழைந்ததும் உங்களுக்கும் இந்தப் பிரமிப்பு ஏற்படும்.'

உண்மைதான், அதில் சந்தேகமே வேண்டியதில்லை! இவ்வளவு தடாலடியாக ஒரு 'வரலாற்றை உருவாக்குவது' என்பது இலேசுப்பட்ட காரியமா.என்ன! ●




# தீ சுமந்த நிலம்

## சத்ஜெய எதிர்ச்சமர்



சித்திரக்கதை - 12

ராகவன்




# குதூகலம்



**டொக்டர்:-** என்ன...? மருத்துவச் செலவுக் கட்டணத்தை கோவில் உண்டியலிலை போட்டீங்களா?

**நோயாளி:-** ஆமாம்...நீங்கதானே என் கையிலை என்ன இருக்கு... எல்லாம்... கடவுள் தான்... அவர்தான் உங்கள் உயிரைக் காப்பாத்தினார் என்று சொன்னீங்கள்

**டொக்டர்:-** ???



**ஒருவர்:-** மனித உயிருக்கு பாதுகாப்பு என்பதே இல்லாமல் போயிட்டுது...

**மற்றவர்:-** ஏன் அப்படி விரக்தியாய் பேசுறாய்...?

**ஒருவர்:-** நான் இருப்பது உயர்பாதுகாப்பு வலயத்துக்கு அண்மையில்...

**அவன்:-** அடிமை வாழ்வின் கொடுமை இப்போதான் தெரியுது....?

**இவன்:-** ஏன்....என்ன நடந்தது...?

**அவன்:-** போனவாரம் கல்யாணம் பண்ணீட்டன்...!



**தியேட்டர் முதலாளி:-** வரவர... நம்ம ஓவியருக்கு தடுமாற்றம் அதிகமாப் போட்டுது...

**நண்பர்:-** ஏன் அப்படி சொல்லுறீங்க...?

**தியேட்டர் முதலாளி:-** பின்னை யென்ன.... போஸ்டரிலை இனிய சண்டைகளும் பயங்கரப் பாடல்களும் நிறைந்த படம் என்று மாறி எழுதி வைச்சிட்டுப் போட்டார்.





படுக்கையில் நிண்டநாளாக இருந்த நோயாளியை வண்டியில் வைத்து அறுவை அறைக்கு நேஸ் கொண்டு போனார்.

**நோயாளி :-** நேஸ்! என்னை எங்கே தள்ளிக்கிட்டுப் போறீங்க?

அறுவை அறைக்கு என்றால் நோயாளி பயப்படுவார் என்று நினைத்த நேஸ் "தியேட்டருக்கு" என்றார். உடனே

**நோயாளி :-** "நேஸ் இண்டைக்கு யார் நடித்த படம்." என்றார்

சு.கௌசிகா.



**மனைவி:-** தாயிற் சிறந்ததோர் கோயிலுமில்லை என்று ஔவையார் என்ன அழகாகச் சொல்லியிருக்கிறார்... பாருங்கோ...

**கணவன்:-** தையல் சொற் கேளேன் என்றும் அவதான் மிக அழகாச் சொல்லியிருக்கிறா தெரியுமோ?

சிந்திக்க வைத்த சந்திப்பு

# இது எங்கட மண் இங்கு வேலை செய்வது பாக்கியம்

## வைத்திய கலாநிதி அழகேந்திரம்

**முல்லைத்தீவு புதுக்குடியிருப்பைச் சேர்ந்த இவர் ஆரம்பப்படிப்பினை புதுக்குடியிருப்பில் கற்று மருத்துவராக இருந்த போதிலும் சமூகசேவை, இலக்கியம் என பல்வேறு தளங்களில் இயங்கி வருபவர்.**



அவரது கண்களில் ஒளி. அந்த ஒளியில் அமைதியும்; அடக்குமுறைக்கும் அதிகாரத்துக்குமெதிரான கோபமும். தனித்து நின்று செயல்படும் தன்நம்பிக்கை, தன் ஊதியத்தின் ஒரு பகுதியைப் பொது சேவைக்கே செலவிடும் அர்ப்பணிப்பு என்று ஒரு வித்தியாசமான வைத்தியர் ஒருவர் முல்லைத்தீவுக்கு, மாவட்ட வைத்திய அதிகாரியாக' வந்திருக்கிறார் என்ற செய்தியை அறிந்து அவருடன் நேர்காணல் ஒன்றைச் செய்ய நானும் நண்பர் ஒருவரும் மாலையில் அவரது விடுதிக்குச் சென்றோம். வைத்தியசாலையில் இருள் சூழ்ந்திருந்த நோயாளர் விடுதிகளில் லாந்தர் மின்னியது. நோயாளர் விடுதிக்கும் வெளி நோயாளர் பிரிவுக்குமாக ஓரிரண்டு ஊழி யர்கள் நகர்ந்து கொண்டிருந்தனர். விடுதிக்குச் செல்லும் போது அங்கும் ஒரு லாந்தர் மட்டும்தான். மங்கலான ஒளியில் ஏதோ யோசனையில் இருந்தார்.

எங்களைக் கண்டபோது வாங்கோ. இருங்கோ என்று கதிரையைக் காட்டினார். நாங்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு அமர்ந்தோம். என்ன ஜெனரட்டர்வேலைசெய்யாதோ? எல்லாம் இருட்டாய் இருக்கென்று நண்பர் தொடங்கினார்.

ஜெனரட்டர் நல்லாய்த்தான் இருக்கு டீசல்தான் இல்லை. எங்களுக்கென்று தாற டீசலின் அளவு மாதம் பூறாவும் பாவிக்கப்போதாது. இப்ப தந்த டீசல் முடிஞ்சுபோச்சு. அதால முக்கியமா ஒப்பரேசன் ஏதாவது செய்யும் போது மட்டும் போடுவோம். அதவிட ஜெனரட்டர் ஒப்பிறேற் பண்ண எண்டு ரெக்னீசியன் யாரும் கிடையாது அதுக்கும் சிலவேளை நான்தான் போக வேண்டியிருக்கும் என்று சலித்துக் கொண்டார்.'

இதை நீங்கள் ஏன் மேலிடத்துக்குச் சொல்லக்கூடாது என்று நாங்கள் கேட்டதுதான் தாமதம் கதிரைக்குள் அமுங்கியிருந்தவர் நிமிர்ந்து உட்கார்ந்தார்.

நல்லாய்க் கேட்டீங்கள் எங்க எதைச் சொல்லி என்ன பலன். குரலில் கோபம். எங்களுக்கும் என்னடா இது? என்ன ஏதென்று மனதில் எழுந்த கேள்வியை அவரிடம் கேட்டோம்.

அண்மையில் ஆஸ்பத்திரியில இருந்த ஒரே ஒரு அம்புலன்ஸ் விபத்துக்குள்ளாகி திருத்துறதுக்கு விட்டிருக்கு. ஒரு ஆபத்தான நோயாளிகள் உடனடியாக வவுனியாவுக்கு அல்லது யாழ்ப்பாணத்துக்கு அனுப்பினாத் தப்பிக்க வைக்கலாம். மிகவும் சிரமப்பட்டோம். இரவு ஆயிற்று தனியார் வாகனங்களும் கொண்டு போக முடியாது. D.P.D.H.S க்கு இது பற்றி நேரில் போய் விபரமாக எடுத்துச் சொன்னேன்....அவரிடம் ஒரு அம்புலன்ஸ் வண்டி இருக்கு.... திடீரெனக் குரல் அறுந்ததுபோல் கொஞ்சம் மௌனம். அப்போது ஏன் என்று யாருக்கும் புரியாமல் ஒருவரை ஒருவர் விழித்தோம். பின்பு தொடர்ந்தார்.

அவரிடமிருந்து ஏமாற்றத்துடன் திரும்பி வந்து பார்த்தால் நோயாளி இறந்து விட்டார். அதேபோல இன்னுமொருநாள் (16.03.2003) ஒரு ஐஞ்சு வயசுக் குழந்தை செப்டிசேமியா காய்ச்சல் காய்ந்து கொண்டு வந்தார்கள் மிகவும் சிரமப்பட்டு ஒரு வாகனத்தை ஒழுங்கு செய்து பிள்ளையை அனுப்புற ஆயத்தம் செய்யும் போது அதுவும் இறந்து விட்டது.

கொஞ்ச நேரம் அமைதி. யாரும் பேசவில்லை. யாரும் அசையவில்லை. எல்லோர் மனதிலும் சோகம் ததும்பியது. இதயத்தை ஏதோ அழுத்துவது போலவும் இறந்து போன குழந்தையின் பிஞ்சு முனகல் காதுகளில் விழுவது போலவும் இருந்தது.

பிறகு அவரது உதவியாள் தேநீர் கொண்டு வந்தார். எந்தச் சலனங்களுமின்றி அவரவர் தேநீரைக் குடித்து முடித்தோம்.

"எப்பிடி மருந்தெல்லாம் வருகிறதா?" என்று நண்பர் கேட்ட போது வருகிறது. ஆனா முன்பு போல அல்ல சமாதான காலத்துக்கு முன்னர் வந்த மருந்தின்ர அளவில அரைவாசிதான் வருகிறது. சாதனங்கள் குறைவாகத்தான் இருக்கு. இப்ப தொழில் நுட்பம் எங்கேயோ போயிற்று. சுகர் பார்க்கிறதுக்கெல்லாம் கையளவு சாதனம் வந்திருக்கு. அதின்ர விலை கூடப் பெரிசாய் ஒண்டும் இல்ல வெறும் ஐயாயிரம் ரூபாய்தான். ஆனால் எங்களால அதைக் கூடப் பெற்றுக்கொள்ள முடியாமல் இருக்கு. சரி அதைத்தான் விடுவம் நோயாளர் விடுதியெல் லாம் நீண்ட காலத்துக்கு முன்னர் அடிச்ச பெயின்ரோட கிடக்கு.

இதையெல்லாம் சீர் செய்ய வேணும். புதிதாய்ப் பெயின்ரடிக்க வேணும். நிதியைப் பெற முடியாமல் இருந்தது. அப்போது முல்லைத்தீவுக்கு சாரதிகளுக்கு அனுமதிப்பத்திரம் கொடுக்கிறதுக்கான மொபைல் சேவிஸ் வந்தசமயம் நிறையப் பேருக்கு மெடிக்கல் சேர்ட்பிக்கற் வழங்க வேண்டியிருந்தது. அப்படி வழங்கும் போது எங்கள் தேவைகளையும் குறைகளையும் விளக்கி ஒரு உண்டியல் ஏற்பாடு செய்திருந்தோம். அவர்கள் தாங்கள் விரும்பிய நிதியுதவியை போடும்படியாக ஒவ்வொரு வரும் மனம் உவந்து தங்களா லியன்ற நிதியைப் போட்டார்கள். வேறும் சிலர் இதை அறிந்து வந்து உதவினர். கிடைத்த பணத்தைக் கொண்டு நோயாளர் விடுதிகளுக்கும் பெயின்ற் அடித்தோம். ஆஸ்பத்திரிக்கு முன்னாலுள்ள பிரதான வீதியைப் பாருங்கோ. குண்டும் குளியுமாய் இருக்கு ஒரு அவசர நோயாளியைக் கொண்டு போறதெண்டால் அம்புலன்ஸ் ஆஸ்பத்திரியில இருந்து வெளிக்கிட்டு புதுக்குடியிருப்புச் சந்திக்குப் போய்ச்சேரவே நீண்ட நேரம் எடுக்குது. றோட்டுத் திருத்தும் வரை தற்காலிகமாகவாவது எதையேனும் செய்ய வேண்டியிருந்தது. உடனே வைத்தியசாலையில் பணிபுரியும் சகலரின் உதவியுடனும் சில சமூக சேவையாளர்கள், நலன் விரும்பிகளின் ஆதரவுடனும் அந்த வீதியைச் சிரமதானம் மூலம் செப்பனிட்டோம். அது உடனடிப்பலனைத் தந்தது. ஆனால் பின்னர் பெய்த பெரும் மழைக்குத் தாக்குப் பிடிக்க முடியாமல் போய்விட்டது. நிரந்தரமாக எதையாவது செய்தால் தான் உண்டு.

நீங்கள் தமிழீழ சுகாதார சேவையினரிடம் ஏதாவது உதவி கேட்கலாமே?

கேட்டிருக்கிறோம். அவர்கள்தான் நிறையச் செய்திருக்கிறார்கள். செய்கிறார்கள் முல்லைத்தீவு வைத்தியசாலைக்குக் கூட ஒரு அம்புலன்ஸ் வண்டியை புலிகள் கொடுத்திருக்கிறார்கள்.

புலிகளின் ரகட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள்ள பணி புரியசிலர் தயக்கம் காட்டுகிறார்கள். உங்கள் விடயத்தில் அது எப்படி? என்று அடுத்த கேள்வியைக்கேட்டபோது.

இல்லை அப்படி நினைக்கிறது தவறு. இது எங்கட மண். நாங்கள் பிறந்த ஊர் இஞ்ச வேலை செய்யக் கிடைச்சது பெரும் பாக்கியம் என்றே கருதுகிறேன். இஞ்ச இயக்கத்தால எந்த இடையூறுகளும் எனக்கு எப்போதும் ஏற்பட்டதில்லை. எங்களைப் போன்றோர் இங்கு பணியாற்றுவதை அவர்கள் விரும்புகிறார்கள், மதிக்கிறார்கள். இங்கு பிறந்தவர்கள் வேறு மாவட்டங்களில் சேவை செய்கிறார்கள், அதை நான் தவறு என்று சொல்லவில்லை. எங்கட பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் தென்பகுதிகளில் கூட வேலை செய்கிறார்கள். அங்கேயெல்லாம் நல்ல திறமை வாய்ந்த வைத்தியர்கள் இருக்கிறார்கள். நம்மவர்கள் எங்கட இடங்களைப் போல பின் தள்ளப்பட்ட பிரதேசங்களில் சேவை செய்தால் இங்கே இருக்கிற ஏழை மக்கள எவ்வளவோ பயனடைவார்கள். அவர்கள் இதைச் சிந்தித்து முன் வரவேண்டும். அப்படி வருவார்களானால் இங்கு எவ்வளவோ செய்யலாம். நான் கூட இப்போது நினைக்கிறேன். கொழும்பில் இவ்வளவு காலமும் இருந்து விட்டேனே முன்னரே இங்கு வந்திருக்கலாமென்று.

அப்படி அவர் உளப்பூர்வமாகச் சொன்னபோது நாமெல்லாம் நெகிழ்ந்துதான் போனோம். இப்படி எண்ணும் பண்பு எல்லோருக்கும் இருந்து விட்டால் உலகம் எத்தகைய ஆனந்தமாகவும் அற்புதமாகவும் இருக்கும் என எண்ணிக் கொண்டேன். சில நிமிடங்கள் கழித்து வெள்ளை யூனிபோம் அணிந்த ஊழியர் ஒருவர் அவசரமாக வந்து ஒரு நோயாளி வந்திருப்பதாக அழைக்க அவசர அவசரமாக எங்களிடமிருந்து விடை பெற்றுப் போனார். குறுகிய காலத்துக்குள் நிறைவாகச் செய்து மக்கள் மனங்களில் மட்டும் நீங்காத இடத்தைப் பிடித்துவிட்டார். அதுவேதன் சேவைக்குப் பெரும் வெற்றியென்றும் அவர் கருதுகிறார்.

முல்லைக் கோணேஸ்


## பணிநிலை வேண்டுகை

**வன்னியில் பல கிளைகளைக் கொண்டியங்கும் முன்னணி நிறுவனத்திற்கு கீழ்வரும் பணிநிலைகளுக்குத் தகைமையும் முன்பட்டறிவுமுடையவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.**

***பணிநிலைகள்:-***

*பணிநிலை -01. கணக்குப் பதிவாளர்*
*02. களஞ்சியக் காப்பாளர்*
*03. எழுதுநர்கள்*
*04. உணவு பரிமாறுபவர்*
*05. பாதுகாப்புப் பணியாளர்*
*06. சமையலாளர்*
*07. விற்பனையாளர்*
***(Hardware, Building Materials, Spair parts)***

***கல்வித் தகைமை:***

*1ஆம், 2ஆம், 3ஆம் பணிநிலைகளுக்கு:*
*க.பொ.த. (சாதாரணதர) தேர்வில் தேர்ச்சியும், மேற்பட்ட கல்வித் தகைமைகளும்.*
*4ஆம், 5ஆம் பணிநிலைகளுக்கு:*
*10ஆம் வகுப்பில் கற்றிருத்தல் வேண்டும்.*
***6ஆம் பணிநிலைக்கு:***
*ஹோட்டல் முகாமைத்துவம் கற்கைநெறியில் தேர்ச்சியடைந்தவர்களுக்கு முன்னுரிமை உண்டு.*
*7ஆம் பணிநிலைக்கு:*
*8ஆம் வகுப்பில் தேர்ச்சியடைந்திருத்தல்.*

***அகவையெல்லை :*** *18-50*
***பால்:*** *இருபாலாரும்*

***பட்டறிவு:***

***1ஆம், 2ஆம், 3ஆம் பணிநிலைகளுக்கு:***
*குறித்த பணியில் ஓர் ஆண்டுக்கு குறையாத பட்டறிவுடையவர்களுக்கு முன்னுரிமையுண்டு.*
*4ஆம், 5ஆம் பணிநிலைகளுக்கு:*
*குறித்த பணியில் நன்மதிப்புள்ள நிறுவனமொன்றில் இரண்டாண்டு பட்டறிவுடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.*
*6ஆம் பணிநிலைக்கு:*
*மேநாட்டு, உள்நாட்டு உணவு தயாரிப்பில் 2ஆண்டுகளுக்குக் குறையாத பட்டறிவுடையவர்களுக்கு முன்னுரிமையுண்டு.*
*7ஆம் பணிநிலைக்கு:*
*இரும்பகம், கட்டடப்பொருள், வாகன உதிரிகள் விற்பனை நிலையத்தில் பணியாற்றிய பட்டறிவுடையவர்களுக்கு முன்னுரிமையுண்டு.*

### நிறுவனம் வழங்கும் சிறப்புச் சலுகை

- *உணவு, தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும்.*
- *தொலைவிடங்களிலிருந்து வரும் பணியாளர்களுக்கு போக்குவரத்து வசதிசெய்து கொடுக்கப்படும்.*

வேண்டுகைகள் யாவும் கீழ்காணும் முகவரிக்கு தங்கள் சொந்தக் கையெழுத்தினால் எழுதி, 31.03.2003ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும்.

விளம்பர இல: 45
மே/பா ஈழநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி.

(சி-8035)

# நேர்நோக்கு

## சிந்தனையில் மாற்றம் தேவை

புதிய அரசியல் அமைப்பு ஒன்றை உருவாக்குவதாயின் அதற்கு மகாசங்கத்தில் பூரண சம்மதம் இருக்க வேண்டும் என கடந்த சில தினங்களுக்கு முன் ஆர்ப்பாட்டம் நடத்திய ஜாதிக சங்க சம்மேளனம் என்னும் அமைப்பு வலியுறுத்தியுள்ளது. இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றோரில் பெரும்பாலானோர் பௌத்தபிக்குகள். இவர்களுடன் இணைந்திருந்தோர் சிங்கள தேசிய கட்சி, சிஹல உறுமய போன்ற அமைப்புகளாகும்.

சிறிலங்கா ஆட்சியாளர் எவராயிருப்பினும் பதவி யேற்றவுடன் ஆசிபெறச் செல்வது மகாசங்கத்தினரிடம் ஆகும். அத்துடன் எந்த ஒரு முக்கிய செயற்பாட்டின் போதும் மகாசங்கத்தினரிடம் சென்று விளக்கமளிக்காது விடுவதில்லை. இதுவரை காலமும் மேற்கொள்ளப்பட்ட எல்லா நடவடிக்கைகளும் அவர்களால் மகாசங்கத்தினரின் ஆசீர்வாதத்துடன் அல்லது மகா சங்கத்தினரைத் திருப்திப்படுத்திய பின்பே மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இவ்வாறிருக்கையில் மேற்கண்டவாறு ஒரு கோரிக்கையை ஆர்ப்பாட்டம் மேற்கொண்டோர் முன்வைத்திருக்க வேண்டிய அவசியமில்லை.

மகாசங்கத்தினரின் ஆசீர்வாதம் அல்லது சம்மதத்துடன் மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கைகள் தான் சிறிலங்காவை இன்றைய நிலைக்கு கொண்டு வந்திருக்கிறது என்பதும் இங்கு கவனிக்கத்தக்க விடயமாகும். அதாவது மகாசங்கத்தினரை திருப்திப்படுத்தும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்ட இனவாத நடவடிக்கைகளே கடந்த இருபது வருடகால யுத்தத்திற்கும் காரணமாகும். அத்துடன் இவ்வாறான யுத்தம் ஒன்றை நடத்துவதற்கும் மகாசங்கத்தினரது ஆசீர்வாதம் இருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்க தாகும்.

இப்பொழுது தவிர்க்க முடியாது சமாதான நட வடிக்கைகளில் சிறிலங்கா ஆட்சியாளர்கள் இறங்கியிருக்கையில் மீண்டும் இந்த அமைப்பு அறிவித்துள்ள தீர்மானங்களை அவதானித்தால் அவர்கள் இனவாத சிந்தனையிலிருந்து ஒருவீதம் கூட மாறுபட்டு விடவில்லை என்பதனை உணர்ந்து கொள்ள முடியும்.

தென்னிலங்கை மக்களின் சம்மதத்துடன் ஆரம்பிக்கப்பட்ட சமாதான நடவடிக்கை ஒரு வருடத்திற்கும் மேலாக நடைபெற்று வருகையில் மீண்டும் இவர்கள் தமது சுயரூபத்தை காட்டியுள்ளனர்.

பௌத்தஅரசு, ஒரே நாடு அநுராதபுரம் தேசிய தலைநகரம், யூன் மாதம் பௌர்ணமி தினம், தேசியதினம், தேசியதந்தை துட்டகைமுனு தேசியதாய் மகாராணி விகாரமாதேவி என இவர்கள் எடுத்திருக்கும் தீர்மானம் இவர்கள் என்றுமே மாறப்போவதில்லை என்பதை வெளிப்படுத்துகிறது.

பல்லின பலசமய மக்களைக் கொண்ட இலங்கை ஒரே நாடாக இருப்பதாயின் இங்கு வாழும் மக்கள் ஒவ்வொருவரினதும் உணர்வு மதிக்கப்படவேண்டுமென்பது வெளிப்படையாகும்.

ஆனால், 1948 இல் இலங்கையை விட்டு பிரிட்டிசார் வெளியேறியபோது பௌத்த சாசனமே அரசியல் சாசனமாக இருக்க வேண்டும். பௌத்த கொடி தேசிய கொடியாக இருக்க வேண்டும். என வலியுறுத்தி சுதந்திர தினத்தை புறக்கணித்தவர்கள் பௌத்தமகா சங்கத்தினர்.


ஒவ்வொரு விடயத்திலும் பௌத்தத்தை வலியுறுத்தும் மகாவம்ச சிந்தனை கொண்ட இவர்கள் இவ்வளவு இரத்தம் சிந்தப்பட்டும் மாறிவிட்டதாக தெரியவில்லை. மக்கள் மாறினாலும் இவர்கள் மாறியதாக தெரியவில்லை. இதனால் இலங்கையில் சுமூக நிலை உருவாகுவதும் கடினமான காரியமாகவே தோன்றுகிறது.

இலங்கை ஒரே நாடாக இருக்க வேண்டும் என இவர்கள் உண்மையிலேயே விரும்பினால் இவர்களின் சிந்தனையில் மாற்றம் ஏற்பட்டாலே சாத்தியமாகும் என்பது வெளிப்படையாகும்.

இதுவரைகாலமும் சிறிலங்கா மக்களும், தமிழ்மக்களும் அனுபவித்த துன்பங்களும் கொஞ்சநஞ்சமல்ல. இதிலிருந்து இம்மக்கள் நிரந்தரமாக விடுபட இச்சிந்தனை மாற்றம் அவசியமாகும்.

**வேலவன்**

## படத்திற்கு மெருகூட்டுங்கள்- 11



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

படத்திற்கு மெருகூட்டுங்கள்- 11

.................................................

.................................................

.................................................

.................................................

பெயர் : .................................

முகவரி : .................................

.................................

**ஈழநாதம்**
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள்- 10



**S. விஜி,**
**118/8D,சாந்த சோலை,**
**பூந்தோட்டம்,**
**வவுனியா.**

### பரிசுக்குரிய வரிகள்

**சமாதானம் வந்திட்டுது**
**என்று சொல்றாங்களே**
**எங்களுக்கு இன்னும்**
**சாப்பாடு வரவில்லையே வருமா?**

### பாராட்டுக்குரிய வரிகள்

மெல்ல நடக்கும் அவள் கால்கள்
ஏதோ ஒன்றை சொல்ல நினைக்கின்றது
சிந்தையில் உறைந்திருப்பதால் - அவள் விந்தை
விழிகள் கூறுகின்றது - தமிழன் என்ன தலைகுனிந்தவனா?

த.பாஸ்கரன்,
புகையிரதவீதி,
கிளிநொச்சி.

விடியலின் திசையை எதிர்பார்த்து
நடை பயிலும் சிறு தளிரே
கடைக்கண் பார்வைதான் ஏனோ?
கவனம் இது ஏ-9 நெடுஞ்சாலை.

நி. ஆர்த்தியன்,
இல-58,சிவபுரம்,
கிராஞ்சி.

ஊருக்குச் சென்ற போதும்
உயர்பாதுகாப்பு வலயத்தால் - உனக்கு
குடிசைதான் இருப்பிடமானதோ - சிறுமியே
பாதையிலும் மிதிவெடி இருக்கலாம் பார்த்துவை காலை

ராஜ்குமார்,
2004கலை
மு/புதுக்குடியிருப்பு,

மெல்லத் தயங்கித் தடம் பதிக்கும் பிஞ்சே!
அடுத்த சுவட்டினை அவதானமாய் எடுத்துவை
அவன் விதைத்த வெடிமருந்து - உன்
ஓலைக் குடிசையினுள்ளும் தாண்டிருக்கும்.


D.மரியா,
154ம் கட்டை,
கிளிநொச்சி.

சின்ன மலரே எதை நீ சிந்திக்கின்றாய்
வசந்தம் கொலுவிருந்த உன் மனை
சின்னா பின்னமாக்கப்பட்டதனால்
இரவல்க் குடிசையில் வாழும் நிலைமையா?

த.ஜெயரம்யா,
இல.279,சிவசுந்தரம் வீதி,
வட்டக்கச்சி.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை
**அருச்சுனா புகைப்படக் கலையகம்**
புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.
வழங்குகின்றது.

## புத்தகப்பூங்காவில் புதிய மலர்வுகள்



**நூல் :~ அழுவதற்கு நேரமில்லை**
**(சிறுகதைத் தொகுதி)**
**ஆசிரியர் :~ தாமரைச் செல்வி**
**வெளியீடு :~ சுப்ரம் பிரசுராலயம்.**



**நூல் :~ புரிதல்**
**(சிறுகதைத் தொகுதி)**
**ஆசிரியர் :~ தீபா குமரேஷ்**



**நூல் :~ தங்க மாம்பழம்**
**(சிறுவர் கதைகள்)**
**ஆசிரியர் :~ ச. அருளானந்தம்**
**வெளியீடு :~ அருள் வெளியீட்டகம்.**




**நூல் :~ வேர்கள் துளிர்க்கும்**
**(சிறுகதைத் தொகுதி)**
**ஆசிரியர் :~**
**பொ. பூலோகசிங்கம்**
**வெளியீடு :~ கப்டன் வானதி வெளியீட்டகம்..**

மேற்குறிப்பிட்ட நூல்கள் கிடைத்துள்ளன. இவற்றிற்கான விமர்சனங்கள் இனிவரும் வெள்ளிநாத இதழ்களில் வெளி வரும்

நூல் விமர்சனத்திற்காக நூல்களை அனுப்புவோர் இரண்டு பிரதிகளை வெள்ளிநாதத்தின் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.


## 16ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**தாயின் மடியில்** 23 - 09 - 1965



**தாயக மண்ணில்** 26 - 03 - 1987

**வீரவேங்கை மனோ**
**நாகலிங்கம் மனோறஞ்சன்**
**(புங்குடுதீவு)**

ஆண்டுகள் பதினாறு காலம் கடந்தாலும்
உனது இனிய முகம் என்றும் எங்கள்
மனதை விட்டு அகலாது.

**அப்பா,அம்மா,**
**சகோதரர்கள்,**
**உறவினர்கள்.**

**யாழ்ப்பாணம்.** (3044)

# ஈராக்கின் இருண்ட பக்கங்கள்










ஆரம்பித்திருக்கும் ஈராக் மீதான அமெரிக்காவின் தாக்குதல்கள் செய்தி ஊடகங்களுக்கு வாயில் அவலை திணித்தது போல ஆயிற்று. தாக்குதல்கள் பற்றிய செய்திகளை வெளியிடுவதிலும் படங்களை எடுத்துத் தள்ளுவதிலுமாக ஊடகங்கள் போட்டா போட்டியிடுகின்றன. இதுவரைக்கும் இடம் பெற்ற சமர்களின் திட்டங்கள், நிலைமைகள்,படங்களை எவ்வளவுக்கெவ்வளவு வேகமாக வெளியிட முடியுமோ அவ்வளவுக்கு வேகமாக மக்களுக்கு ஏற்படும் இழப்புக்களை முன்னின்று மூடி மறைப்பதில் ஆர்வமாகச் செயற்படுகின்றன. நடைபெற்று வரும் தாக்குதல்கள் எல்லாமே திட்டமிட்ட ஒரு நட்சத்திரப்போர் [STAR WAR] போலவும் இதில் பொதுமக்களுக்கு இழப்புக்கள் ஏற்படாது போன்றதுமான எண்ணங்களை மக்கள் மனங்களில் தோன்ற வைக்கும் நவீன தொழில்நுட்ப ஒலி,ஒளிபரப்புகள் உண்மையான உயிரிழப்புகளை மூடி மறைப்பதில் வெற்றி காண்கின்றன. செய்மதிகளின் வழிகாட்டலில் இயங்கும் சக்தி மிக்க குண்டுகளை வீசும் அதே அமெரிக்கப் படைகளின் கூட்டணிப்படைகள் ஏவும் எவ்வித வழிகாட்டலுமற்ற பல்லாயிரக்கணக்கான ஆட்லறி எறிகணைகள் குடிக்கும் ஈராக்கிய மக்களின் உயிர்கள் எண்ணுக்கணக்கற்றவை. போர் நடைபெறும் பகுதியில் உணவு, இருப்பிட, அத்தியவசியத் தேவைகளுக்கு இடம்பெயர்ந்து அல்லற்படும் மக்கள் படும் வேதனைகளை வெளிக்கொண்டு வருவதில் பார்க்க அழகான அட்டகாசமான போர்க்காட்சிகளை வெளிக்கொணர்வதிலேயே ஊடகங்கள் அக்கறை காட்டுகின்றன. போர் ஆரம்பிக்க முன்னும் பின்னுமாக பெரும் எதிர்ப்புக்களை உலகின் சகல பாகங்களிலும் இருந்து சந்தித்த அமெரிக்காவோ இல்லை போரில் வெற்றி பெறுவேன் என இறுமாப்புடன் இருக்கும் ஈராக்கோ இப்போரினால் ஏற்படும் பின் விளைவுகள் பற்றி சிந்திக்க தவறுகின்றன. இந்த இடத்தில் இந் நெருக்கடிகளையெல்லாம் முன்கொண்டு வரவேண்டிய ஊடகங்களும் பொறுப்பற்ற விதத்தில் செயற்படுவது வருந்தத்தக்கதே. மேலுள்ள படங்களில் யுத்தத்தின் கோர விளைவுகள் சிறு குழந்தையின் அலறலாக, தலையிழந்த முண்டங்களின் உருவமாக, கை உயர்த்தி நிற்கும் ஈராக்கிய மக்களின் அவலமாக தென்படுகின்றன.




1 வது பிறந்த நாள் வாழ்த்து

செல்வன் பிரவீன் சுதன்

தமிழீழம் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த மோகனதாஸ் சுதன் சாந்தி தம்பதிகளின் செல்வப் புதல்வன் பிரவீன் தனது முதலாவது பிறந்தநாளை (25.03.2002) 29.03.2003 அன்று 179 Wright Ave, North York இல் அவரது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார்.

அவரை பாசமுள்ள அப்பா, அம்மா, அப்பாச்சி, அம்மம்மா, பூட்டி, பூட்டப்பா, மாமாமார், மாமிமார், அத்தைமார், சித்தப்பாமார், சித்திமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், அக்காமார், தங்கை, அத்தான்மார், மச்சாள்மார் மற்றும் உறவினர்கள் நண்பர்கள் யாவரும் வல்வை முத்துமாரி அம்மன் துணையுடன் பல்கலையும் பெற்று பல்லாண்டு நீடுழீ காலம் சீரும் சிறப்புடனும் வாழ்க வளர்கவென வாழ்த்துகின்றனர்.

தகவல்
சுதன்-சாந்தி தம்பதிகள்
647-280-2705
416-24[illegible]-9315



ஈழநாதத்தின் வார வெளியீடான

வெள்ளிநாதத்தின்

விளம்பரக் கட்டணம்

| | உட்பக்கம் கறுப்புவெள்ளை | பின்பக்கம் வர்ணம்[கலர்] |
|---|---|---|
| முழுப்பக்கம் | 12000/= | 20000/= |
| அரைப்பக்கம் | 6000/= | 10000/= |
| செ.மீ. கொலம் | 60/= | 100/= |
| ஒப்பந்த அடிப்படையில் | 48/= | 80/= |



பயோட்டினெக்ஸ் - E

பயோட்டின் H உடன் இயற்கையான விட்டமின் E சேர்க்கப்பட்டு தற்போது பயோட்டினெக்ஸ் E என்ற பெயரில் அறிமுகமாகிறது

அழகிய கூந்தலின் ரகசியம்

எது உங்கள் பிரச்சினை ?

இயற்கையான பயோட்டினெக்ஸ் –E தெற்காசிய மக்களுக்கென பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டது சிறப்பம்சமாகும்.

- தலைமயிர் உதிர்கிறதா
- தலைமயிர் வளர்ச்சியின்மையா
- தலைமயிர் நுனி வெடிப்பா
- வலுவிழந்த தலைமயிரா
- வறன்ட சருமமா
- தோலில் சுருக்கம் விழுந்து வயதான தோற்றமா
- சரும நோய்களா
- உடைந்த ஒழுங்கற்ற நகங்களா

இவ்வனைத்து பிரச்சினைகளுக்கும் உடன் நிவாரணி விஞ்ஞான ரீதியில் உறுதிப்படுத்தப்பட்ட

பயோட்டினுடன் விட்டமின் – E யும் சேர்ந்துள்ளதால் சிறந்த பயன் கிடைக்கும்

பாவனை முறை
தினம் 2கப்சியூல்ஸ் 3மாத காலத்திற்கு பாவிக்கவும்

பக்கவிளைவு அற்றது

யாழ் முகவர்:
ஜெகன் பார்மசி, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
☎021 2223191

வன்னி முகவர்:
அகிலன்ஸ் பார்மசி,
[பிள்ளையார் மருந்தகம்]
கிளிநொச்சி.

மற்றும் நாடளாவிய ரீதியில் அனைத்து முன்னணி பார்மசிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்

Marketed By: Arkem Colombo
Tel:470290, 075-344436 Email : arkem@sltnet.lk

BIOTINEX-E







இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு மார்ச் மாதம் 28ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.